
International
Labour
Organization




# கண்ணியமான வேலை தொடர்பான

## இலங்கைக்கான செயற்றிட்டம்
**2018-2022**

# கண்ணியமான வேலை தொடர்பான இலங்கைக்கான செயற்றிட்டம்

2018-2022

# உள்ளடக்கம்

DWCP செயன்முறையும் காலவரிசையும் 5
அறிமுகம் 7
நாட்டின் சூழ்நிலை 8

***நாட்டின் முன்னுரிமை 1:***
நிலைபேறான, உள்ளார்ந்த மற்றும் கண்ணியமான தொழில்வாய்ப்பு உருவாக்கம் 13
**விளைவு 1.1:**
இலங்கைத் தொழிற்படைக்கு மேலும் அதிகமான, சிறந்த தொழில் வாய்ப்புகள் காணப்படும். 14
**விளைவு 1.2:**
தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கும் மக்களுக்கான ஏனைய சந்தை உற்பத்திக் கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்கான தேசிய மூலோபாயம் 17

***நாட்டின் முன்னுரிமை 2:***
தொழிற் சந்தையின் சிறந்த ஆளுகை 18
**விளைவு 2.1:**
நிறுவனமயப்படுத்தப்பட்டதும் செயற்படும் தன்மையுடையதுமான, சமூகக் கலந்துரையாடலுக்கான மற்றும் முத்தரப்பிற்கான பயனுறுதிமிக்க முறைமைகள். 18
**விளைவு 2.2:**
மேலும் வினைத்திறனான வேலைத்தளப் பரிசோதனையுடனான மேலும் பயனுறுதி வாய்ந்த தொழில் நிர்வாக முறைமை 21
**விளைவு 2.3:**
புதிய பரிணாமங்களுக்குட்பட்ட பல்வித வேலை வடிவங்களுக்கு ஏற்ற வகையில் சட்டங்களும் கொள்கைகளும் நவீனமயப்படுத்தப்படல் 23

***நாட்டின் முன்னுரிமை 3:***
எல்லோருக்கும் தொழிலில் உரிமைகள் 24
**விளைவு 3.1:**
சிறுவர் தொழிலையும் அதன் மோசமான வடிவத்தையும் ஒழித்தல் 25
**விளைவு 3.2:**
வெளிநாட்டுக்குச் செல்லும் (திறன் குறைந்த) தொழிலாளர்களை மேம்படுத்தி, அவர்கள் சுரண்டப்படுவத்குரிய (கட்டாய வேலை) பாதகமான தன்மையைக் குறைத்துப் பெறப்படும் தொழிற் சந்தை விளைவுகள் 26
**விளைவு 3.3:**
முறைசாரா வேலையாட்களுக்கு விசேட கவனத்துடன், எல்லா வேலையாட்களுக்குமான மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு 27

***இயலுமான விளைவு 4:***
பாரிய தரவு மற்றும் அறிவின் உருவாக்கம் 28
- **முகாமை செய்தல், திட்டமிடல் கண்காணித்தல் அறிக்கையிடல் மதிப்பிடுதல் ஆகியவற்றின் அமுலாக்கம் ஆகியவற்றுக்கான ஒழுங்குகள். 29**
- அமுலாக்கம், செயற்றிறன், கண்காணிப்பு, மதிப்பீடு ஆகியன தொடர்பான, ILOஇன் தரப்பினரது வகிபாகம் உள்ளிட்ட, ஒழுங்குகள் 30

நிதி வழங்கும் திட்டம் 31
பரிந்துரைத்தல் மற்றும் தொடர்பாடல் மூலோபாயம் 32

***இணைப்பு 2: 33***
***இணைப்பு 3: 46***

# சுருக்கப் பெயர்கள் ACRONYMS

| | | |
|---|---|---|
| AAT | - | நிர்வாக மேன்முறையீட்டு நியாயமன்று |
| BRAWA | - | வேலையாட்களின் வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம் |
| CCA | - | நாட்டிற்கான பொதுவான பகுப்பாய்வு |
| CEACR | - | சமவாயங்களின் பிரயோகம்மற்றும் சிபார்சுகளுக்கான நிபுணர் குழு |
| CFA | - | ஒன்றுகூடும் சுதந்திரத்திற்கான குழு |
| DCS | - | தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் |
| DWCP | - | கண்ணியமான வேலை நிலைமை தொடர்பான நாட்டின் செயற்றிட்டம் |
| EFC | - | இலங்கை தொழில்கொள்வோரது சம்மேளனம்; |
| EPF | - | ஊழியர் சேமலாப நிதியம் |
| ETF | - | ஊழியர் நம்பிக்கை நிதியம் |
| EU | - | ஐரோப்பிய ஒன்றியம் |
| FPRW | - | அடிப்படையான கோட்பாடுகள் மற்றும் வேலைக்கான உரிமைகள் |
| GDP | - | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| GSP | - | பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமைத் திட்டம் |
| ICT | - | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| ICLS | - | தொழில் புள்ளிவிபரவியலாளர்களின் சர்வதேச மகாநாடு |
| ISLS | - | தொழில் புள்ளிவிபரங்கள் பற்றிய சர்வதேச தரங்கள் |
| ITUC | - | சர்வதேச தொழிற்சங்கக் கூட்டமைப்பு |
| ILO | - | சர்வதேச தொழில் தாபனம் |
| LEED | - | உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியூடாக மக்களை வலுவூட்டும் கருத்திட்டம் |
| MLC | - | கடல்சார் தொழில் சமவாயம், 2006 |
| MoLTUR | - | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு |
| MoU | - | புரிந்துணர்வு உடன்படிக்கை |
| NEET | - | வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் இல்லாத இளைஞர் |
| NHREP | - | தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை |
| NLAC | - | தேசிய தொழில் ஆலோசனைச் சபை |
| OSH | - | தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் |
| PAC | - | கருத்திட்ட ஆலோசனைக் குழு |
| PES | - | பொது வேலைவாய்ப்புச் சேவைகள் |
| PIP | - | பொது முதலீட்டுச் செயற்றிட்டம் |
| PSC | - | பொதுச் சேவைகள் ஆணைக்குழு |
| PWDs | - | மாற்றுத் திறன் கொண்ட ஆட்கள் |
| RBSA | - | வழமையான வரவுசெலவுத்திட்ட மிகை ஒதுக்கீடு |
| RPL | - | ஏற்கனவே கற்றுக்கொள்வதை அடையாளங்காணுதல் |
| SDGs | - | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் |
| SLFBE | - | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் |
| SMEs | - | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் |
| MSMEs | - | நடுத்தரத்திலும் சிறிய மற்றும் நுண்ணிய தொழில்முயற்சிகள் |
| SPGI | - | வறுமை இடைவெளிச் சுட்டெண்ணின் வர்க்கம் |
| TIP | - | ஆட்கடத்தல் |
| TVEC | - | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு |
| TVET | - | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விப் பயிற்சி |
| UNSDF | - | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்பு |
| UN | - | ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) |

# இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச தொழில் தாபனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு (அரசாங்கம்), வேலையாட்களதும் தொழில்கொள்வோரதும் கீழே ஒப்பமிட்டுள்ள அமைப்புகள், மற்றும் சர்வதேச தொழில் அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச தொழில் தாபனம் (ILO) (இவர்களனைவரும் தரப்பினர் எனக் குறிப்பிடப்படுவர்) ஆகியோர் இலங்கையில் கண்ணியமான வேலை நிலைமையை முன்னெடுப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் இத்தால் உடன்படுகின்றனர்.

சர்வதேச தொழில் தாபன யாப்பின் உறுப்புரை 40 இன் பிரகாரம், சர்வதேச தொழில் தாபனத்திற்கு தனது உறுப்பு நாடுகளின் ஆட்புல எல்லைக்குள் தனது நோக்கங்களை அடைவதற்கான சலுகைகளும் விலக்களிப்புகளும் அவசியமானவை என்பது நினைவூட்டப்படுவதுடன், கொழும்பில் ஓர் அலுவலகத்தைத் தாபிப்பதற்காக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச தொழில் தாபனத்திற்கும் இடையில் 1988 மார்ச் 21 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரயோகமும் நினைவூட்டப்படுகின்றது.

ஆகவே தற்போது, தரப்பினர் அனைவரும் பின்வருவனவற்றை இத்தால் ஏற்றுக்கொள்கின்றனர்:

1. தரப்பினர், கண்ணியமான வேலை நிலைமை தொடர்பான நாட்டின் செயற்றிட்டத்தை (DWCP) நடைமுறைப்படுத்துவதில் ஒத்துழைப்பதற்கான தமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகின்றனர். DWCP இன் பின்வரும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென ஏற்றுக்கொள்ளப்படுகின்றது:

| | | |
|---|---|---|
| ***நாட்டின் முன்னுரிமை 1*** | - | நிலைபேறான,கண்ணியமான வேலை நிலைமையை உள்ளடக்கிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் |
| ***நாட்டின் முன்னுரிமை 2*** | - | தொழிற் சந்தையின் மேன்மையான ஆளுகை |
| ***நாட்டின் முன்னுரிமை 3*** | - | அனைவருக்கும் வேலை தொடர்பான உரிமைகள் |
| ***சாத்தியமாக்கும் விளைவு 4*** | - | பாரிய அளவிலான தரவுமற்றும் அறிவு உருவாக்கமும் |

2. ILO ஆனது, DWCPஐ நடைமுறைப்படுத்துவதில், தனது நியதிகள், விதிமுறைகள், கட்டளைகள், செயன்முறைகள் மற்றும் நிதி வளங்கள் என்பவற்றின் நிலைமைக்கேற்பவும், எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்,வளங்களைத் திரட்டித் தயார் செய்வதிலும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்குவதிலும் உதவுவதற்கு உடன்படுகின்றது.

3. DWCP தொடர்புடைய செயற்பாடுகளுக்காக, அரசாங்கமானது தனது சொத்துக்கள், நிதி மற்றும் ஆதனங்கள் ILO உடன் பங்குபெறுகின்ற ஏதேனும் அதன் அலுவலர்கள், விசேட முகவர்களுக்கான விடுபாட்டுரிமைகள் மற்றும் சலுகைகள் பற்றிய சமவாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் ILO தொடர்பான அச்சமவாயத்தின் இணைப்பு ஐ ஆகியவற்றைப் பிரயோகிப்பதற்கு உடன்படுகின்றது. மேலும், உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்கள், வேலைகள் மற்றும் சேவைகள் என்பவற்றுக்கு அறவிடப்படத்தக்க பெறுமதி சேர் வரியிலிருந்து ILO இற்கு விலக்களிப்பதற்கும் அரசாங்கம் உடன்படுகிறது.

4. அ) இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது (MoU), தரப்பினருக்கிடையேயான உடன்பாட்டின் அடிப்படையில் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படலாம்.
   ஆ) இந்த MoU இலுள்ள அல்லது இது தொடர்புடைய எந்தவொரு விடயமும் ILO ஆல் ஏற்கனவே அனுபவிக்கப்படும் விலக்களிப்புக்கள் மற்றும் சலுகைகள் ஆகியவற்றை விட்டுக்கொடுப்பதாக அர்த்தங்கொள்ளப்படலாகாது.
   இ) DWCP ஆவணமானது இந்த MoU உடன் இணைக்கப்பட்டுள்ளது. DWCP ஆவணத்திலுள்ள ஏதேனும் நியதிகள் இந்த MoU இலுள்ள நியதிகளுடன், உறுப்புரை 3 இலுள்ள ஏற்பாடுகள் உட்பட, ஒத்துவராதவையாகக் காணப்படுமாயின், MoU இலுள்ள நியதிகளே கருத்திற்கொள்ளப்படும்.
   ஈ) இந்த MoUஇன் மூலப்பிரதி ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுக் கையொப்பமிடப்பட்டுள்ளது. இது வேறொரு மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்படும்போது ஆங்கில மொழியிலுள்ளதே ஆளுகைக்குரியதாகவும் நடைமுறையிலுள்ளதாகவும் இருக்கும்.
   உ) இந்த MoU ஆனது, சம்பந்தப்பட்ட தரப்பினரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளால் கையொப்பமிடப்பட்டதும் நடைமுறைக்கு வரும் என்பதுடன், இந்த விடயத்தில் தரப்பினருக்கிடையிலான எல்லாத் தொடர்பாடல்களையும் விட மேலோங்கியிருக்கும்.

*அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும்*

**எஸ் ஏ என் சரணதிஸ்ஸ**செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு,
கொழும்பு.
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

*தொழில்கொள்வோரது அமைப்புகளுக்காகவும் அவற்றின் சார்பிலும்*

**கனிஷ்க வீரசிங்க**பணிப்பாளர் அதிபதி,இலங்கை தொழில்கொள்வோரது சம்மேளனம்
கொழும்பு.
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

*சர்வதேச தொழில் அலுவலகத்திற்காகவும் அதன் சார்பிலும*

**சிம்றின் சிங்**
சர்வதேச தொழிலாளர் தாபனம்,
இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான பணிப்பாளர்
கொழும்பு.
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

*வேலையாட்களது அமைப்புகளுக்காகவும் அவற்றின் சார்பிலும்*

**லெஸ்லி தேவேந்திர**
பொதுச் செயலாளர், இலங்கைசுதந்திர தொழிலாளர் சங்கம்
கொழும்பு.
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

**பி. ரணவக்க ஆராச்சி**
உப-தலைவர், கொழும்பு
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

**கே. மாரிமுத்து**
உப-தலைவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
கொழும்பு.
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

**டி. டபிள்யு சுபசிங்க**
பொதுச் செயலாளர், இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனம் கொழும்பு
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

**அன்ரன் மார்க்கஸ்**
இணைச் செயலாளர்,சுதந்திர வர்த்தக வலய மற்றும்
பொதுச்சேவைகள் ஊழியர் தொழிற்சங்கம
கொழும்பு
2018 மே மாதம் 16 ஆம் திகதியன்று

# அறிமுகம்

2018-2022 காலப்பகுதிக்கான, கண்ணியமான வேலைக்கான நாட்டின் செயற்றிட்டம் (DWCP) இலங்கைக்கு நான்காவது தலைமுறையினதானது ஆகும். இது, இக்காலப்பகுதிக்குள் முன்னுரிமையளிக்கப்பட்ட தொழில் துறைகளினூடாக கொள்கை விளக்கம், உபாயங்கள் மற்றும் எதிர்பார்க்கும் பெறுபேறு ஆகியவற்றை வெளிக்கொணர்வதுடன், இக்காலப்பகுதி எவரையுமே தவறவிடாது ‘அனைவருக்குமான கண்ணியமான வேலை’ என்பதற்குப் பங்களிப்புச் செய்யும்.

DWCP ஆனது, 2017-2020 காலப்பகுதிக்கான பொது முதலீட்டுச் செயற்றிட்டம் (PIP) மற்றும் ‘தூரநோக்கு 2025’ (Vision-2025), தேசிய அபிவிருத்திக் கட்டமைப்பு ஆகிய இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுடனும் முன்னுரிமைகளுடனும் சமாந்தரமாகச் செயற்படும். ‘தூரநோக்கு 2025’ ஆனது, வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், தற்போதைய மற்றும் வளர்ந்துவரும் சமூக-பொருளாதாரக் கேள்விகளைச் சமாளிப்பதற்காக தொழிலாளர்களைப்புதுப்பித்த திறனுடையவர்களாக்குதலுக்கும், இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் விசேட கவனத்துடன் முன்னுரிமையளிக்கிறது. நாட்டிலுள்ள பிரதேசங்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கவனத்திற்கொண்டு, திட்டமிட்ட பிரதேச பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளும் கொள்கைகளில் குறித்துக் காட்டப்படுகின்றன. அரசினால் அமைக்கப்பட்டுள்ள இவ்வாறான அகன்ற கொள்கைகளுக்கு மேலதிகமாக, DWCPயும், தேசிய வேலைவாய்ப்புக் கொள்கை, சிறுவர் தொழில் பற்றிய கொள்கை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கொள்கை, திறன் விருத்தி தொடர்பான கொள்கை, கல்விக் கொள்கை போன்ற பிராந்தியக் கொள்கைகளுடனும் தற்போதுள்ள தொழிற்சட்டங்களுடனும் சமாந்தரமாகச் செயற்படும்.

DWCP ஆனது, ஆகஸ்ட் 2017 இல் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அரசாங்கத்திற்குமிடையில் இலங்கையில் கைச்சாத்திடப்பட்டதும், 2018-2022 என்னும் அதே காலப்பகுதிக்கானதுமான ஐ.நா. வின் நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்பிற்கும் (UNSDF) பங்களிப்புச் செய்கின்றது. இலங்கை அரசாங்கமானது, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் (SDGs) உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு குறிக்கோள்களை அடைவதற்காகத் தொழிற்படுவதற்குக் கடப்பாடுடையதாக இருப்பதுடன், அது பற்றிய முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடுவதற்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. ILO ஆனது, SDGs ஐ அமுல்படுத்திக் கண்காணிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவுவதில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது – குறிப்பாக, இலக்கு 8 (கண்ணியமான வேலை நிலைமையும் பொருளாதார வளர்ச்சியும்) என்பதை விடவும் இலக்கு 1 (வறுமையைக் குறைத்தல்) இலக்கு 5 (பால் சமத்துவம்) இலக்கு 10 (சமத்துவமின்மையைக் குறைத்தல்) மற்றும் இலக்கு 16 (சமாதானம், நீதி மற்றும் பலமான நிறுவனங்கள்) ஆகியவையும் உள்ளடங்கும்.

DWCP ஆனது உருவாக்கப்படுவதற்காக, ILO இன் முத்தரப்புப் பங்காளிகளுடனும் பங்காளிகளுக்கிடையிலும் பல்வேறு சுற்றுக்களாக ஆலோசனை நடாத்தப்பட்டது. உரிய வேறு அமைச்சுக்கள், உள்ளூராட்சி அதிகாரிகள், இளைஞர்கள், பெண்களது கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் போன்றோருடனும் ஆலோசனை நடாத்தப்பட்டதுடன், ஐ.நா. அமைப்பின் அபிவிருத்திப் பங்குதாரர்களும் DWCPஇன் முன்னுரிமைகளை அடையாளங்காணச் செய்யப்பட்டனர். நாட்டின் ஆறு பிரதேசங்களைச் சேர்ந்த பங்குதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பலரும் அணுகப்பட்டு, அவர்களிடமிருந்தும் இதை உருவாக்குவதில் பங்களிப்புபெறப்பட்டது.

DWCP ஆனது, தொழில்கொள்வோர், வேலையாட்கள் மற்றும் அரசாங்கம் என்னும் ILO இன் பங்குதாரர்களது உடன்பாட்டைக் கொண்டுள்ளது. DWCP 2018-2022 வரைபைத் தயாரிக்கும்போது இறுதியாக நடைமுறையிலிருந்த DWCP 2013-2017இன் மீளாய்வு, அதிலிருந்து இன்னும் முடிக்கப்படாத விடயங்கள், நாட்டினுள்ளும் உலக சூழ்நிலையுடன் அதிகரித்த வகையில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டும் காணப்படும் அதேவேளை இலங்கையின் எல்லாத் தொழில்களுடனும் சம்பந்தப்பட்ட புதிதாக உருவாகும் பிரச்சினைகள் ஆகியன கவனத்திற் கொள்ளப்பட்டன.

DWCP இற்கான பங்குதாரர்களால் முன்னுரிமையளிக்கப்பட்ட விடயங்களாவன, நாட்டின் மூன்று முதன்மை விடயங்களைக் கொண்டுள்ளன. அந்த முதன்மை விடயங்களாவன: நிலைபேறான தன்மையை உருவாக்குதல், கண்ணியமான வேலை நிலைமையை உள்ளடக்கிய வேலைவாய்ப்பு, தொழிற் சந்தையின் மேன்மையான ஆளுகை, அனைவருக்கும் வேலை தொடர்பான உரிமைகள். நாட்டின் இந்த மூன்று முதன்மை விடயங்களோடு நாட்டின் எட்டு செயற்றிட்டப் பலன்களும் சேரும். பாரிய அளவிலான தரவு உருவாக்கமும் அறிவுப் பெருக்கமும் இந்த மூன்று முதன்மை விடயங்கள் மற்றும் எட்டுசெயற்றிட்டப் பலன்கள் ஆகிய சாதனைகளைச் சாத்தியமாக்கும் வெளிப்பாடுகளாக அமையும்.

# நாட்டின் சூழ்நிலை

இந்து சமுத்திரத்தில் காணப்படுகின்ற தீவு நாடாகிய இலங்கை, உயர் மத்திய வருமானமீட்டும் நாடொன்றாக மாறுவதற்குப் எத்தனிக்கிறது. ஏறக்குறைய 21.4 மில்லியன் மக்கள் வாழுகின்ற தீவில், பெரும்பான்மையினராக சிங்களவர்களும் அவர்களைத் தொடர்ந்து தமிழர், முஸ்லீம்கள், மற்றும் ஏனைய இனச் சிறுபான்மையினரும் உள்ளனர். இலங்கை சனத்தொகையில் தெற்காசியாவிலேயே வயதானோரின் அதியுயர்ந்த விகிதாசாரத்தைக் கொண்டிருப்பதுடன், இந்த மக்கள் தொகை தொடர்பான மாற்றம், வெளிவரும் சவால்களுக்கு முகங்கொடுப்பதை இலகுவாக்குகிறது. மேலும் இது, அபிவிருத்தி வெற்றியின் குறிகாட்டிகளில் ஒன்றாக - மக்கள் ஒப்பீட்டளவில் சிறப்பான மற்றும் நீண்ட வாழ்க்கையைக் கொண்டிருக்கிறார்கள் - தெரிவிக்கப்பட முடியும்.

இலங்கையின் பொருளாதாரமானது தொடர்ந்து வளர்ந்து வருவதுடன், பலமான சமூக - பொருளாதார குறிகாட்டிகளுடன் தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. 2017 இல் பொருளாதார வளர்ச்சி ஒரு தளர்வான வேகத்தைக் கொண்டிருந்த போதிலும், (GDPஆல் அளக்கப்படும்) பொருளாதாரம், சில பகுதிகளில் பாதிப்பான காலநிலை நிலவியபோதிலும், உண்மையில் 3.1%என்ற வீதத்தில் வளர்ச்சியடைந்தது. தலாவீத மொத்த உள்ளூர் உற்பத்தி (per capita GDP) அமெரிக்க டொலர்கள் 4,065 இற்கு ஏற்றம் கண்டது. 2017 இல் GDPஇன் 56% ஆக இருந்த சேவைத் துறையானது, GDP இற்கு ஆகக்கூடிய பங்களிப்பைச் செய்தது. இது, ஆக 6.9% ஐப் பங்களித்த விவசாயத்துறைக்கு முற்றிலும் எதிரானதாக இருந்ததாயினும், விவசாயத் துறைதொழில் பலத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் (26.1%) கொண்டிருந்தது. இலங்கையின் விவாசாய-அடித்தளப் பொருளாதாரத்திற்கு வரலாற்று ரீதியாக மிகப்பெரும் பங்களிப்பாளர்களாக இருந்த தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில்கள், சில பகுதிகளின் எதிர்த்தன்மையானதும் நிலையற்றதுமான காலநிலை காரணமாக, தேய்ந்து போவனவாகத் தோற்றமளிக்கின்றன என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

2009 இல், இலங்கை, பொருளாதார அரசியல் மற்றும் சமூக தகர்ப்புகளைத் தோற்றுவித்த, மூன்று தசாப்த உள்ளூர் முரண்பாடுகளிலிருந்து மீண்டுள்ளது. இலங்கை நிலையான சமாதானம், சமரசம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கி நகர்கின்றது. இன்னும், முரண்பாடுகளின் பரம்பரைத் தொடர்ச்சியானது, பிராந்தியங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு, வாழ்வாதார விடயங்களில் கிராமியச் சமூகங்கள் ஒதுக்கப்படுதல் போன்ற வகைகளில் காணப்படத் தக்கதாயுள்ளது. இவற்றுடன் தொடர்ச்சியான வரட்சி அல்லது வெள்ளம் போன்ற மெதுவான மற்றும் சடுதியான சூழல் அனர்த்தங்களும் கலந்து பங்களிக்கின்றன.

இலங்கை, கடந்த இரு தசாப்தங்களில் வறுமைக்கான தலைச் சுட்டெண்ணில், வரவேற்கத்தக்தான கீழ்நோக்கிய போக்கைக் காட்டியுள்ளதுடன், அது 2017 இல் 4.1% ஆக இருந்தது. எவ்வாறாயினும், பெருந்தோட்ட மற்றும் கிராமியப் பிரிவுகளில் வாழ்க்கையிலும் தொழிலிலும் வறுமைக்குட்பட்டோரது அளவுக்கு மீறிய விகிதம் உள்ளதுடன், இது நாட்டின் மொத்த வறுமையானவர்களில் 82.2% ஆக உள்ளது. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முறையே 7.7% மற்றும் 7.3% என்ற, ஒப்பீட்டளவில் உயர்ந்த மட்ட வறுமைக்கான தலைச் சுட்டெண்களைக் கொண்டுள்ளன. அதி தீவிரமான வறுமையைச் சுட்டிக் காட்டுகின்ற, வறுமை இடைவெளிச் சுட்டெண்ணின் வர்க்கமானது (SPGI), குறிப்பாக முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 0.5% என்ற அளவில் தீவிரமாக உள்ளது. நாட்டிலுள்ள பொருளாதார வளர்ச்சியானது புவியியல் ரீதியாகவே செறிவடைந்துள்ளது. குருணாகலை, களுத்துறை, கண்டி, மேற்கு மாகாணத்தின் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் உண்மையான தனிநபர்ச் செலவின் 'கினி' குணகமானது, தேசியச் சராசரியிலும் பார்க்க அதிகமாக இருப்பது ,வாழ்க்கைத் தரத்தில் இடம் சம்பந்தப்பட்ட ஏற்றத்தாழ்வுகளையும், மறைக்கப்பட்ட வறுமையான சிறிய இடங்களையும் குறிக்கிறது.

## வேலைவாய்ப்பு, ஆளுகை, வேலையிலுள்ள உரிமைகள் ஆகியவற்றில் தொழிற்சந்தையில் காணப்படும் சவால்கள்

இலங்கையின் தொழிற் படையின் அளவும், வேலையிலுள்ள மக்களது உண்மையான எண்ணிக்கையும், பல வருடங்களாக அதிகரித்து வந்தாலும், 2017 இன் வேலையற்றோர் வீதம் 4.2% என்பதோடு, தொழிற்படையின் பங்குபற்றல் வீதமானது 54.1% ஆகவே உள்ளது. கிராமியப் பெருளாதாரத்திலும், பெருந்தோட்டத்துறை, கட்டிட நிர்மாணம், விருந்தோம்பல் துறை ஆகியவற்றிலும் தொழிலாளர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. 2015 இல் செய்யபட்ட ஒரு ILO ஆய்வானது, வளர்ந்துவரும் துறைகளெனக் கருதப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், கட்டிட நிர்மாணம், இலகு பொறியில் ஆகிய நான்கு துறைகளில் தொழிற்படையினரது திறன் பற்றாக்குறையையும், தற்போதுள்ள பொருத்தமற்ற திறன்களின் சவாலையும் வெளிப்படுத்தியது. துறைசார் வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரை, சேவைத் துறையானது நாட்டின் கணிசமான வேலைவாய்ப்புகளை

1 UNFPA (2017), இலங்கையின் வயதான மக்கள் தொகை - வெளிவரும் சவால்கள், தேவைகளையும் கொள்கையையும் தொடர்புபடுத்துதல்.
2 இலங்கை மத்திய வங்கி (2018), வருடாந்த அறிக்கை 2017, பக். 3-4.
3 இலங்கை மத்திய வங்கி (2018), வருடாந்த அறிக்கை 2017, பக். 28.
4 இலங்கை மத்திய வங்கி - 2016 வருடாந்த அறிக்கை பக். 5.
5 இலங்கை மத்திய வங்கி (2018), வருடாந்த அறிக்கை 2017, பக். 111.
6 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு (2016), வறுமைச் சுட்டிகள் (http://www.statistics.gov.lk/page.asp?page=Povertyhttp://www.statistics.gov.lk/page.asp?page=Poverty)
7 இலங்கை மத்திய வங்கி (2018), வருடாந்த அறிக்கை 2017, பக். 134.
8 ILO (2015) இலங்கையின் நான்கு கைத்தொழில் துறைகளில் திறன்களின் பற்றாக்குறை.
9 இலங்கை மத்திய வங்கி (2018), வருடாந்த அறிக்கை 2017, பக். 133.
10 இலங்கைத் தொழிற்பல அளவீடு 2016.
11 உலக பொருளாதார மன்றம் (2017), பால்ரீதியான இடைவெளி பற்றிய பூகோள அறிக்கை 2017.
12 பொருளாதாரப் பங்களிப்பும் சந்தர்ப்பமும், கல்வி அடைவு, சுகாதாரம், அரசியலில் ஈடுபடுதல் ஆகியவற்றின், 0 (சமத்துவமின்மை) இலிருந்து 1 (சமத்துவம்) வரையிலான ஒரு அளவுகோல்.

உருவாக்கும் துறையாக உள்ளதுடன், அதில் நாட்டின் வேலைப்படையின் 45.5% ஆனோர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். 2017 இல், கைத்தொழில் துறையானது மொத்த வேலைவாய்ப்பில் 28.4% உடனும், இடம்பெயர் விவசாயத்துறையானது 26.1% உடன் தொழில்-கொள்வோரது இரண்டாவது பெரிய துறையாகவும் காணப்பட்டன. இந்தப் போக்குகளானவை, கடந்த சில வருடங்களாக ஒப்பீட்டளவில் மாறாதவையாகக் காணப்பட்டதுடன், சேவைத்துறையிலான வேலைவாய்ப்புகள் பெருகிக் கொண்டும், விவசாயத் துறையிலான வேலைவாய்ப்புகள் சுருங்கிக் கொண்டும் உள்ளன.

பால்ரீதியான இடைவெளி பற்றிய பூகோள அறிக்கை 2017 இலங்கையை 144 நாடுகளுள் 109 ஆவதாகத் தரப்படுத்தியுள்ளதுடன், வழங்கப்பட்ட பால் சமத்துவ மதிப்பெண் 0.67 ஆகும். தொழிற்படைக்கான பெண்களது பங்களிப்பு, சமத்துவமான வேதனம், பெண்களது சராசரி வருமானம், முகாமைத்துவ நிலைகளில் பெண்களது பிரதிநிதித்துவம் ஆகியவை தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட வேண்டிய குறித்த விடயங்கள் பற்றி இவ்வறிக்கை எடுத்துக் கூறுகின்றது. உண்மையில், தொழிற்படைக்கான பெண்களது பங்களிப்பு வீதமானது ஆண்களது 74.5% உடன் ஒப்பிடுகையில், பெண்களது உயர் கல்வியறிவு மற்றும் கல்வித் தகைமைகள் என்பன இருந்தும், ஆச்சரியப்படத்தக்க வகையில் 36.6% என குறைவாகவே உள்ளது.

இளைஞரது (20 - 24 வயதுகளுக்கு இடைப்பட்டோர்) வேலைவாய்ப்பின்மையானது, 2016 இல் 21.6% ஆகக் காணப்பட்டதுடன், உலக சராசரியான 13% ஐப்பார்க்கிலும் குறிப்பிடத்தக்க அளவு உயர்வானது ஆகும். இளைஞரது வேலைவாய்ப்பின்மையானது குறிப்பாக, தெற்கு (30.3%), சப்ரகமுவ (30.0%), ஊவா (24.8%) மாகாணங்களில் உயர்வானதாகும். மேலும், வேலைவாய்ப்பின்மையானது க.பொ.த (உ.த.) அல்லது அதற்கு மேல் கற்ற இளைஞரிடையே அதியுயர்வானதாக, 32.5% ஆகக் காணப்படுகிறது. 'வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் இல்லாத' (NEET) இளைஞரது விகிதாசாரமானது 26.1% ஆக உள்ளது. இது, பாடசாலையிலிருந்து - வேலைக்கு என்பதிலுள்ள பற்றாக்குறையை, - தொழிற்பயிற்சி மற்றும் ஏனைய வேலைவாய்ப்புச் சேவைகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் பாடசாலையை விட்டு விலகும் இளைஞர் தொழிற் சந்தைக்கு உகந்த வகையில் தயார் செய்யப்படுவதில்லை என்பது உட்பட குறித்துக் காட்டுகிறது.

2012இல் உள்ளவாறு, ஆக 442,138 பேர் செயற்பாட்டு இயலாமைகளுடன் தொழில்களில் உள்ளனர். இந்த எண்ணிக்கையானது ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. 10,953 பேர் இயலாமைகளுடனும் பொருளாதார ரீதியாக செயற்படு நிலையிலிருந்தாலும் வேலைவாய்ப்பின்றியும், அதேவேளை 1.1 மில்லியன் பேருக்கும் அதிகமானோர் இயலாமைகளுடனும் பொருளாதார ரீதியாக செயற்பட முடியாத நிலைமையிலிருக்கின்றனர்.

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகள் (SME)துறையானது, நாட்டின் GDP இல் 52% ஐக் கொண்டுள்ளதுடன், இலங்கையின் வேலைவாய்ப்பிற்கு 45% பங்களிப்பையும் வழங்குகிறது. அவற்றின் ஆபத்தான மற்றும் பாதுகாப்பற்ற வேலை நிலைகள், வெளித் தாக்கங்களுக்கு உட்படக்கூடிய உயர்ந்து செல்லும் பாதிப்பான நிலைமை ஆகியவற்றின் மீது தொடர்ந்தும் கவனஞ் செலுத்தப்படுகிறது. இந்த முயற்சியாண்மைகள் தொழில் பரிசோதனைகள், சமூகப் பாதுகாப்புச் சேவைகளை அணுகுவதற்கு அவர்களது வேலையாட்களுக்கு உள்ள இயலாமையுடன் சர்வதேச தொழில் தரங்களைக் கடைப்பிடிப்பது பற்றிய அவர்களது அறிவு ஆகியவறின் காரணமாக கவனிக்கப்படாமலேயே விடப்படுகின்றன. அனர்த்தத்திற்குப் பின்னரான தேவைகளின் சமீபத்தைய ஒரு மதிப்பீடு (2016), இந்த SMEs ஆனவை, குறிப்பாக அனர்த்தங்களால் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவை என்பதுடன், தமது பெறுமதிச் சங்கிலித்தொடர் அறுந்துபோகும் தன்மையுடன் கூடிய, மத்திய மற்றும் நீண்ட கால தாக்கங்களுக்கு உட்படக் கூடியவை எனத் தெரிவிக்கிறது. உண்மையில்,2016 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால், 11 மாவட்டங்களைச் சேர்ந்த 504 SME நிறுவனங்கள் அடைந்த இழப்புகளும் சேதங்களும் ஏறக்குறைய 657 மில்லியன் இலங்கை ரூபா (2017 இன் அந்நிய நாணயமாற்று வீதப்படி ஏறக்குறை 4.38 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஆகும்.

இலங்கையில் முறைசாராப் பொருளாதாரத்தின் அளவு மிகவும் பரந்ததாகும். 2016 இல், முறைசாராப் பொருளாதாரமானது மொத்த வேலைவாய்ப்பிற்கு 60.2% ஐ பங்களிப்பு செய்துள்ளது. முறைசாராப் பொருளாதாரத்தில் வேலை செய்பவர்களில் பெரும்பாலானோர் (49.6%) தமது சொந்தத் தொழிலை செய்வோராவர். அவ்வாறே மொத்த விவசாயத்தில் வேலைவாய்ப்புப் பெற்றிருப்பவர்களில் 87.5% ஆனோர் முறைசாராப் பொருளாதாரத்தில் இருக்கின்றனர். "முறைசாராப் பொருளாதாரத்திலிருந்து முறைசார்ந்த பொருளாதாரத்திற்கான மாற்றம்' மீதான ILO பரிந்துரைகள் 204 இன் பிரகாரம், பிரதானமான சவால், முறைசாராத் துறையை முறைசார்ந்த தாக்குவது மற்றும் முறைசார்ந்த துறையில் கண்ணியமாக வேலைகளை உருவாக்குவதனை ஊக்குவிப்பது என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இது குறிப்பாக முறைசாராத் துறையில் சமூகப் பாதுகாப்பு முறைகளை அணுகுதல் மற்றும் வேலையாட்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படாமை என்பவற்றைக் கூறமுடியும். மேலும், சமீபத்திய சூழல் அனர்த்தங்களின் (2016 இலும் 2017 இலும் நாட்டைத் தாக்கிய வெள்ளப்பெருக்கும் மண்சரிவும்) பெறுபேறாக முறைசாராத் துறையிலான பாரிய சேதங்களும் அழிவுகளும், வாழ்வாதாரங்களின் மீதும் வேலைவாய்ப்புகளின் மீதும் நீண்டகால பாரிய தாக்கங்களாக ஏற்பட்டன. 2017 இல் மண் சரிவினால் ஏற்பட்ட சேதங்களும் அழிவுகளும் இலங்கை ரூபாவில் 70 பில்லியன்களை, அல்லது அமெரிக்க டொலரில் ஏறக்குறைய 470 மில்லியன்களை பெறுமதியாகக் கொண்டிருந்தன. மீளமைக்கும் தேவைகள் இலங்கை ரூபாவில் 118 பில்லியன்கள் (சுமாராக 790 மில்லியன்கள் அமெரிக்க டொலர்) என மதிப்பிடப்பட்டன.

மக்கள் தொகைக் கட்டமைப்பு, காலநிலை மாற்றம், உலக

13 இலங்கை மத்திய வங்கி (2018)இ வருடாந்த அறிக்கை 2017இ பக். 132.
14 இலங்கைத் தொழிற்பல அளவீடு 2016.
15 தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், தொகைமதிப்பு 2012.
16 கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு (2017)இ சிறிய நடுத்தர முயற்சியாண்மை (SME) அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு.
17 ஐடுழு (2014)இஇலங்கைக்கான அறிக்கை: தொழிற் சட்டங்கள், நுண்ணிய மற்றும் சிறிய முயற்சியாண்மைகளின் செயற்படும் சூழலும் வளர்ச்சியும்.
18 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சும், அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் (2016)இஇலங்கையின் அனர்த்தங்களுக்குப் பின்னரான தேவைகளின் மதிப்பீடு: வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளும் - மே 2016.
19 இலங்கைத் தொழிற்பல அளவீடு2016.
20 மேலும் தகவல்களுக்கு:http://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:R204.
21 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சும், அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் (2016)இ இலங்கையின் அனர்த்தங்களுக்குப் பின்னரான தேவைகளின் மதிப்பீடு:

மட்ட தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியன தொடர்பில் அவதானிக்கப்படும் விரைவான மாற்றங்களாவன பரிந்துரைப்பது, இலங்கைத் தொழிற் சந்தையானது காலத்துக்கு உகந்த அதேவேளை நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்த வேண்டி இருக்கிறது. இந்த மாற்றங்கள் சவால்களுடன் சேர்ந்தவையாக இருக்கும் அதேவேளை, அவை புதிய எதிர்கால தொழிற் சந்தர்ப்பங்களையும் ஒரேயடியாகத் திறந்து விட்டுள்ளன. ஆயினும், வேலைவாய்ப்புக்கான தாக்கங்கள், திறன்கள், ஏனைய உரிய கொள்கைகள் ஆகியன பெரும்பாலும் தெரியாதவையாகவே உள்ளன என்பதால், கொள்கை வகுப்போர், தொழில்கொள்வோர், வேலையாட்கள் ஆகியோரிடையே மேலும் அறிவூட்டலையும் திறன் விருத்தியையும் அவை தொடர்பாக உருவாக்க வேண்டியுள்ளன.

தொழிற் சந்தையின் தேவைகளும், உலக மற்றும் உள்ளூர் மட்டத்திலான ஆளுகைக் கட்டமைப்பு மாற்றங்களும் சட்டச் சீர்திருத்தங்களுக்கும் மற்றும் கொள்கைச் சீர்திருத்தங்களுக்கும் இலங்கையைத் தூண்டியுள்ளன. இதுவரை இலங்கை எட்டு அடிப்படையான சமவாயங்கள் உள்ளிட்ட 43 சமவாயங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. முன்னைய DWCP (2013-2017) இன்போது, இலங்கை 1964 இன் (இல. 122) வேலைவாய்ப்புக் கொள்கைச் சமவாயம், 2006 இன் (MLC, 2006) கடல்சார் தொழில் சமவாயம், 2003 இன் (இல. 185) மாலுமிகளின் அடையாள ஆவணங்கள் பற்றிய சமவாயம் (திருத்தப்பட்டது) ஆகிய மூன்று சமவாயங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. 2017 இல், ஐரோப்பிய ஒன்றியம் (EU) இலங்கைக்கு அதன் பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமைத் திட்டத்தின் (GSP+ என அறியப்படுவது) கீழ் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான இறக்குமதி வரிகளைக் கணிசமாகக் குறைத்தலுக்கான, குறிப்பிடத்தக்க முன்னுரிமை கொண்ட வர்த்தகச் சலுகைகளை வழங்கியது. அதற்குப் பிரதியுபகாரமாக, இலங்கை மனித உரிமைகள், தொழில் நிபந்தனைகள், நிலைபேறான சுற்றுச்சூழல், நல்லாட்சி ஆகியவற்றிற்கான சர்வதேச சமவாயங்கள் 27 ஐ ஏற்றுக்கொண்டு அமுல்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இந்த அமுல்படுத்தலின் மீதான முன்னேற்றங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை உன்னிப்பாக கண்காணிக்கப்படுகிறது.

இலங்கை தேசிய மட்டத்தில் நிலையானதொரு முத்தரப்புப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. தொழிற் சந்தையின் விரைவான மாற்றங்களுடனும், வளர்ந்துவரும் உலகமயமாக்கல் சூழலில் மாற்றமடையும் சமூக - பொருளாதார இயங்கு நிலைகளாலும், சமூகக் கலந்துரையாடலானது மேலும் முக்கிமான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. எனவே, மாறிக்கொண்டிருக்கும் தொழிலுலகத்தில் 'முத்தரப்பு' பற்றிய எல்லாத் தரப்பாரினதும் திறன் விருத்தி,தொழில் மற்றும் பொருளாதாரக் கொள்ளைகளை முன்செலுத்திச் செல்லும் முன்னோடியான முத்தரப்பு மேடை என்ற வகையில் தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் மீளெழுச்சி, செயற்றிறன் மிக்க பிணக்குத் தீர்வுக்கான இருதரப்புப் (தொழில்கொள்வோரும் வேலையாட்களும்) பொறிமுறையைத் தாபித்தல் ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. செயற்றிறன் மிக்க தொழிற் பரிசோதனைகள், சம்பளங்களைத் தீர்மானித்தல், தொழிற் பிணக்குகளை முகாமைத்துவம் செய்தல் ஆகியன அக்கறைக்குரிய பிரதான பிரச்சினைகளுள் அடங்குகின்றன. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு (MoLTUR) தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஆணை வழங்கப்பட்ட அமைச்சாக உள்ளதுடன்,தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும், இடப்பெயர்வு ஆளுகை போன்ற விடயப்பரப்புகளில் ஏனைய அமைச்சுகள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் ஒத்துழைக்கின்றது. இலங்கையின் அரசியலமைப்பு (1978), தொழிற்சங்கக் கட்டளைச்சட்டம் (1935) ஆகியன தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றில் சேர்வதற்கும் தனிநபர்களுக்கான உரிமைகளை வழங்கியுள்ளன. பெரும்பான்மையானவை அரசாங்கத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 2100 இற்கும் அதிகமான தொழிற் சங்கங்கள் உள்ளன. இலங்கை தொழில் கொள்வோரது சம்மேளனம் (EFC) மற்றும் வேலையாட்களது அமைப்புக்கள் தமது திறன்களை விருத்தி செய்வதுடன், தொழில் கொள்வோர்-தொழிலாளர் கலந்துரையாடல் உள்ளிட்ட தொழில் தரங்களைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதிலும் கவனஞ் செலுத்துகின்றன. ILO சமவாயங்களது சிறந்த பிரயோகத்திற்கு MoLTURஉடன் சேர்ந்து தொழிலாளரதும் தொழில்கொள்வோரதும் முன்முயற்சியும் இன்றியமையாதது.

இலங்கை, ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், முன்னேற்றகரமான ஒரு குறித்த எண்ணிக்கையிலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைக் கொண்டுள்ளது. ஆயினும், அவற்றின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலுள்ளது. எல்லோரையுமே உள்ளடக்காததாலும், அவற்றை அணுகுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாலும் பெண்கள், வயதானோர், இயலாமையுள்ள ஆட்கள், முறைசாராத் துறையிலுள்ளோர் போன்றவர்கள் பெரும்பாலும் அவற்றிலிருந்து விடுபட்டுள்ளனர். இதைப்போன்ற ஏனைய குறைபாடுகளும் உள்ளன: உதாரணமாக, தொழில்சார் காயங்களுக்கும் மரணங்களுக்குமான தற்போது காணப்படும் நட்டஈட்டு நன்மைகள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஆகவும் குறைந்த அளவினதாக உள்ளதுடன், ILO ஆல் சிபார்சு செய்யப்பட்ட தொகையின் 10% இற்குச் குறைவானதாகவே உள்ளது. இவ்வகையான குறைபாடுகள் தெளிவானதாக இருப்பினும், இவற்றை நீக்குவதால் ஏற்படும் மேலதிக செலவினங்களை யார் ஏற்பது என்ற கலந்துரையாடலில் முத்தரப்பினராலும் இன்னும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

2017 இல், ஏறக்குறைய 212,162 இலங்கையர் வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இது முன்னைய வருட எண்ணிக்கையான 242,816 இலும் பார்க்கக் குறைவானதாயினும், அவர்களால் அனுப்பப்படும் பணம் மிகக் குறைந்த அளவிலேயே குறைந்து அது அமெரிக்க டொலர் 7,461 மில்லியன்களாக இருந்தது. பெரும்பான்மையினரான வெளிநாட்டுத் தொழிலாளர் மத்திய கிழக்கு நாடுகளிலேயே இருப்பதால், அனுப்பப்படும் பணத்தில் 54% இந்தப் பிராந்தியத்திலிருந்தே வருகின்றது. வெளிநாட்டுத் தொழிலாளர் பற்றிய கொள்கையொன்று, அவர்களது ஆட்சேர்ப்பு, சேவைக் காலம், திரும்பி வருதல், அவர்களை மீண்டும் சமூகத்தில் இணைத்துக் கொள்ளுதல் ஆகிய விடயங்களைக் கொண்டு

வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளும் - மே 2016. http://www.lk.undp.org/content/srilanka/en/home/library/environment_energy/SriLanka-Rapid-Post-Disaster-Needs-Assessment-2017.html.
22 மேலும் தகவல்களுக்கு:http://ec.europa.eu/trade/policy/countries-and-regions/countries/sri-lanka/.
23 ILO (2016),சமூகப் பாதுகாப்பின் பரந்த குறிக்கோள்களுக்கான சூழலில் இலங்கையின் சமூகப் பாதுகாப்புத்திட்டங்கள் பற்றிய ஆய்வு..
24 ILO, (2016),இலங்கையில் தொழில்சார் காயங்களுக்கான நட்டஈட்டு ஏற்பாடுகள் பற்றிய ஓர் ஆழமான மதிப்பீடு
25 மேற்குறித்தது.
26 இலங்கை மத்திய வங்கி (2018), வருடாந்த அறிக்கை 2017, பக். 166.
27 இலங்கை மத்திய வங்கி (2016), இலங்கையின் சமூக-பொருளாதாரத் தரவுகள் 2016.
28 சிறுவர் செயற்பாட்டு அளவீடு (2016), தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்இ 2017.
29 ஐக்கிய நாடுகளின் நாட்டுக்குரிய குழுஇ (2016). நாட்டிற்குரிய பொதுவான ஆய்வு, இலங்கை2016.
30 UNSDGs பற்றிய மேலும் தகவல்களுக்கு: https://sustainabledevelopment.un.org/?menu=1300

நடைமுறையிலுள்ளது. ஆயினும், அதனை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் காணப்படுகின்றன, விசேடமாக ஆட்சேர்ப்பு கட்டத்தில் தொடர்கின்றது. நாட்டைவிட்டு வெளியேறும் தொழிலாளர்களை அதிகம் கொண்டுள்ள நாடு என்ற வகையில், இது குறிப்பாக இலங்கைக்கே பொருத்தமாயுள்ளது, வெளிச் செல்லும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான அளவுக்கதிகமான ஆட்சேர்ப்புச் செலவுகளும் கட்டணங்களும் அவர்களைக் கடன்-கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதையும், சுரண்டும் தன்மையான தொழில் நடைமுறைகளில் ஈடுபட வைக்கின்றன, தொழில் இடப்பெயர்வு, கட்டாய உழைப்பு, மனிதக் கடத்தல் செயற்பாடு ஆகியவற்றிடையே ஒரு விடுவித்துக்கொள்ள முடியாத தொடர்பை இது உருவாக்கியிருப்பதைக் காணலாம்.

2017 இல், இலங்கை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆட்கடத்தல் (TIP) தொடர்பான அறிக்கையில், "2 ஆம் அடுக்குப் பட்டியல்" (Tier 2 List) இல் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் "2 ஆம் அடுக்குக் கவனிப்புப் பட்டியல்" (Tier 2 WatchList) இல் இடம்பெற்றிருந்தது. கவனிப்புப் பட்டியலிலிருந்து மேல்நோக்கிய இந்த வரவேற்கத்தக்க நிலைமைக்கு மத்தியிலும், 2 ஆம் அடுக்கு என்பது, இலங்கை மேலும் ஆட்கடத்தலைத் தடுப்பதற்கான கணிசமான முயற்சிகளை அதிகரிப்பது மட்டுமன்றி, அதனை அவசரமாகவும் விரைவாகவும் செய்ய வேண்டும் என்பதையே குறிக்கிறது. சமவாயங்களையும் சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்தும் ILO நிபுணர்கள் குழுவும் தடுத்தல், பாதுகாத்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல் ஆகிய முயற்சிகளில் இலங்கை கவனம் செலுத்த வேண்டிய தேவை இருப்பதை அவதானித்துள்ளதுடன், இலங்கையால் ஏற்கப்பட்டுள்ள கட்டாய வேலை தொடர்பான 29 ஆம் இலக்க ILO சமவாயத்துடன் இணங்கி நடப்பதை அவர்கள் மதிப்பீடு செய்வர்.

ஆசிய பசுபிக் பிராந்தியமே சிறுவர் தொழிலில் ஆகக்கூடிய எண்ணிக்கையான சிறுவர்களை, அதாவது ஏறக்குறைய 78 மில்லியன், ஈடுபடுத்தியுள்ள பிராந்தியமாகும். ஆயினும், இலங்கை இப் பிராந்தியத்தில் இவ்விடயத்தில், நம்பிக்கையின் கலங்கரை விளக்காக, 2016 இல் 1% சிறுவர் தொழில் பாதிப்பு வீதத்துடன், 43,714 என்ற சிறுவர் எண்ணிக்கையுடன் காணப்படுகிறது. இந்த எண்ணிக்கையான சிறுவர்களில் 39,007 பேர் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுகின்றனர். சிறுவர் தொழிலில் ஈடுபடுவோர் பாடசாலைக்குச் செல்வதற்கான சாத்தியம் குறைவாகவும் அல்லது கட்டாயக் கல்வியை நிறைவு செய்து கொள்ள முடியாதவர்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பார்க்கும்போது, வேலைத்தல விபத்துக்களில் அவர்கள் அகப்படுவதற்கான சாத்தியக்கூறு, சுலபமாக துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்ற நிலைமை ஆகியன அதிகம் என்பதால், சிறுவர் தொழிலை ஒழிப்பதற்கான முயற்சிகள் மேலும் அவசியமானவை.

ஐ.நா. நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்பு (UNSDF) மற்றும் அதை அறியத்தந்த ஐ.நா.வின் நாட்டிற்குரிய பொதுவான ஆய்வு (CCA), செம்மையாக்கப்பட்ட தரவுகளும், அறிவு முகாமைத்துவமும் மேம்படுத்தப்பட்ட சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தலுக்குத் இன்றியமையாத தேவையாகும் எனத் தெரிவித்துள்ளது. உதாரணமாக, தொழிற் சந்தைக் கோரிக்கைகள், தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் (OSH), வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான ஆட்சேர்ப்புச் செலவுகள் ஆகியன பற்றிய நாடு தழுவிய தகவல்களின் குறைபாடானது அல்லது அவை மட்டுப்படுத்தப்பட்ட வகையில் கிடைத்தலானது, ILOவின் உள்ளீடுகளின் தரத்தையும், தேசிய கொள்கை வகுத்தலையும் கடுமையாகப் பாதிக்கும். விரைவாக மாறிக்கொண்டிருக்கும் தொழிற் சந்தையின் கோரிக்கைகளும் வழங்கல்களும் காரணமாக, சார்ந்த தரப்பினர்களது புதிய தரவு சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிவை பகிரும் திறனை கட்டியெழுப்புதல நிலைபேறான அபிவிருத்திக்கும், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைவதற்கான முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கும் முக்கியமானது.

## DWCP இன் தேசிய மற்றும் உலக அபிவிருத்திக் கட்டமைப்புடனான பொருத்தப்பாடு

DWCP (2018-2022) இன் மையக்கருவானது கண்ணியமான வேலை பற்றிய தேசியக் கொள்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் (SDGs) ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளதுடன், அதன் அடிநாதமான கொள்கையானது "எவரும் தவற விடப்படலாகாது" என்பதாகும். UN MAPS இன் கண்டுபிடிப்புகளின்படி, நாட்டில் தொடர்ந்திருக்கின்ற சமமின்மை, பெண்களினதும் இளைஞரதும் அரசியல் மற்றும் பொருளாதார ஈடுபாடுகளில் காணப்படும் மட்டுப்பாடு, பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களும் தொடர்ந்து ஒதுக்கி வைக்கப்படுதல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை எல்லோரும் சமமாக அடைய முடியாத நிலைமை ஆகியன தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படுவதற்கு, பாரிய முயற்சிகள் தேவைப்படுகின்றன.

UNSDF (2018-2022) மற்றும் CCA 2016 ஆகியன, நான்கு மூலோபாய ரீதியான "இயக்கிகளை' அமைத்துள்ளன: 1) மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தல் 2) புத்தாக்கத்துடனுமான அரச நிறுவனங்களை நிலைத்த சமாதானத்தை நோக்கிய ஈடுபாடுடன் வலுப்படுத்துதல். 3) மனித பாதுகாப்பும் மற்றும் சமூக-பொருளாதார மீளுருவாக்கமும் 4) காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கான நீடித்த மீளுருவாக்கமும், சூழல் முகாமைத்துவத்தைப் பலப்படுத்துதலும். இந்த மூலோபாய ரீதியான இயக்கிகள், அவற்றின் முக்கியத்துவம் காரணமாக, DWCP (2018-2022) இன் பொதுவான கருபொருளாகவும் உள்ளன.

DWCP (2018-2022) ஆனது, 2016 டிசெம்பர் மாதத்தில் ILOஇன் 16 ஆவது ஆசிய பசுபிக் பிராந்தியக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'பாலி' பிரகடனத்துடன் ஒத்துச் செல்வதாகவும் உள்ளது. இப் பிரகடனமானது,சிறுவர் தொழிலையும் கட்டாய வேலையையும் முற்றாக ஒழிப்பதற்கும், சமமின்மையை இல்லாமற் செய்வதற்கும், முரண்பாடுகளுக்கும் அனர்த்தங்களுக்கும் எதிரான மீளுருவாக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நியாயமான இடப்பெயர்வுகளையும் செம்மையான சமூகப்பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கும் விசேடமாக அழைப்பு விடுத்துள்ளது. இலங்கை அரசாங்கத்தால் 2017 செப்தெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட ஒரு கொள்கைப் பிரகடனமான 'தூரநோக்கு 2025', தொழிற் சந்தை முகங்கொடுக்கும் முக்கிய சவால்கள் மீது தீவிர கவனஞ்செலுத்துவதன் மூலம் அறிவை அடிப்படையாகக்கொண்ட, போட்டித் தன்மையான, உள்ளார்ந்த மற்றும் ஏற்றுமதியை நோக்கிய சந்தை வாய்ப்பை 2025 ஆம் ஆண்டளவில் பெற்றுக்கொள்வதனை வலியுறுத்துகிறது. அந்த

31 2017இல் முக்கியத்துவமளித்தல், வேகப்படுத்துதல், கொள்ளைக்கான ஆதரவு [Mainstreaming, Acceleration, and Policy Support (MAPS)]ஆகியவற்றுக்கான ஒரு தூதுக்குழு இலங்கை அரசாங்கத்தினதும் UNCT/RCO இனதும் வேண்டுகோளின்படி அனுப்பப்பட்டது. இத்தூதுக்குழுவின் நோக்கம் SDGs இற்கு தேசியக் கொள்கைகளில் எவ்வாறு முக்கியத்துவமளித்தல் என்பது பற்றிய

ஆவணமானது, தொழிற் சந்தையில் பெண்களின் பங்களிப்பு வீதத்தை அதிகரித்தல், திறன் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை உயர்த்துதல், இலங்கைத் தொழிலாளர்களது பாதுகாப்பான மற்றும் நியாயமான வெளிநாட்டு இடப்பெயர்வுகளை உறுதிப்படுத்தல், வெளிநாடுகளிலிருந்து திரும்பிவரும் தொழிலாளர்களது மேம்படுத்தப்பட்ட திறன்களிலிருந்தும் அறிவிலிருந்தும் நன்மையடைவதற்காக அவர்களை மீள இணைத்தலை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தைக் முன்நிலைப்படுத்தி காட்டுகிறது. அது மேலும், முறைசாராப் பொருளாதாரத்தை முறைசார்ந்ததாக மாற்றுவதனூடாகவும் தொழிலாளர் - தொழில்கொள்வோர் உறவுகளைப் பலப் படுத்துவதனூடாகவும் வேலை நிபந்தனைகளை மேம்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இதற்கு மேலதிகமாக அது, அச்சுறுத்தும் அளவிலான உயர்ந்த இளைஞர் வேலைவாய்ப்பின்மையைப் பற்றிக் கூறுவதுடன், தொழிற் கல்வியின் மேம்படுத்தலையும், முயற்சியாண்மைகள் பற்றிய பயிற்சிகளையும், இளைஞர்களுக்கான திறன் அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் முன்வைக்கிறது. எனவே உள்ளாந்த பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்காக, புதிய சமூகப் பாதுகாப்பு முறைமையை அறிமுகப்படுத்துவதையும் பங்களிப்பு ஓய்வூதிய நன்மைத் திட்டங்களையும் அது குறிப்பிட்டுக் கூறுகிறது. இறுதியாக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தொழிற்துறையில் (ICT industry) முதலீடுகளை அதிகரிப்பதனூடாக பொருளாதாரத்தை இலத்திரனியல் மயப்படுத்துவதையும், பொதுத்துறை செயற்பாடுகளையும் சேவை வழங்கல்களையும் நவீனமயப்படுத்துவதையும், இளைஞரிடையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதையும் எதிர்வுகூறுகிறது. இவ்வாறு அடையாளங் காணப்பட்ட சவால்கள், DWCP (2018-2022)இன் கீழ் எதிர்வு கூறப்பட்டுள்ள முன்னுரிமைகளிலும் வெளியீடுகளிலும் உள்ளடங்குகின்றன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான தேசிய நடவடிக்கைகள் திட்டம் 2017-2021, பெண்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், நாடு திரும்பும் அகதிகள், முன்னாள் போராளிகள், வெளிநாடு செல்லும் தொழிலாளர்கள், மாற்றுத் திறனுடைய ஆட்கள் ஆகியோர் உள்ளிட்ட பாதுகாப்பற்ற சமூகத்தினரைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை முன்நிலைப்படுத்துகிறது. அவ்வாறு செய்யும்போது, மனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினூடாக பொருளாதார வலுவூட்டலையும், நிலைபேறான அபிவிருத்தியையும் அரசாங்கம் அடைய எதிர்பார்க்கின்றது. தொழில் உரிமைகளைப் பொறுத்த மட்டில், செயல் திட்டமானது, ILO இன் கண்ணியமான வேலை தொடர்பான முன்முயற்சிகளுடன் ஒத்துப்போவதுடன், தொழில்சார் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் ஊக்குவிப்பதையும், அபாயகரமான சிறுவர் தொழில்களைத் தடை செய்வதையும், தொழில் பிணக்குகளைக் குறைப்பதையும், ILO சமவாயங்களுக்கு ஏற்ப கொள்கைகளில் சீர்திருத்தங்களைஏற்படுத்துவதையும், தொழிற் சங்கங்களில் சேருவதற்கான ஆகக்குறைந்த வயதெல்லையிலுள்ள முரண்பாடுகளைக் களைவதையும், முறைசாராத் துறைகளிலும் வீட்டு வேலைகளிலும் ஈடுபடும் தொழிலாளர்களது உரிமைகளைப் பாதுகாப்பதிலும் கவனஞ் செலுத்துகிறது.

## முன்னைய DWCP அமுல்படுத்தலிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

முன்னைய DWCP (2013-2017) இன் உள்ளக மீளாய்வொன்று 2017 ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், அது அடைந்த மைல்கற்களை அடையாளங்கண்டதுடன், முன்னே அதிக கவனம் செலுத்துவதற்கு தேவையான வேலை விடயங்கள், முன்னேற்றத்திற்குத் தடையாகவிருந்த வெளியகக் காரணிகள் ஆகியவற்றையும் அடையாளங் கண்டது. முன்னைய DWCP (2013-2017) இல் இளைஞர் தொழில்வாய்ப்பு, தொழிலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுதல், சிறுவர் தொழில், கிராமியப் பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச தொழில் நியமங்களை ஏற்றுக்கொள்ளுதல், இலங்கை தொழில்கொள்வோரது சம்மேளனம் மற்றும் தொழிலாளரது அமைப்புக்கள் ஆகியவற்றின் திறன் அபிவிருத்தி என்பவற்றில் கணிசமான முன்னேற்றங்கள் எட்டப்பட்டிருந்தன. எட்டப்பட்ட சில மைல்கற்களாவன: தேசிய கூட்டுறவுக் கொள்கை, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய கொள்கை, சிறுவர் தொழில் மீதான கொள்கை, அபாயகரமான சிறுவர் தொழில்களைப் பொறுத்துக் கொள்வதைப் பூச்சிய நிலையில் வைத்திருத்தல் மீதான கொள்கை, நாடு திரும்பும் தொழிலாளர்களை மீள இணைத்தல் தொடர்பான உப கொள்கையும் செயல்திட்டமும் ஆகியவற்றை அங்கீகரித்தலும் வெளியிடலும். மேலும், ILO ஆனது, அடித்தள மட்டத்தில், இளைஞருக்கான தொழில்வாய்ப்புச் சேவைகளின் திறன் விருத்தியை மேற்கொண்டதுடன், உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியூடாக மக்களை வலுவூட்டும் கருத்திட்டம் (LEED) என்ற இந்த மாதிரி', ஒரு பயனுள்ள நிலையான பிரதிபண்ணக் கூடிய மாதிரியாக கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கான அறிமுகப்படுத்தப்பட்டது.

அதேவேளை, பால்ரீதியான சமத்துவத்தை முன்னிலைப்படுத்துதல், தொழிற் சந்தை ஆளுகை, சமூகக்கலந்துரையாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் பாரிய ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்படுவதை உள்ளக மீளாய்வு வெளிப்படுத்தியது. கணிசமானதும், தெளிவாகத் தெரியக்கூடியதுமான பெறுபேறுகளை உருவாக்க, முழுமையான வளப் பகிர்வு மூலோபாயம், பெறுபேறுகளுக்கான முகாமைத்துவம் ஆகியன உருவாக்கப்பட வேண்டியதை உள்ளக மீளாய்வு வெளிப்படுத்தியது. மாறிக்கொண்டிருக்கும் அரசியல் நிலைமைக்கும், எதிர்பாராத சூழல் அனர்த்தங்களுக்கும் துரிதமாக பதிலளிக்க வேண்டிய தேவை ILOஇற்கு உள்ளதாக உள்ளக மீளாய்வின் கண்டுபிடிப்புகள் தெரிவித்தன. இறுதியாக,நிலைபேறான தன்மைக்காக, சம்பந்தப்பட்ட முத்தரப்பினருக்கு திறன் அபிவிருத்தியும், இவ்விடயங்கள் தமக்கு உரிமையானவை என்னும் உணர்வும் ஏற்படுத்தப்படுவதற்கு மேலும் அறிவுறுத்தல் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

## நாட்டினுள் ILOஇன் ஒப்பீட்டு அனுகூலங்கள்

அடிப்படைக் கோட்பாடுகளும் உரிமைகளும், வேலைவாய்ப்பை ஊக்குவித்தல், சமூகப் பாதுகாப்பு, சமூகக் கலந்துரையாடலும் முத்தரப்பு ஒத்துழைப்பும் ஆகிய நான்கு முக்கிய மூலோபாய நோக்கங்களுக்குரிய விடயங்களில், ILO ஆனது, தனது தொழில்நுட்ப கூட்டுறவு செயற்றிட்டங்களை நிறைவேற்றுகிறது. சர்வதேச நியமங்களை நிலைப்படுத்தும் ஓர் அமைப்பு

சிபார்சுகளை வழங்குதல், அதனூடாக SDGsl அடைவதற்கான முன்னேற்றத்தை வேகப்படுத்துதல் ஆகியனவாகும்.

32 நாட்டிற்கான ஐ.நா. குழு (2016). நாட்டிற்கான பொதுவான பகுப்பாய்வு, இலங்கை 2016 [Common Country Analysis (CCA) Sri Lanka 2016].

33 மேலும் தகவல்களுக்கு இவ்விணையத்தளத்தை அணுகவும்:http://www.ilo.org/jakarta/info/public/pr/WCMS_538754/lang--en/index.htmhttp://www.ilo.org/jakarta/info/public/pr/WCMS_538754/lang--en/index.htm.

34 ஐக்கிய நாடுகள் (2016), இலங்கையின் சமாதான உருவாக்க முன்னுரிமைத் திட்டம்http://lk.one.un.org/our-work/peacebuilding/peacebuilding-priority-plan/.

என்ற வகையில், ILO ஆனது, வழிகாட்டும் அங்கத்துவ நாடுகள் தொடர்பாக, தொழிலுலகத்தில் அவற்றின் சட்டக் கட்டமைப்புகளையும் கொள்கைகளையும் மேம்படுத்துவதில் வழிகாட்டும் ஒப்பீட்டு அனுகூலத்தைக் கொண்டுள்ளது. மேலும், பிராந்தியத்தினுள்ளும் அதற்கு அப்பாலும் தனக்கு உள்ள ஒரு வலையமைப்பைப் பயன்படுத்துவதன் மூலம், ILO ஆனது, குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கான இயலுமையையும் கொண்டுள்ளது. தனக்குரிய ஆணையின் மூலாதாரமாக, ஆராய்ச்சிகளையும் சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தலையும் கொண்டுள்ளதால், ILO ஆனது, செயற்றிறன் மிக்கதும் அர்த்தமுள்ளதுமான சமூகக் கலந்துரையாடலையும் முத்தரப்பு ஒத்துழைப்பையும் ஊக்கப்படுத்தி வசதியளிப்பதற்காக உயர்ந்த மட்ட, நாளதுவரைப்பட்ட, சிறந்த செயன்முறைகளைக் கொண்ட ஆராய்ச்சிகளை நடாத்துகிறது.

இலங்கை, 1948 இல் ILO வின் அங்கத்துவ நாடாக ஆனதுடன்,



இலங்கைக்கும் மாலைதீவுக்குமான அலுவலகம் 1984 இல் கொழும்பில் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக, முத்தரப்பு பங்காளிகளுடன் வலுவான செயற்றிறன் மிக்கதுமான நட்புறவு கட்டமைக்கப்பட்டுள்ளது. 2017 நவம்பர் மாதமளவில், கொழும்பு அலுவலகம் பரந்துபட்ட மூலங்களிலிருந்து நிதி ஆதரவைப் பெற்றது (அதாவது, அவுஸ்திரேலிய அரசாங்கம், நோர்வே அரசாங்கம், சுவிட்சர்லாந்து அரசாங்கம், ஐக்கிய அமெரிக்க தொழில் திணைக்களம், ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. சமாதானக் கட்டமைப்பு நிதியம், அங்கத்துவ நாடுகளிலிருந்தான ILO வின் மூலாதார நிதியம்). முத்தரப்பு பங்காளிகளுக்கு மேலதிகமாக, ILO ஆனது, கிடைக்கும் மூலவளங்களையும் வலையமைப்பையும் ஒருங்கிணைப்பதற்காகவும், தொழில்நுட்ப உதவிகளைப் பரந்த அளவில் வழங்குவதற்காகவும், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார்துறை நிறுவனங்கள், அமைச்சுக்களும் வேறு அதிகார சபைகளும், கல்விசார் நிறுவனங்கள், ஐ.நா. வின் நிறுவனங்கள், இலாபகரமற்ற அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் ஆகிய பரந்துபட்ட உள்ளூர்ப் பங்காளர்களுடன் மூலோபாயப் பங்களிப்புகளை உருவாக்கியுள்ளது.

### ILO இன் குறிக்கோள்களை அடைவதிலுள்ள ஆபத்தான நிலைமைகள்

தளம்பலற்ற பொருளாதார மாற்றங்கள் மற்றும் அபிவிருத்தி காணப்பட்டாலும், சமூக - பொருளாதார வேறுபாடுகள் நிலவுகின்றன. இலங்கையின் சமாதான உருவாக்க முன்னுரிமைத் திட்டம் 2016 உடன் சேர்ந்தியங்கும் வகையில், DWCPஆனது, சமாதானம் மற்றும் சமரசம் ஆகியவற்றை நாட்டின் முன்னுரிமைகள், செயற்றிட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் ஒரு முக்கிய விடயமாகக் கொண்டிருக்கும்.

மேலும், சூழல் ஆபத்துக்களுடனான காலநிலை மாற்றங்களுக்கு முகம் கொடுக்க தற்காப்பு வலிமைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படவில்லை. மிக மோசமான வானிலையைத் தொடரும் மழை வீழ்ச்சி ஓர் ஒழுங்கற்ற பாங்கில் ஏற்பட்டு, வெள்ளம் அல்லது வரட்சி நிலைமைகளை ஏற்படுத்துகிறது. 2017 மே மாதத்திலான வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளும் சப்ரகமுவ, தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் பரந்த சேதங்களை ஏற்படுத்தின. தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் அறிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட மீட்பு ரூபா 70 பில்லியன் பெறுமதியானது. உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக, வெள்ளப்பெருக்கானது உட்கட்டமைப்புகள், விவசாயம், கைத்தொழில்கள், அரச / சமூக சேவைகள், வாழ்வாதார நடவடிக்கைகள் ஆகியவற்றையும் சேதப்படுத்தியது. இந்த ஒழுங்கற்ற மழை வீழ்ச்சியானது வரட்சியையும் ஏற்படுத்தியது. 2016இல், வருடாந்த திரண்ட மழைவீழ்ச்சியானது, 1981 இற்கும் 2010இற்கும் இடைப்பட்ட 30 வருட சராசரி மழைவீழ்ச்சியிலும் பார்க்க 23% குறைவானது. இது விவசாய உற்பத்திகளை அளவிலும் தரத்திலும் மிகப் பாரிய அளவில் பாதித்தது. காலநிலை மாற்றத்திற்கெதிரான நிலைபேறான தன்மை மற்றும் மீளுருவாக்கம் ஆகியனவும் DWCP2018-2022 இன் குறுக்குமுக வெட்டு விடயமாக, அதேவேளை கீழே தரப்படும் முன்னுரிமை 1இன் மீது கூர்மையான கவனஞ் செலுத்துதலுடன், கொள்ளப்படும்.

### நாட்டின் முன்னுரிமை 1: நிலைபேறான, உள்ளார்ந்த மற்றும் கண்ணியமான தொழில்வாய்ப்பின் உருவாக்கம்

இலங்கை அரசாங்கம், சமீபத்தில் தனது அபிவிருத்தி மூலோபாயமான 'தூரநோக்கு 2025' ஐ வெளியிட்டது. 2020 ஆம் ஆண்டளவில் 1 மில்லியன் வேலைகளை உருவாக்குதல் என்பது அரசாங்கத்தின் முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றாகும். இந்த இலக்கை அடைவதானது, விரும்பத்தக்க ஓர் அளவுக்கு பொருளாதாரத்தின் முறைசாராத் துறைகளை முறைசார்ந்ததாக்குவது திறன்களுடனான பெண்கள், இளைஞர், மாற்றுத்திறன் கொண்டோர் ஆகியோரைக் கொண்ட தொழிற்படையை உருவாக்கி தொழிற்சந்தைக்குத் தேவைப்படுவோரை சான்றுப்படுத்துவது நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளது உற்பத்தித்திறனையும், போட்டித் தன்மையையும், சூழலை எதிர்கொள்ளும் தன்மையையும், அனர்த்தங்களிலிருந்து மீளுருவாகும் தன்மையையும் மேம்படுத்துவது ஆகியவற்றின் மீதான நடவடிக்கைகளைக் கோரி நிற்கின்றன.

35 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சும், அனர்த்த முகாமைத்துவ அமைச்சும்(2017),இலங்கையின் அனர்த்தங்களுக்குப் பின்னரான தேவைகளின் மதிப்பீடு: வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளும்.

36 1,200 இற்கும் மேற்பட்ட SMEs சேதமாக்கப்பட்டன. இதன் மீளமைப்புப் பெறுமதி ரூபா 50 மில்லியன்கள் என மதிப்பிடப்பட்டது.

37 அனர்த்த முகாமைத்துவ அமைச்சும், உலக உணவு நிகழ்ச்சித்திட்டமும்(2017), இலங்கை – வரட்சி மீதான அவசர ஆரம்ப மதிப்பீடு 2016/2017.

38 இது ஐடுமு வின் ஒட்டுமொத்த மூலோபாயத்துடன் ஒத்துச் செல்லத்தக்கது, பார்க்கவும்: மாறுபடும் காலநிலையுடன் வேலை செய்தல்:பசுமை முயற்சி –பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை (2017), சர்வதேச தொழில் மாநாடு 106 ஆவது அமர்வு,2017இஅறிக்கை1. [Work in a changing climate: The Green Initiative – Report of the Director General (2017), International Labour Conference 106th

மேலும், நிலைபேறான, உள்ளார்ந்த, கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மீதான, DWCP (2018-2022)இல் கூறப்பட்டுள்ள மூலோபாயங்கள் முக்கிய அரசாங்க கொள்கைக் கட்டமைப்பிலும், தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையிலும் (NHREP) உள்ளடக்கப்பட்டுள்ள கோட்பாடுகளில் பிரதிபலிக்கின்றன. இலங்கை GSP+ ஏற்றுமதிச் சலுகை பெறும் பயனாளியாக தகுதியை பெற்றமையால், அரசாங்கம், தொழிலாளர், தொழில்கொள்வோர் ஆகியோர், மனிதவளத்தில் முதலீடு செய்வதற்கு கூடுதல் ஊக்குவிப்புகிடைத்துள்ளது. எனவே, ஓர் உயர் திறமையான, உலக ரீதியாகப் போட்டியிடக்கூடிய, பல்வேறு திறன்களுடனான, உற்பத்தித்திறன் கொண்ட தொழிற்படையொன்றை, தொழிற் சந்தைக்குத் தேவையான சந்தைப்படுத்தற் கல்வி மற்றும் திறன்கள், மாற்றமடைகின்ற தொழில் வடிவங்கள் (அதாவது, வேலையின் எதிர்கால வடிவம்) ஆகியவற்றினூடாக உருவாக்கும் முயற்சிக்காக, நாட்டின் இந்த முன்னுரிமையானது அமைக்கப்பட்டுள்ளது.

நிலைபேறானதும் கண்ணியமானதுமான வேலைவாய்ப்பை உருவாக்குதலானது கண்ணியமான வேலைக்கான நிகழ்ச்சிநிரலிலும், SDG இலக்கு 8 இலும் தங்கியுள்ளது. இலங்கையில் ILOஆனது, முரண்பாடுகளுக்குப் பிந்திய சந்தர்ப்பம் போன்ற சிரமமான சூழ்நிலைகளில் மிகவும் ஒதுக்கப்பட்டோருக்கு (பெண்களும் இளைஞரும் மாற்றுத்திறனுடைய ஆட்களும்), கிராமியப் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முக்கியமான தொழில்நுட்ப ஆற்றலைக் கொண்டுள்ளது. DWCP (2018-2022) ஆனது, ILOவின் மூலாதார விடயமான நிலைபேறானதும் கண்ணியமானதுமான தொழில்வாய்ப்பை ஊக்குவித்தல் என்பதுடன் இணைந்துள்ளது.

### விளைவு 1.1: இலங்கைத் தொழிற்படைக்கு மேலும் அதிகமான, சிறந்த தொழில் வாய்ப்புகள் காணப்படும்.

விளக்கம்: பின்தங்கிய குழுக்களின் (பெண்களும் இளைஞரும் மாற்றுத்திறனுடைய ஆட்களும்) வேலைவாய்ப்பின்மை, அவர்களது குறைவான தொழிற்படைப் பங்களிப்பு வீதம், நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளது பாதிப்புறும் தன்மை, மற்றும் முறைசாராத் துறை ஆகியன இலங்கையின் தொழிற் சந்தை முகங்கொடுக்கும் சவால்களை வெளிப்படுத்துகின்றன. தற்போதைய நிலைமையை இன்னும் மோசமாக்குகின்ற அடிப்படையிலுள்ள பல்வேறு காரணிகள் உள்ளன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைகளில் காணப்படுகின்ற தொழில் 'கேள்விக்கும் வழங்கலுக்கும்' இடையிலான பொருத்தமின்மையானது, ஒரு சவாலாகும். இங்கு தொழில்கொள்வோரால் 'கேள்வி'யாக முன்வைக்கப்படுகின்ற தொழில் திறன்கள் கிடைக்கப்பெறாது, தொழிலாளர்களது பற்றாக்குறையை, குறித்த சில துறைகளில் உருவாக்குகின்றன. நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் தேவையான தரமான வேலைவாய்ப்புக்குரிய திறன்கள் ஈட்டப்படுவதை வேகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்பதனை வலியுறுத்த வேண்டியுள்ளது.

தொழிற்படையில் பெண்களதும் இளைஞரதும் மாற்றுத்திறனுடைய ஆட்களதும் குறைந்த பிரதிநிதித்துவமும் பங்கு பற்றலும், கேள்விப் பக்கத்தில் அழுத்தம் கொடுக்கின்ற பிரச்சினைகளைச் சித்தரிக்கின்றன. வளங்கள் மற்றும் இயலுமை ஆகியவற்றிலுள்ள மட்டுப்பாடு காரணமாக, தொழில் தேடுபவர்களுடன் தொழில்களைப் பொருத்தும் சேவையானது போதிய வசதியில்லாததாகக் காணப்படுவதுடன், தொழில் தேடுபவர்களிடையேயும் தொழில்கொள்வோரிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்த முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. பெண்களைப் பொறுத்தவரை, ஆழமான கலாசார மனப்பாங்குகளும், நெகிழ்வான வேலை நிலைமைகளுக்கு வசதியளிக்காத தற்போதுள்ள தொழிற் சட்டங்களும், குறைவான பங்களிப்பிற்கும் பிரதிநிதித்துவத்திற்கும் தொடர்ந்து பங்களிக்கின்றன. மேலும், தொழில் கொள்வோரும் மாற்றுத் திறனுடையவர்களது குறித்த தேவைகளை நிறைவேற்றுவதில் கூடியவரை தயக்கம் காட்டுகின்றனர். இதனால், ஒதுக்கப்பட்ட மக்களில் குறித்த பிரிவினரது தேவைகளை நிறைவேற்றத்தக்க நிலைமையைத் தரக்கூடிய வேலைச் சூழலைப் பரிந்துரைப்பதிலேயே பிரதான அக்கறை தேவைப்படுகிறது.

நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளதும் முறைசாராத் துறையினதும் பாதிப்புறும் தன்மை, நெருக்கடி நிலைமைகளின்போது, சிலவேளைகளில் மிகக் கடுமையானதாகவும், வெளிப்படையானதாகவும் காணப்படுகின்றன. தொழில் நியமங்கள், தொழிற் பரிசோதனைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வள முகாமைத்துவம் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதிலுள்ள குறைபாடுகளாவன, துறையில் உள்ள நிலைபேறான தன்மை, கண்ணியம், மீளுருவாகும் தன்மை ஆகியவற்றிற்கான இடையூறுகளாகக் கருதப்படுகின்றன. தேசிய பொருளாதாரத்திற்கு இந்த நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளதும் முறைசாராத் துறையினதும் பங்களிப்புகளையும், அதேபோல் தொழிற் சந்தையில் ஏற்படும் வேகமான மாற்றங்களையும், காலநிலை மாற்றங்களையும் கவனத்திற் கொள்ளும்போது, விழிப்புணர்வூட்டலை மேற்கொள்வதற்கும், கண்காணிப்புச் செயன்முறை மற்றும் வர்த்தகத்தில் ஏற்படும் எதிர்பாரா விடயங்களுக்கான திட்டமிடல் ஆகியவற்றின் அவசரமானதும் காலத்திற்கேற்றதுமான தலையீடுகளது தேவை காணப்படுகிறது.

### வெளியீடு 1.1.1: திறன்கள் / திறமைகள் அடையாளங்காணப்பட்ட / சான்றுப்படுத்தப்பட்ட, குறிப்பாக பெண்கள், இளைஞர் மற்றும் மாற்றுத் திறனுடையோர் உள்ளடங்கிய இலங்கையின் தொழிற்படை

பின்தங்கிய குழுக்களால்(பெண்கள் இளைஞர் திரும்பும் புலம் பெயர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனுடைய ஆட்களும்), அவர்கள் தொழிற் சந்தையில் (மீளவும்-) பிரவேசிக்கும்போது, இரு பிரச்சினைகள் முகங்கொடுக்கப்படுகின்றன" முதலாவது திறன்களைப் பெற்றுக்கொள்ளுதல், இரண்டாவது திறன்களை அங்கீகரித்தல். 2017 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் ILO ஆலும் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில், இளைஞரிடையே காணப்படும் திறன்களின் பொருத்தமின்மை, தற்போதைய தொழில் வழிகாட்டல் முறைமைகளிலும், தொழில்நுட்ப மற்றும் மூன்றாம் நிலை

Session, 2017, Report 1].

39 தூரநோக்கு 2025: வளமான நாடு, 2017.

40 ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ILO (2017), இலங்கை –கல்வியினூடாக தொழிற்படையின் திறன்களை வளர்த்தல் – தொழில்வாய்ப்பைக் கண்டறியும் ஆய்வு.https://www.adb.org/sites/default/files/publication/382296/sri-lanka-employment-diagnostic.pdfhttps://www.adb.org/sites/default/files/publication/382296/sri-lanka-employment-diagnostic.pdf.

41 மேற்குறித்தது., பக்.42.

42 மேற்குறித்தது., பக்.42.

தொழிற்கல்விப் பயிற்சியிலும் (TVET) உள்ள மட்டுப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது, “பாடசாலையை விட்டு விலகுபவர்களுக்கு ஆலோசனை வழங்கத்தக்க எந்தவொரு முறையான தொழில் வழிகாட்டல் முறைமையும் இல்லை. தொழிற் சந்தைக்கும் இளைஞர்களுக்குமிடையே தகவல் பரிமாற்றம் போதுமானதாக இல்லை. தொழில் வாய்ப்புகளின் வகைகள் பற்றிய தகவல்கள் காணப்படாமை, பட்டதாரிகள் யதார்த்தமான அபிலாஷைகளையும் வாழ்க்கையின் இலக்குகளையும் உருவாக்கிக் கொள்வதில் மட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறது”. இது பாடசாலையை விட்டு விலகுபவர்களும் இளைஞரும் “தொழில் திறன்களின் பெறுமதியை வளர்க்காத அல்லது அது தேவைப்படாத சதாரண வேலைகளில்” ஈடுபடும் நிலைமையை உருவாக்குகின்றது. தற்போதைய தொழிற் சந்தையின் கோரிக்கைகளுடன் பொருந்தும் வகையில் TVET இனது பாடத்திட்டங்கள் வரையப்படவில்லை. இதனால், தொழில்கொள்வோர் TVET இன் தகைமைகளைக் கொண்டுள்ள வேலை தேடுபவர்களை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

தமக்குப் பொருத்தமான வேலைகளில் ஆட்களைச் சேர்க்கும் சேவைகளும், ஏனைய பொது வேலைவாய்ப்புச் சேவைகளும் தமது ஆணைக்குட்பட்ட சேவைகளை வழங்குவதில் போராடுகின்றனர். விசேடமாக கிராமப்புறங்களில் வளங்கள், மற்றும் இயலுமை, தொழில்கொள்வோரால் கோரப்படுகின்ற திறன் விபரங்கள் பற்றிய விழிப்புணர்வு ஆகியன போதாமை காரணமாக இது நடைபெறுகிறது. இவ்வாறான குறைந்த திறன்களும் அவற்றின் பொருத்தமின்மையும் மேலும் அதிகரிப்பதாகவே அறியப்படுவதுடன், கல்வியிலும் பயிற்சியிலும் நாட்டினது கூடிய முதலீட்டு மட்டங்களைக் கருத்திற் கொள்ளும்போது, இது துரதிஷ்டவசமானதாகவும், இலங்கைக்கான தவறவிட்ட வாய்ப்பாகவே காணப்படுகின்றது. எவ்வாறாயினும், தொழில்நுட்ப முன்னேற்றங்களுடனும், மேம்படுத்தப்பட்ட உள்ளக வெளியக தொடர்புகளுடனும், பொருத்தமான வேலைகளில் ஆட்களைச் சேர்க்கும் சேவைகளும், ஏனைய பொது வேலைவாய்ப்புச் சேவைகளும் தொழில்கொள்வோருடன் வேலை தேடுபவர்களை இணைப்பதற்கு, புத்தாக்கமான மாற்று வழிகளைக் கருத்திலெடுக்க முடியும்.

நாடு திரும்பும் வெளிநாட்டுத் தொழிலாளரும் தொழில் முயற்சியாளர்களும் தொழிற் சந்தைக்கு பெருமளவில் பங்களிக்கக்கூடிய திறன்கள், அனுபவம், தேர்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருப்பர். ஆயினும், தமது திறன்களுக்கும் தேர்ச்சிகளுக்கும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைக் கொண்டிருக்காதிருப்பதால், அவர்கள் தொழிற்படையில் மீள் இணைந்து கொண்டு இலங்கையிலும் வெளிநாட்டிலும் கண்ணியமான வேலைகளில் ஈடுபடுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான பரந்த அளவுள்ள சம்பவங்கள் சில ஆய்வுகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன், சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தல், திறன்களைச் சான்றுப்படுத்துதல், பயிற்சித்திட்டங்கள் ஆகிய துறைகளில் மேலதிக தலையீடுகள் தேவைப்படுகின்றன.

மேற்குறித்த இந்த இடைவெளியை அடையாளங்கண்டு, அரசாங்கமும் அதன் அபிவிருத்திப் பங்காளர்களும், “வேலையிலிருக்கும்போதே” வழங்கப்படும் பயிற்சியையும் அனுபவத்தையும் சான்றுப்படுத்துதல் அரசாங்க மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களால் இளைஞர்களை மீளவும் திறன் பெற்றவர்களாக மாற்றுதல் தொழில் பழகுதல் அரசாங்க வேலைவாய்ப்பு நிலையங்களுடன் வேலையற்றவர்களை இணைத்தல்பாடசாலைப் பாடத்திட்டங்களில் தொழிற்பயிற்சியை அறிமுகப்படுத்துதல் போன்ற சில முன்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும், இவ்விடயத்தில் மேலும் முயற்சிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.

DWCP ஆனது, பின்வருவனவற்றை, தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் தொழிற்படைக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில், மேற்கொள்வதைப் பொறுப்பேற்கும். அவ்வாறான தலையீடுகள்:



- முறைசாராப் பொருளாதாரத்திலுள்ளவர்களது தேவைகள் உட்பட, முன்னர் கற்றவற்றையும் திறன்களையும் அடையாளங்காணுதல், தொழில் வழிகாட்டுதலும் ஏனைய தொழில்வாய்ப்புச் சேவைகளும் ஆகியவற்றுக்கான ஒரு பொறிமுறை நாட்டில் கிடைக்கத்தக்கதாக இருத்தல்.
- தமக்குப் பொருத்தமான வேலைகளில் ஆட்களைச் சேர்க்கும் தற்போதைய முறைமைகள் புத்தாக்கமான வகையில் மாற்றப்படுவதுடன், பொது வேலைவாய்ப்புச் சேவை நிலையங்களை, வேலை தேடுபவர்களையும் வேலவாய்ப்புச் சந்தர்ப்பங்களையும், தற்போதுள்ள தொழில்நுட்பங்களையும் தகவலை அணுகும் இலகுவான முறைகளையும் உபயோகித்து, இணைக்கத்தக்கதாக மேம்படுத்தப்படுதல்.
- திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு, மேம்படுத்துவதற்கு, மதிப்பீடு செய்து சான்றுப்படுத்துவதற்கு உள்ள சந்தர்ப்பங்களை அறியத்தருவதற்காக விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- தொழில்கொள்வோரும் தொழிற் சங்கங்களும் வேலையாட்களுக்கான பயிற்சி வழங்குதல், மதிப்பீடு செய்து சான்றுப்படுத்துதல் முறைமைகள் குறித்து பரிந்துரை செய்வதில் ஈடுபடுதல்தற்போதுள்ள பயிற்சி வழங்குதல், மதிப்பீடு செய்து சான்றுப்படுத்துதல் முறைமைகளைப் பலப்படுத்துதல் அவற்றின் உயர்ச்சிக்கான கொள்கை ரீதியான சிபார்சுகளை வழங்குதல்.
- தொழில் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வழிமுறைகளாக, தொழில்கள்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (OSH), வேலைத்தலங்களில் சமத்துவமும் பாரபட்சமின்மையும் ஆகிய விடயங்களை ஒன்றிணைக்கும் திறன் அபிவிருத்திப் பயிற்சிகள்.

**வெளியீடு 1.1.2: பெண்கள், இளைஞர் மற்றும் மாற்றுத் திறனுடையோர் தொழிற் சந்தையில் பிரவேசிப்பதற்கு உகந்த சூழல் உருவாக்கமும் தடைகளைக் குறைத்தலும்**

தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு பற்றிய 2016இல் ஒரு ILO ஆய்வு, பால்ரீதியான சமுதாய விதிகள் மற்றும் பாகுபாடு ஆகியவற்றை, பாரபட்சமான தொழிற்படைப் பங்கேற்புக்கான அடிப்படைக் காரணங்களாக அடையாளங் கண்டது. இந்த ஆய்வு மேலும், பணிகள் மற்றும் திறன்களை அடிப்படையாகக்கொண்டு சம்பளங்கள் சம்பளச்சபைகளால் தீர்மானிக்கப்பட்டாலும், உண்மையான சம்பளங்களில் பால் ரீதியான வேறுபாடு பின்பற்றப்படுவது பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும், பெண்கள் சிரேஷ்ட அல்லது முகாமைத்துவ வகிபாகங்களில் இருப்பது குறைவாகவுள்ளது என்பதுடன், இது அவர்களது தொழில் முன்னேற்றத்தில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிக்கிறது. வேறு பல நாடுகளிலும் இருப்பது போன்று, இலங்கையிலும் பெண் ஊழியர்களது பங்கேற்பின் போக்கானது, 'M-வளையி' போன்று காணப்படுகிறது. இதில், பெண்களது தொழில்-வாழ்க்கை அவர்களது பிள்ளைப்பேற்றுக் காலத்தில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தடைப்படுகிறது. வேலைத்தலங்களில் பால்நிலைச் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, பிள்ளைகளது கவனிப்புத் தேவைகளின் அவசியத்தன்மை மற்றும் நெகிழ்ச்சியான வேலை நிலைமைகள் (உ-ம்: பகுதி நேரம், வீட்டிலிருந்தே வேலை செய்தல்) ஆகிய விடயங்களில், ILOஇன் ஆய்வு மற்றும் உலக வங்கியின் ஆய்வு ஒன்றுக்கொன்று ஒத்துவருகின்றன.

1988 அளவிலான காலத்தில், அரசாங்கம் அரச நிறுவனங்கள் தமது தொழில் வழங்கல் ஒதுக்கீட்டில் 3% ஐ மாற்றுத் திறனுடையோருக்கு ஒதுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இன்னும், இச் சுற்றறிக்கையை அமுல்படுத்துவதில் இடைவெளிகள் காணப்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சில தொழில்கொள்வோரே, தடைகளற்ற வேலைச்சூழலை வழங்குவதற்குரிய உட்கட்டமைப்பை வழங்க வேண்டும் என்ற விதிமுறையை அமுல்படுத்துகின்றனர். தொழில் கொள்வோரும் வேலைக்கு ஆட்களைச் சேர்ப்போரும் மாற்றுத் திறனுடையோரை உள்ளடக்கக்கூடிய வேலைத்தலங்களை உருவாக்குவது குறித்து இன்னும் தயாராகவில்லை.

இதனால், திறன் பெற்றவர்களாக மாற்றுதல், மீளவும் திறன் வழங்குதல், சான்றுப்படுத்துதல் என்பவற்றுக்கு மேலதிகமாக, பெண்களும் இளைஞரும் மாற்றுத் திறனுடைய ஆட்களும் தொழிற் சந்தையில் ஒன்றிணைக்கப்படுவதை சாத்தியமாக்கக் கூடிய சூழல், பாரம்பரியமாக பின்தள்ளப்பட்ட அக்குழுக்கள் தமது தெரிவுகளுக்கமைவாக தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காகத் தேவைப்படுகிறது. இதனை சீர் செய்ய DWCP இன் கீழ் பின்வரும் தலையீடுகள் இருக்கும்:

- வேலையற்ற அதேசமயம் தொழிற்படையிலும் இல்லா தோருக்கு, வேலையில் அவர்கள் ஈடுபட முன்னோடியாக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை செய்தல்.
- தீர்மானங்களை எடுக்கும் பதவிகளில் பின்தங்கிய குழுக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காகப் பரிந்துரைத்தல்.
- அரச துறையில் மாற்றுத் திறனுடையோருக்கான 3% ஒதுக்கீட்டை அமுல்படுத்தலானது பரிந்துரைக்கப்படுதல் என்பதுடன், அதனை அமுல்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவைகள் பொது நிர்வாக அமைச்சுக்கு வழங்கப்படுதல்.
- உட்கட்டமைப்பு விதிமுறைகள் முன்னரை விடவும் நன்றாக அமுல்படுத்தப்படுதலும், மாற்றுத் திறனுடையோருக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் தொழில்கொள்வோருக்கு சலுகைகள் கிடைக்கச்செய்தல்.
- மாற்றுத் திறனுடையோருக்கான வேலை வழங்குதல் பற்றிய திருத்தப்பட்ட செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான பரிந்துரைப்பு.

**வெளியீடு 1.1.3: நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகள் தமது மீளுருவாக்கம், நிலைபேறான தன்மை, போட்டிக்கு முகங்கொடுக்கும் தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு கண்ணியமான வேலைக்குரிய நிகழ்ச்சிநிரலுடன் சேர்த்து, தீர்வுகளை வழங்குதல்**

சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான புதிய சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை நன்றாக நிலை நிறுத்தப்பட்டிருந்தாலும் காணப்பட்டாலும், பிரதேசங்களுக்கும் சமூகக் குழுக்களுக்கும் இடையே இன்னும் சமமின்மையான குறிப்பிடத்தக்க தன்மைகள் உள்ளன. மேலும், வறுமைக் கோட்டிற்கு அண்மையிலுள்ளோர் தம்மை மீண்டும் வறுமைக்குள் தள்ளக்கூடிய பொருளாதார மற்றும் சூழல் தாக்கங்களால் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அதி அபாய நிலைமையுடன் வறிய நிலைக்குள் உள்ள துறைகளில், மீண்டுவருவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இயலுமையையும் கொண்டு, அடுத்தடுத்து நிகழும் வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள், வரட்சி ஆகிய காலநிலை தொடர்பான அனர்த்தங்கள் இத்தாக்கங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றன. எனவே, இலங்கை போன்ற அனர்த்தங்களைச் சந்திக்கும் நாடுகளுக்கு, வேலைகளுக்கும் முயற்சியாண்மைகளுக்கும் சவாலாக விளங்கும் அவற்றைத் தடுப்பதற்கு, எதிர்கொள்வதற்கு, மெதுவான மற்றும் சடுதியான அனர்த்தங்களிலிருந்து மீண்டு வருவதற்கு நெருக்கடி மிக்க தேவை ஒன்று உள்ளது. நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளது முழுத் தொகுதியும், இவற்றில் நுண் முயற்சியாண்மைகள் பாரதூரமாகவும், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகள் தமது சொந்த மூலவளங்களிலிருந்து ஒப்பீட்டளவில் மீண்டுவரத்தக்க இயலுமையுடன் இருந்தாலும், ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க இழப்புகளைச் சந்திக்கும் வகையிலும் பாதிக்கப்படும். அதேசமயம், இந்த நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகள் காலநிலை மாற்றத் தடுப்பு முயற்சிகளில் ஆதரவளிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன. இதற்காக இவை, பசுமைப் பொருட்களையும் சேவைகளையும் வழங்குபவர்களாகவும், சூழலை மாசுபடுத்தாத உகந்த வர்த்தகச் செயன்முறைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருத்தல் தேவையாக உள்ளது. எனவே, இங்கு இரட்டைத் தேவைகள் உள்ளன: முயற்சியாண்மைகள் மீளுருவாக்கம் பெறுவதற்காக ஆதரவளிக்கப்பட வேண்டியிருக்கின்றன, மற்றும் அதேவேளை, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பசுமையான வளர்ச்சிக்கும் நேர்முகமான பங்களிப்பை வழங்குவதற்கான அவற்றின் சாத்தியக்கூறுகள் உருவாக்கப்பட வேண்டியுள்ளன.

காலநிலைப் பாதிப்புகளை தவிர, இந்த நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகள் பரந்த அளவில், விசேடமாக நுண் மற்றும் சிறு பிரிவானது, வேறு சவால்களையும் எதிர்கொள்கின்றன. அச்சவால்களானவை முறைசாராத் தன்மை, மட்டுப்படுத்தப்பட்ட திறன்கள், குறைவான சொத்துகளும் மற்றும் நிதி கிடைக்கக்கூடிய தன்மையும் ஆகியவற்றையும் உள்ளடக்கும். இச்சவால்களின் பெறுபேறாக, மிகக் குறைந்த அனுகூலங்களைக் கொண்ட வேலை நிலைமைகள், குறைந்த மட்ட உற்பத்தித்திறன் மற்றும்

போட்டிக்கு முகங்கொடுப்பதற்கான குறைந்த அளவிலான தன்மை ஆகியன காணப்படும். இந்த எல்லா முயற்சியாண்மைகளானது, வேலைகளை உருவாக்குதல் மற்றும் சிறந்த தரமான வேலைகளை வழங்குதல் ஆகிய சாத்தியக்கூறுகளினால அதற்கு பொருத்தமான ஆதரவு அதிகரிக்கப்பட வேண்டும். சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகள் (SMEs) பற்றிய DWCP இன் மூலோபாயம், 2017 ஒக்டோபர் மாதத்தில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளின் அபிவிருத்திக்கான தேசிய கொள்கைச் கட்டமைப்புடன் இணைந்தே காணப்படுகிறது. இந்தக் கொள்கையானது ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட புத்தாக்கங்களையுடைய SMEsl, அவற்றுக்கான நிதியுதவிகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் இலகு படுத்துதல், அவற்றின் திறன்களை அதிகரித்தல், அவற்றை ஏற்றுமதியாளர்களுடன் தொடர்பு படுத்துதல், சூழலுக்குகந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளினூடாக அவற்றின் பெறுமதியை அதிகரித்தல் மூலம், ஊக்குவிப்பதன் மீது கவனஞ் செலுத்துகிறது.

நிலைபேறான முயற்சியாண்மை அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக, கண்ணியமான வேலை நிகழ்ச்சிநிரல் கோட்பாட்டுடனும், நிலைபேறான முயற்சியாண்மைகளை ஊக்குவிப்பதற்கான ILO வின் தீர்மானத்துடனும் சேர்த்து அமுல்படுத்தப்பட வேண்டிய, பின்வரும் முன்னுரிமைத் தலையிடுகளுக்கு தரப்பினர் உடன்பட்டுள்ளனர்:

- நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளின் உற்பத்தித்திறனையும் போட்டிக்கு முகங்கொடுப்பதற்கான தன்மையையும் பலப்படுத்துதல். இது, முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துதல், கண்ணியமான வேலை நிலைமைகளுக்கான நிதிச் சேவைகள் மற்றும் தொழில்நுட்பச் சேவைகள், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் ஆகிய, வர்த்தக அபிவிருத்திக்கான தரம் வாய்ந்த சேவைகள் ஊடாக மேற்கொள்ளப்படும்.
- நுண், சிறு, மத்திய தர முயற்சியாண்மைகளின் காலநிலை-மீளுருவாக்கத்தை, வர்த்தகத்தில் ஏற்படும் எதிர்பாரா விடயங்களுக்கான திட்டமிடல், காலநிலையுடன் இணைந்துள்ள காப்புறுதி வசதிகள் போன்றவற்றினூடாக உயர்த்துதல்.



- தொழில்நுட்பத்திறனைக் கட்டியெழுப்புதல், பொருத்தமான தொழில்நுட்பங்களை அணுகுவதற்கான உதவிகள் போன்றவற்றினூடாக, மீள் பயன்படுத்தத்தக்க சக்தி வளம், அல்லது கழிவு முகாமைத்துவம் ஆகிய பசுமை முயற்சிகளைத் தொடங்குவதற்கு முயற்சியாண்மைகளைத் தூண்டுதல்.

### விளைவு 1.2: தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கும் மக்களுக்கான ஏனைய சந்தை உற்பத்திக் கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்கான தேசிய மூலோபாயம்

விளக்கம்: தொழிலுலகமானது பாரிய மாற்று செயன்முறைக்கு உட்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனை மாற்றுவதற்கு பல சக்திகள், தொழில்நுட்பத்தின் முன்நோக்கிய நுழைவு, காலநிலை மாற்றத்தின் தாக்கம் ஆகியவற்றிலிருந்து உற்பத்தியினதும் வேலைவாய்ப்பினதும் மாற்றமுறும் தன்மை வரை, காணப்படுகின்றன. வேலைகளை உருவாக்குவதிலும், தொழிற் படையினரது திறன்களை உயர்த்துவதிலும் சம்பந்தப்பட்ட, விரைவாக மாற்றமுறும் தொழில்நுட்பங்களுக்கும் எண்மானப்படுத்தலுக்கும் (digitalisation) உரிய வகையில், போதுமான அளவில் இலங்கை செயற்பட வேண்டியுள்ளது. மேலும் எண்மானப்படுத்தப்பட்ட பயன்பாடுகளையும் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களையும் ஊக்குவித்து உலக ரீதியாகப் போட்டியிடவும், எண்மானப்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத்தை நோக்கி நாட்டை இட்டுச் செல்லவும் மூலோபாயங்களை விருத்தி செய்ய வேண்டிய தேவையும் இந்த நாட்டுக்கு உள்ளது. மேம்படுத்தப்பட்ட எண்மான சூழல் முறைமைகள், மாற்றத்திற்கான குறைந்த செலவினூடாக, வேலைகளை உருவாக்குதலின் வளர்ச்சியை, விசேடமாக சுய வேலைவாய்ப்பைக் கொண்ட SMEs ஊடாக, தூண்டும்.

### வெளியீடு 1.2.1: முத்தரப்பு மற்றும் ஏனைய பங்குதாரர்களிடையே உருவான ஒத்திசைவான வழிகாட்டல்திட்டம் (Roadmap) மற்றும் செயன்முறை மூலோபாயம்

இலங்கை, வேலையின் எதிர்காலத் தேவைகள் மற்றும் பாரிய (பேரண்ட) மட்டத்தில் வேலையின் போக்குகளது பரிணாமமடையும் வடிவங்கள் ஆகிய விடயங்களுக்குப் பதிலளிக்குமுகமாக, நெகிழ்ச்சியான வேலை பற்றிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல் என்பதை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. நாட்டில், வேலையின் எதிர்காலமானது அதிகரித்த வயது கொண்ட மக்கட்தொகை, எண்மானப்படுத்தல் (digitalisation), சூழற் காரணிகள், உலக வர்த்தக நிகழ்ச்சிநிரல்கள் என்பவற்றுக்கேற்ப, பொருளாதாரப் பன்முகத்தன்மையையும் அதிகரிக்கப்பட்ட தொழில் வாய்ப்பையும் காட்டுவதாக அமையும். ILO வின் முத்தரப்பினரும், பெருமளவில் சமூகமும், கூட்டாகச் சேர்ந்து எடுக்கும் முடிவுகளின் ஊடாக, அந்த முடிவுகளையும், சிறந்த தொழிற்சந்தைக் கொள்கை உருவாக்கத்தையும் அறிவிப்பதற்காக, வேலைப் போக்குகளின் மேலெழும் எதிர்காலம் குறித்து அறிந்திருக்க வேண்டியிருக்கும். இவ்விடயத்தில் பின்வரும் தலையீடுகள் திட்டமிடப்பட்டுள்ளன:

- இலங்கையில் வேலையின் எதிர்காலம் தொடர்பாக தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் மக்கள் சம்பந்தப்பட்ட போக்குகள் பற்றிய அறிவு தரப்பினரிடையேயும், பொதுமக்களிடையேயும் அதிகரிக்கப்படுதல்.
- தொழிலுலகத்தில் உருவாகும் தொழில்நுட்ப

43 IOM & ILO (2017) கட்டுமானத் தொழிலின் அடையாளங்காணப்பட்ட வேலைகளில் குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஆகிய நாடுகள் மற்றும் இலங்கைக்கிடையில் திறன் மதிப்பீட்டுச்

முன்னேற்றங்கள் மற்றும் ஏனைய வருங்கால சந்தைக் கோரிக்கைகள் ஆகியவற்றுக்குப் பதிலளிப்பதற்காக, ஒத்திசைவான ஒரு வழிகாட்டல் திட்டம் (roadmap) உருவாக்கப்படுதல்.

- எதிர்கால தொழிற்படையைத் தயார் செய்வதற்கான செயற்பாட்டு முலோபாயமொன்று உருவாக்கப்படல்.
- வளர்ந்துவரும் தொழிற் சந்தைக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக தற்போதுள்ள தொழிற்படையின் திறன்கள் உயர்த்தப்படுதல்.
- இளைஞர் வேலைவாய்ப்பு நடவடிக்கைத் திட்டம் 2017–2021ஐ அமுல்படுத்துவதற்கான ஆதரவு.

### நாட்டின் முன்னுரிமை 2: தொழிற் சந்தையின் சிறந்த ஆளுகை

வேலையாட்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கொள்கைகளைக் கடைப் பிடிப்பதிலும், வேலைத்தலங்களில் சமூக நீதிக்கான நிலைமைகளை உருவாக்குவதிலும் இலங்கைக்கு ஒரு வரலாறு உண்டு. தேசிய மட்டத்திலான முத்தரப்பு நிலைமை உள்ளிட்ட சமூகக் கலந்துரையாடல், ஆகக் குறைந்த சம்பளங்களை அமைத்தல், கூட்டாகப் பேரம்பேசுதல் ஆகியவை இலங்கையில் தொழிற் சந்தை ஆளுகை முறைமையின் பாரம்பரிய தனித்தன்மைகளாகக் காணப்படுகின்றன. ILO ஆனது, சட்டங்களையும் உபவிதிகளையும் உருவாக்குவதிலும் தொழில் நிர்வாகத்தை மேம்படுத்துவதிலும் பல வருடங்களாகத் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது. ஆயினும்தொழில் நிர்வாகம், தொழிற் பரிசோதனைகள், நியமங்களைப் பேணுதல், வேலையாட்களது உரிமைகளையும் வாழ்க்கையையும் ணேிப் பாதுகாத்தல் ஆகியவற்றில் இன்னும் பல வேலைகள் மீதமுள்ளன.

தொழிற் சந்தையில் நிகழும் சடுதியான மாற்றங்களுடன், முறைசாராப் பொருளாதாரத்திலுள்ள தொழில்வாய்ப்புகளின் தொடர்ந்த பாதிப்பு, நியமங்களுக்குட்படாத சில வேலைகளின் தோற்றம் ஆகியவற்றால், தொழிலுலகத்தின் வளர்ந்துவரும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு, தொழிற் சட்டங்களின் மீளாய்வொன்று தேவையாக உள்ளது. இதனால், தொழிற் சந்தைக் கொள்கைகள், அவை வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளை முறையற்ற விதத்தில் தடுக்காமல் தமது குறிக்கோள்களை நிறைவு செய்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு, ஒழுங்காக மீளாய்வு செய்யப்படுதல் அவசியமானது. மேலும், விரைவாகப் பரிணமிக்கும் சந்தை சக்திகள், வேலைகளில் உரிமைகளுக்கும் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தலுக்கும் உரிய இடம் வழங்கப்படுவதன் அதிகரித்த முக்கியத்துவத்தைக் கோரி நிற்கின்றன. ILO இன் மேற்பார்வை அமைப்புகளால் நடாத்தப்பட்ட ஆலோசனைகளின்போது சம்பந்தப்பட்ட தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டமுக்கியமான பிரச்சினைகளுள் இவையும் உள்ளடங்கியிருந்தன: ஒன்றுகூடும் சுதந்திரத்திலும் ஒழுங்குபடுத்தும் உரிமையிலும் இருக்கும் குறைபாடுகள், வேலைத்தலங்களில் காணப்படும் பாகுபாடு, கட்டாய வேலை மற்றும் அபாயகரமான சிறுவர் தொழில் ஆகியவற்றுக்கெதிரான போதிய பாதுகாப்பின்மை, தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும், ஒப்பந்த ரீதியான தொழில்களில் ஈடுபடும் வேலையாட்களை உள்ளடக்கும் சட்டக் கட்டமைப்பின்மை, முத்தரப்பு மற்றும் இரு தரப்பு சம்பந்தப்பட்ட அர்த்தமுள்ள சமூகக் கலந்துரையாடல்களின் தேவை, ஆதார அடிப்படையிலான ஊதிய நிர்ணய பொறிமுறை.

பல வருடங்களாக இலங்கை, அரசாங்கத் துறையில் தொழில் அமைதியின்மையையும் சேவைகளில் தடங்கலையும் கொண்டிருந்தது. அரசாங்கத் துறையின் தொழில் முகாமைத்துவ உறவுகளில், சமூகக் கலந்துரையாடலுக்கும், பிணக்குகளைத் தடுப்பதற்கும் தீர்த்துவைப்பதற்குமான பொருத்தமான பொறிமுறைகளைக் கொண்டதுமான சூழல் காணப்படாமையே பாரிய பின்னடைவுகளில் ஒன்றாகக் காணப்பட்டது. ILO இன் 87 ஆவது மற்றும் 98 ஆவது சமவாயங்கள் மீது ILO இன் மேற்பார்வை அமைப்புகளால் தரப்பட்ட கருத்துக்களில் கூறப்பட்டதைப் போன்று, பொதுவான பிரச்சினைகளைக் கையாளும்போது முகாமைத்துவமும் ஊழியர்களும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளத்தக்க வழிவகைகளைக் காண்பதற்கு முறையான பொறிமுறை ஏதுமில்லை. பல தசாப்தங்களாக திருத்தி அமைக்கப்படாத "தாபனக்கோவை"யாலேயே அரச தொழிற்றுறையின் பல அம்சங்கள் கையாளப்படுகின்றன.

### விளைவு 2.1: நிறுவனமயப்படுத்தப்பட்டதும் செயற்படும் தன்மையுடையதுமான, சமூகக் கலந்துரையாடலுக்கான மற்றும் முத்தரப்பிற்கான பயனுறுதிமிக்க முறைமைகள்

விளக்கம்: தேசிய தொழில் ஆலோசனைச் சபை (NLAC) 1989 இல் அமைச்சின் ஆணையூடாகத் தாபிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கும் தொழிலாளர் தொழில்கொள்வோர் அமைப்புக்களுக்கும் இடையிலான பிரதான தேசிய முத்தரப்பு சமூகக் கலந்துரையாடலுக்கான பொறிமுறையாக உள்ளது. இதில் சமூக மற்றும் தொழில் கொள்கைகள், சர்வதேச தொழில் நியமங்கள் தொடர்பான விடயங்கள் தேசிய மட்டத்தில் கலந்துரையாடப் படுகின்றன.

NLAC ஆனது, சட்ட ரீதியானதொரு அமைப்பு அல்ல என்பது ஒரு குறைபாடாக முன்னரே அடையாளங்காணப்பட்டு, கண்ணியமான வேலைக்கான தேசியக் கொள்கையின் ஒரு முன்னுரிமையாக இவ்விடயம் முன்வைக்கப்பட்டிருந்தது. 2017 ஜூலை மாதத்தில், "முத்தரப்பு சமூகக் கலந்துரையாடலுக்குப் புத்துயிரூட்டி, ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான ஒப்புதலைப் பெறுதல்" என்பதன் மீது நடந்த ஒரு முத்தரப்பு ஆலோசனைக் கூட்டத்தில், NLACI ஒரு சட்டரீதியான அமைப்பாகத் தாபிப்பதற்குத் தேவைப்படும் திருத்தங்களை முன்னெடுப்பதற்கான ஒரு பிரகடனத்திற்கான வரைபைசம்பந்தப்பட்ட தரப்பினர் தயாரித்தனர். இலங்கையில் சமூகக் கலந்துரையாடலுக்கான ஒரு வலுவான தளமாக NLAC இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென முத்தரப்புப் பிரதிநிதிகளால் மேலும் ஓர் ஒருமைப்பாடு முன்வைக்கப்பட்டது.

இலங்கை 1975 இல், 1970 இன் (131 ஆம் இலக்க) ஆகக்குறைந்த சம்பளத்தை அமைப்பதற்கான சமவாயத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆயினும், இலங்கையில் சம்பளத்தை அமைக்கும் செயற்பாடானது முறைசார்ந்த துறைகளின் தொழில்களுக்கே கவனஞ் செலுத்தும் அதேவேளை, சம்பளங்களை அமைப்பதற்கான முறைகள் அவற்றின் முறையான பகுப்பாய்வு மற்றும் சமூகக் கலந்துரையாடல் இன்மை ஆகியவற்றால் கேள்விக்குட் படுத்தப்படுகின்றன. 2016 மார்ச் மாதத்தில் இலங்கை, வேலையாட்களின் ஆகக் குறைந்த வருமான மட்டத்தை உத்தரவாதப் படுத்துவதற்காக, சம்பள அமைப்புகளின் மீது இரு சட்டங்களை ஏற்றுக்கொண்டது. 2016 இன், 3 ஆம் இலக்க, தேசிய ஆகக் குறைந்த சம்பளங்கள் சட்டம், மற்றும் 2016 இன் 4 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம் (BRAWA) ஆகியன, வேலையாட்களின் ரூ.2,500 (இதை எழுதும்போது கிட்டிய அமெரிக்க டொலர்கள் 16) சம்பள அதிகரிப்பை, மாதமொன்றுக்கு ரூ. 40,000 இற்குக் குறைவாக உழைக்கும் எல்லா வேலையாட்களுக்கும் தாபித்தன. வீட்டு வேலையாட்கள் தவிர்ந்த நாட்டின் எல்லா வேலையாட்களுக்கும் ஆகக்குறைந்த



தேசிய மட்ட ஊதியத்தை வழங்குமாறு எல்லாத் தொழில்கொள்வோரையும் கட்டாயப்படுத்தும் ஏற்பாடு, இதுவே நாட்டில் முதன்முறையானதாகும்.

இலங்கையில் சம்பளங்களை அமைக்கும் செயன்முறையானது, 2016 இன் 3 ஆம் இலக்க, தேசிய ஆகக்குறைந்த சம்பளங்கள் சட்டத்தினூடாகவும், 44 சம்பளச்சபைகளினூடாகவும் பெரும்பாலும் குறித்த கைத்தொழில்களையே கவனம் செலுத்துகின்றது. முயற்சியாண்மைகளது போட்டித்தன்மை மற்றும் செயற்றிறன் முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் மீது BRAWA இன் தாக்கங்கள் பற்றி EFC ஆல் நடாத்தப்பட்ட அளவீடொன்றின் கண்டுபிடிப்புகளை வெளியிடுவதற்காக, 2017 ஏப்ரல் மாதத்தில் நடந்த முத்தரப்பு ஆலோசனைக் கூட்டத்தில், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களில் பெரும்பான்மையினர் ஊதிய நிர்ணயிப்பு சமூகக் கலந்துரையாடல் செயன்முறையூடாகவே நடைபெற வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டனர். மேலும், தேசிய மற்றும் துறைசார்ந்த ஊதிய அமைப்பு முறைகளுக்கான தொழில்நுட்ப அணுகுமுறையானது போதுமான தகவல்களையும் ஆய்வையும் கொண்டிருக்கவில்லை என்ற விடயம், ஒரு முக்கியமான தடையாக முன்னிலைப்படுத்தப்பட்டது. தேசிய சம்பள அமைப்பிற்குரிய ஒரு வழிகாட்டல் திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆதரவை வழங்குமாறு எல்லாத் தரப்பினரும் ILO வைக் கேட்டுக்கொண்டனர். இது, வேலையாட்களினதும் அவர்களது குடும்பங்களினதும் தேவைகளையும், ILO வின் சமவாயம் 131 (ஆகக்குறைந்த சம்பளங்களைத் தீர்மானித்தல்) கூடிய பொருளாதாரக் காரணிகளையும் கவனத்திலெடுத்து, ஊதியங்களைத் தீர்மானிப்பதில் பக்கஞ்சாராத ஓர் அணுகு முறையைத் தரும் எனவும் அவர்களால் கூறப்பட்டது.

சமூகப் பங்காளர்களது ஈடுபாடு, சம்பளக் கொள்கையால் மிகவும் நேரடியாகத் பாதிக்கப்படுவோரது கவலைகளையும் முன்னுரிமைகளையும் முன்வைக்கும் என்பதனால், அது மிகவும் பயனுறுதியுடன் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். தொழில்நுட்ப நிபுணத்துவமுள்ள சுதந்திரமான நிபுணர்கள், புள்ளிவிபர அலுவலர்கள் ஆகியோரும் காலத்துக்குகந்த தரவுகளையும் தகவல்களையும் வழங்குவதில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்க முடியும். ஆகக்குறைந்த ஊதியங்களது விளைவுகளை முறையாகக் கண்காணித்தலானது, சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறைமையின் முக்கிய பாகமாக இருக்க முடியும். இந்த முறைமையானது சமூகப் பங்காளர்களுக்கு, சமூகக் கலந்துரையாடலை உள்ளடக்கிய பொறிமுறையை மேம்படுத்துவதற்கான தகவல்களை ஒழுங்கான முறையில் வழங்க வேண்டும்.

இலங்கை, அடிப்படையான கோட்பாடுகள் மற்றும் வேலைக்கான உரிமைகள் (FPRW) பற்றிய எட்டு மூலாதாரச் சமவாயங்கள் உட்பட்டILOவின் 43 சமவாயங்களை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், (இவற்றில் 30 நடைமுறையிலுள்ளன, 10 சமவாயங்கள் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளன, 3 இரத்துச் செய்யப்பட்டன) அவற்றின் ஏற்பாடுகளை தேசியச் சட்டங்களில் ஏற்றுக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் கடமைப்பட்டுள்ளது. மிகச் சமீபத்தில் கடல்சார் தொழில் சமவாயம், வேலைவாய்ப்புக் கொள்கைச் சமவாயம், மாலுமிகளின் அடையாள ஆவணங்கள் பற்றிய சமவாயம் ஆகியனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசாங்கம், ILOவின், கட்டாய வேலை தொடர்பான 2014 ஆம் ஆண்டின் விதிமுறைகளை (P29), 2018 ஆம் ஆண்டின் முடிவின் முன் ஏற்றுக்கொள்வதற்கான தனது கடப்பாட்டைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. அதேவேளை, சில சமவாயங்கள் (தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் மற்றும் இடம்பெயர்வு), கடந்த DWCP இன் காலகட்டத்திலும் அதற்கு முன்னருமான ILOவின் தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளைத் தொடர்ந்து வரிசையில் காத்திருக்கின்றன. ILOவின், சமவாயங்களின் பிரயோகம் மற்றும் சிபார்சுகளுக்கான நிபுணர் குழு (CEACR), சில மூலாதாரச் சமவாயங்களை அமுல்படுத்துவதில் சில இடைவெளிகளை அடையாளங்கண்டுள்ளது. விசேடமாக, சமவாயங்கள் - 87 (ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்), 98 (கூட்டாகப் பேரம் பேசுதல்), 111 (தொழில்வாய்ப்பில் பாகுபாடு), 182 (அபாயகரமான சிறுவர் தொழில்), 29 மற்றும் 105 (கட்டாய வேலை), 100 (சமத்துவம்), 81 (தொழிற் பரிசோதனைகள்). இலங்கைக்கு EU-GSP+ சமீபத்தில் மீள வழங்கப்பட்டதுடன், அதற்கான நிபந்தனைகளில் மிகவும் நெருக்கமாகக் கண்காணிக்கப்படவுள்ள நிபந்தனையானது, ILOவின் மூலாதாரச் சமவாயங்களை வினைத்திறனாக அமுல்படுத்துவதாகும். இவ்வாறு மூலாதாரச் சமவாயங்களை வினைத்திறனாக அமுல்படுத்துவதிலுள்ள பின்னடைவானது, ஐரோப்பியச் சந்தையில் முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதில் இலங்கையின் சந்தர்ப்பங்களுக்கு இடையூறாக இருக்கும். இதனால், இந்தச் சமவாயங்களை வினைத்திறனாக அமுல்படுத்துவதில் எல்லாத் திரப்பினரதும் திறனை மேம்படுத்துதலானது அவசியமாகின்றது.

### வெளியீடு 2.1.1: மேம்படுத்தப்பட்ட சமூகக் கலந்துரையாடல் ஊடாக தேசிய குறைந்தத பட்ச ஊதியத்தை அமைத்தல்

தேசிய ஆகக குறைந்த ஊதியத்தை அமைப்பதற்காக அறியப்பட்ட மூலோபாய அணுகுமுறைக்கு போதுமான தகவல்களும் எந்தவொரு ஆய்வும் இருந்திருக்கவில்லை என்பது ஒரு முக்கியமான தடையாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களால் முன்னலைப்படுத்தப்பட்டது. சம்பளங்கள் பற்றிய, தனியார் துறையைப் பாதித்த தீர்மானமானங்களின் மீது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையொன்றில், சமூகக் கலந்துரையாடலூடாக ஆகக் குறைந்த சம்பளங்களைத் தீர்மானிப்பதற்கு உதவும் உரிய நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் தேவை வெளிப்படுத்தப்பட்டதுடன், சம்பளத் தீர்மானங்களுக்காக, ஆதார அடிப்படையிலான, புள்ளிவிபரங்களையும் ஆய்வையும் பயன்படுத்தும் பலமனதோர் அணுகுமுறையின் தேவையும் வலியுறுத்தப்பட்டது.

ILO ஆனது, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இந்தச் செயற்பாடுகளைப் பின்பற்றுவதற்கான ஏற்புடைய தொழில்நுட்ப உதவிகளை, ஓதியங்களை அமைக்கும் தற்போதுள்ள செயன்முறையையும்,

சட்டக் கட்டமைப்பையும் மதிப்பீடு செய்வதற்காகவும், துறைசார் சம்பளச் சபைகளால் செய்யப்படும் தேசிய ஆகக்குறைந்த சம்பள அமைப்புப் பொறிமுறையை பலப்படுத்துவதற்கு வழிகாட்டல் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான முத்தரப்புக் குழுவொன்றை அமைப்பதற்காகவும், கல்விசார் துறைகளிலிருந்தும் உரிய பங்குதாரர்களிடமிருந்தும் நிபுணர்களது பங்களிப்பு உட்பட்ட உரிய ஆதரவுகளுடன் வழங்கும். இவ்வாறான தலையீடுகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:

- பின்வரும் பிரதான காரணிகள் பற்றிய, ஆதாரங்களின் அடிப்படையிலான ஆய்வு மற்றும் பகுப்பாய்வுகள் தேவைப்படுகின்றன அவையாவன: முழுதழுவு அடிப்படை விகிதங்கள் சீர்படுத்துகை இணக்கம் மற்றும் யதார்த்தமானதும் முறையானதுமான ஊதிய அமைப்புப் பொறிமுறைக்கான புள்ளிவிபரத் தகவல்களின் பயன்பாடு.
- துறைசார் சம்பளச் சபைகளால் செய்யப்படும் தேசிய ஆகக் குறைந்த சம்பள அமைப்புப் பொறிமுறையை பலப்படுத்துவதற்கு, அரசாங்கம் மற்றும் சமூகப் பங்காளர்கள் ஆகியோரது பங்குபற்றலுடன், வழிகாட்டல் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- முன்னரை விடவும் நன்கு வடிவமைக்கப்பட்டதும் செயற்பாட்டுக்குரியதுமான ஆகக் குறைந்த சம்பள அமைப்புப் பொறிமுறை.

வேலையாட்களினதும் அவர்களது குடும்பங்களினதும் தேவைகளையும், பொருளாதாரக் காரணிகளையும் கருத்திலெடுத்து, நாளது வரைப்பட்டதும் பொருத்தமானதுமான புள்ளிவிபரச் சுட்டிகளைப் பயன்படுத்துவது, 1975 இல் முன்பே இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, 131 ஆம் இலக்க, ஆகக்குறைந்த சம்பளங்களைத் தீர்மானித்தல் பற்றிய சமவாயத்துடன் இணைந்த முழுமையான ஆலோசனையுடனான ஓர் அடித்தளத்தை வழங்கும்.



### வெளியீடு 2.1.2: தொழில் மற்றும் சமூகக் கொள்கை வகுத்தலில், மேம்பட்ட தேசிய முத்தரப்புச் சமூகக் கலந்துரையாடல்

NLAC ஆனது, அதன் தற்போதைய வடிவத்தின் காரணமாக, பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது. அறிவுபூர்வமான தீர்மானங்களை எடுப்பதற்கு அதற்கு வாண்மைத்துவ ரீதியான ஒரு கட்டமைப்பு தேவைப்படுவதுடன், பால் ரீதியான சமத்துவமுடைய பலமானதும் உண்மையானதுமான தொழில் பிரதிநிதித்துவத்தினது தேவையும் உள்ளதுடன், பொருத்தமான செயற்பாட்டுப் பொறிமுறையொன்றும் மேலும் தேவைப்படுகிறது. ஒரு சட்டரீதியான அமைப்பாக NLAC ஐ நிறுவனமயப்படுத்துவதற்கு, உரிய தரப்பினருக்கான தொழில்நுட்ப உதவிகளை ILOஆல் வழங்க முடியும். ILO வின் C144 முத்தரப்புச் சமவாய ஆலோசனையின் பிரகாரம், NLAC ஆனது, மீள்கட்டமைக்கப்பட வேண்டும். இவ்வாறானதொரு சட்டரீதியான அமைப்புக்குரிய ஆணைக்கு ஆதரவு வழங்குவதற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய அமைச்சுக்களது ஒத்துழைப்புடன் உரிய தரப்பினரும் பரிந்துரை செய்ய வேண்டும். இலங்கையில் சமூகக் கலந்துரையாடலுக்கான பயனுறுதிமிக்கதொரு தளமான NLACஐ மாற்றியமைப்பதற்கான, இவ்வாறானதொரு முன்முயற்சியைத் மேலும் தொடர்வதற்கு முத்தரப்பு அங்கத்தவர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர்.

மீளாய்வு தேவைப்படுகின்ற ‘தாபனக் கோவை’யாலேயே அரச தொழிற்றுறையின் பல அம்சங்கள் கையாளப்படுகின்றன. அரச தொழிற்றுறையின் தொழிற் சங்கங்கள் வேலைத்தலங்களிலோ அல்லது தேசிய மட்டத்திலோ முகாமைத்துவத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு உரிய இடம் கிடைப்பது மட்டுப்பாடாக உள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் அவர்களது நடவடிக்கைகள் வேலைநிறுத்தங்களின் ஊடாகவோ அல்லது அரசியல் பிரதிநிதித்துவம் ஊடாகவோ மேற்கொள்ளப்படுகின்றன. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் (PSC) எல்லைக்குள் வரும் விடயங்கள் தொடர்பான பிணக்குகள், பொதுவாக அந்த அமைப்பிற்கு அனுப்பப்படுகின்றன் இவ்வாறானதொரு செயன்முறை தோல்வியடையும்போது, ஊழியர்களுக்கு நிர்வாக மேன்முறையீட்டு நியாயமன்றுக்கும் (AAT), அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும், இறுதியாக உயர் நீதிமன்றத்திற்கும் மேன்முறையீடு செய்யும் உரிமை உள்ளது.

இவ்வாறான பல்வகைப் பாதுகாப்பு இருப்பினும் கூட, நிவாரணம் பெறுவதற்கான வழிமுறை தொடர்பான அனுபவங்களினூடாக அறியக்கூடியதாயிருப்பது யாதெனில், இந்த நிறுவனங்களும் அவற்றின் செயன்முறையும் வருமுன் காப்பதற்கான செயற்பாட்டையோ அல்லது தீர்த்து வைப்பதற்கான செயற்பாட்டையோ கொண்டிராததால், அரசாங்கத்துறையில் வேலைநிறுத்தச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், முன்னைய DWCP இன் கீழ் அரசாங்கத்துறைப் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் பொறிமுறையொன்றை அமைப்பதற்கான தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டதுடன், அது ஒருமித்த அபிப்பிராயத்திற்காக தேசிய மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

NLAC ஆனது, தொழில் அமைச்சினால் கூட்டப்பட்டு, மேற்பார்வை செய்யப்படுவதுடன், தற்போதைய NLACஇல், பல அரசாங்கத் துறைத் தொழிற் சங்கங்கள் உள்ளிட்ட 14 சங்கங்கள் அங்கம் வகித்தாலும், அங்கு ஆராயப்படுபவை முற்றிலும் தனியார் துறை பற்றியதாகவே உள்ளன. தனித்துவமான நிலைமைகளும் தேவைகளும் அரசாங்கத் துறையில் காணப்படும்போது,

செயன்முறையையும், சான்றுப்படுத்தத்தக்க மற்றும் சமமான நியமங்களையும் திரட்டுதல். IOM & ILO (2017) GCCநாடுகளில் கட்டுமானத் தொழிலிலுள்ள இலங்கையிலிருந்து வந்த தொழிலாளர்களது திறன்களின் தொகுப்புகளும், தொழிற் சந்தைப் போக்குகளும்.

44 ILO (2016),இலங்கையில் பெண்களது தொழிற்படைப் பங்கேற்பைப் பாதிக்கும் காரணிகள்.

உரிய தரப்பினதால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்தானது, ILO வின் சமவாயம் 151 – தொழில் உறவுகள் (அரச சேவைகள்), இது இன்னும் இலங்கையால் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டாலும் கூட, அதன் ஏற்பாடுகளுக்கிணங்க, அரசாங்கத் துறை ஆலோசனைக்கான கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும்.

ILO ஆனது, தொழில் அமைச்சு, சமூகப் பங்காளர்கள், ஏனைய பொருத்தமான நிறுவனங்கள் ஆகியவற்றுடன், தனியார் மற்றும் அரசாங்க துறைகள் இரண்டிலும் சமூகக் கலந்துரையாடல் பொறிமுறைகளைப் பலப்படுத்துவதில் ஈடுபடும். இதன் தலையீடுகளாவன:

- மற்றைய நாடுகளின் இதே மாதிரியான அனுபவங்களைக் கொண்டு, ILO வின் அடிப்படை வழிகாட்டுதல்களின் பிரகாரம் நியமிக்கப்படும் அங்கத்தவர்களுடன், NLAC ஆனது, ஆய்வுக் கலந்துரையாடல்களின் தொழில்நுட்ப ஆவணங்களைச் சமர்ப்பிக்கத்தக்க, ஒரு தொழில்நுட்ப செயலகத்துடன் கூடிய, ஒரு சட்ட ரீதியான அமைப்பாகத் தாபிக்கப்படுதல்.
- முத்தரப்பு ஆலோசனை (சர்வதேச தொழில் நியமங்கள்) மீதான சமவாயம் 144 இன் பிரகாரம் ILO வின் வழிகாட்டுதல்களுக்கமைவாக, NLACஐ, பிராந்திய மட்டத்தில் பலப்படுத்துதல்.
- தொழிற் சந்தை ஆளுகை சம்பந்தமாகத் தொடர்கின்ற பிரச்சினைகளில், இதே மாதிரியான பொறிமுறைகள் வினைத்திறனாகச் செயற்படும் நாடுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை / சிறந்த நடவடிக்கைகளை எமக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளுதல்.
- முன்வைக்கப்பட்டுள்ள, அரசாங்கத்துறைப் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் பொறிமுறையை அமுல்படுத்துவதற்கும், தாபனக் கோவையை மீளாய்வு செய்வதற்கும் ஆதரவு கோரி உரிய பங்குதாரர்களுடன் கலந்துரையாடுதல்.

### வெளியீடு 2.1.3: விரிவாக்கப்படும் இருதரப்பு வேலைத்தலக் கூட்டுறவு

அடுத்தடுத்த அரசாங்கங்கள் பல காலங்களாக தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக, தொழில்கொள்வோரையும் தொழிற் சங்கங்களையும் நிறுவன மட்டத்தில் குறித்த பிரச்சினைகளுக்குத் சாத்தியமான தீர்வுகளைக் காண்பதற்கு, கலந்துரையாடலில் ஈடுபடுத்தினாலும், தொழில்கொள்வோரதும் தொழிற் சங்கங்களினதும் வேறுபட்ட நலன்கள் காரணமாக, அது வெற்றியளிக்கவில்லை. நிறுவன மட்டத்தில் சமூகக் கலந்துரையாடலுக்கு மீண்டும் முக்கியத்துவமளிப்பதற்கான முடியுமான தலையீடுகளை உறுதிபடத் தீர்மானிப்பதற்காக, பொதுவான நலன்கள் பற்றிய பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான, இரு தரப்புச் சமூகக் கலந்துரையாடல் பொறிமுறைகளை உரிய தரப்பினர் முன்வைத்துள்ளனர். தொழில் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ உறவுகளை இது மேம்படுத்தும் எனவும், உற்பத்தித்திறன் இலாபங்களைப் பெறுபேறாகக் கொண்டுவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் அமைச்சின் தொழில் திணைக்களத்தில் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுக்கான அலகொன்று, முகாமையாளர்களையும் வேலையாட்களையும் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு சம்பந்தமாகப் பயிற்றுவிப்பதற்காகவும், சமூகக் கலந்துரையாடலையும் கூட்டுப் பேரம்பேசுதலையும், நிறுவன மட்டத்தில் உடன்பாடுகளை எட்டுவதனையும் ஊக்குவிப்பதற்கான மூலோபாயங்களையும் கொள்கைகளையும் அமுல்படுத்த உதவுவதற்காகவும் உள்ளது. ஆயினும், இந்த அலகின் திறன் மற்றும் தேவைகள், சமூகக் கலந்துரையாடல் ஊடாக, நிறுவன மட்டத்தில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது தடுப்பதற்கு, உரிய நேரத்தில் பயனுறுதி வாய்ந்த ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காகப் பலப்படுத்தப்பட வேண்டியுள்ளன.

இதில் முக்கிய தலையிடுகளாவன:

- குறித்த துறைகளுள் இரு தரப்புச் சமூகக் கலந்துரையாடல் பொறிமுறைகளை முன்னோடியாக உருவாக்குதல்.
- மேற்பார்வைப் பொறிமுறை உட்பட்ட இரு தரப்புச் சமூகக் கலந்துரையாடல் பொறிமுறைகளை அமைப்பதற்காக வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.
- ILOவின் கோட்பாடுகளுக்கமைவாக, வேலைத்தலக் கூட்டுறவுக் கோட்பாடுகள் மீதான மேலதிக செயற்பாடுகளை முன்னெடுத்து, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பிரச்சாரத்தை வடிவமைத்தலும் செயற்படுத்தலும்.
- சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுக்கான அலகின் பொறுப்பான அலுவலர்களது திறனை, சமூகக் கலந்துரையாடல் மற்றும் கூட்டுப் பேரம்பேசுதல் மீது பயனுறுதி வாய்ந்த ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காகப் பலப்படுத்துதல்.

### விளைவு 2.2: மேலும் வினைத்திறனான வேலைத்தலப் பரிசோதனையுடனான மேலும் பயனுறுதி வாய்ந்த தொழில் நிர்வாக முறைமை

விளக்கம்: பயனுறுதி வாய்ந்த தொழில் நிர்வாகமும் பரிசோதனையும் முகங்கொடுக்கும் முக்கிய சவால்களிலொன்று முறைசாராப் பொருளாதாரத்தின் பரப்பாகும். தொழிற் படையின் மூன்றிலிரு பங்கினர் முறைசாரா நிலையிலேயே தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பான்மையினர் தமது சொந்தத்தில் வேலை செய்பவர்களாவர். தனியார் துறையின் முறைசார் தொழில்களில் தொழிலிலமர்ந்துள்ளோர் வேலைப்படையினரின் ஐந்திலொரு பங்கினராக உள்ளனர். முறைசாராத் துறையிலுள்ள பல வேலையாட்கள் குறைந்த வருமானங்களைப் பெறுவதுடன், சமூகப் பாதுகாப்பு வலைப்பின்லுக்கு வெளியிலேயே உள்ளனர். தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் தொடர்பான (OSH) பாதுகாப்பு போதுமான அளவில் விளங்கிக்கொள்ளப்படாததுடன், அவற்றின் பிரயோகமும் போதுமானதல்ல.

தொழிற் சந்தை விதிமுறைகள் மேலும் சிறப்பாக, எல்லா வேலையாட்களும் அடிப்படையான பாதுகாப்பை அனுபவிப்பதற்காக, உறுதிப்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. சிக்கலான விநியோகச் சங்கிலித் தொடருடன், குறிப்பாக விரைவாகப் பரிணமிக்கும் போட்டி நிறைந்த உலக நிலைமையில் ஒரே மட்டத்திலுள்ள ஒரு விளையாட்டுக் களத்தில் நிறுவனங்கள் போட்டியிடுகின்றன என்பதையும் உறுதிபடுத்த வேண்டும். எனவே, தொழிற் சந்தைக் கொள்கைகளை, வேலையாளர் / தொழில்கொள்வோர் பாதுகாப்புகளைப் போதுமான அளவில் உறுதிப்படுத்துவதற்காக, அதேவேளை,

45 மேற்குறித்தது.
46 மேற்குறித்தது., மற்றும் இலங்கை மத்திய வங்கிஇ 2014, வருடாந்த அறிக்கை.
47 ILO (2016),இலங்கையில் பெண்களது தொழிற்படைப் பங்கேற்பைப் பாதிக்கும் காரணிகள்.

வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான வாய்ப்புகளைத் தடுக்காத வகையிலும் ஒழுங்காக மீள்பார்வை செய்வது அவசியமாகின்றது.

தொழிற் சட்ட சீர்திருத்தங்கள் மீதான கலந்துரையாடல்கள் நடாத்தப்படுவதுடன், அவை தொழிற் சங்கங்களாலும் தொழில் கொள்வோராலும் தனித்தனியாகவும் இருதரப்பாகவும் மற்றும் முத்தரப்பாகவும் நடாத்தப்பட்டன. கருத்தொருமைப்பாடு பெறப்பட்ட பல விடயங்கள் இதில் காணப்பட்டாலும், ஏனைய விடயங்கள் ஆலோசனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

தொழில் அமைச்சு, தொழிலில் அடிப்படைக் கோட்பாடுகளையும் உரிமைகளையும் பலப்படுத்தும் தனது இணக்கத்துக்கான அர்ப்பணிப்பையும், வேலைத் தலங்களை மேம்படுத்தும் முன்முயற்சிகளூடாக மற்றைய தொழில்நுட்ப மற்றும் ஆளுகை மரபுகளையும் வெளிப்படுத்தினாலும், ILO வின் சமவாயங்களின் பிரயோகம் மற்றும் சிபார்சுகளுக்கான நிபுணர் குழுவும் (CEACR),



ஒன்றுகூடும் சுதந்திரத்திற்கான குழுவும் (CFA)சட்டங்களுக்கும் அமுல்படுத்தலுக்கும் இடையிலான இடைவெளிகளைச் சுட்டிக் காட்டியுள்ளன. இந்த இடைவெளிகள் காணப்படும் விடயங்களாவன, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமவாயங்களில் ஒன்றுகூடலுக்கான சுதந்திரம், கூட்டுப் பேரம்பேசுதல், மகப்பேற்றுப் பாதுகாப்பு ஆகியனவும், கட்டாய வேலை, தொழிற் பரிசோதனைகள், சமத்துவமும் பாகுபாடின்மையும் ஆகியனவும் உள்ளடங்கும்.

### வெளியீடு 2.2.1: தொழில் நிர்வாகத்தின் திறன் அபிவிருத்தியும், வினைத்திறனான பிணக்குத் தீர்வுக்கான பொறிமுறைகளும்

சிறந்த தொழில் உறவுகளுக்கு அவசியமான அம்சங்களாவன, பலமான தொழில் நிர்வாகமும் பலமான தொழில் கொள்வோர்-வேலையாளர் உறவுகளும் ஆகும். தொழில் நிர்வாகத்தின் வினைத்திறன் கவனத்திற்குரிய பாரிய விடயமாக இருக்கிறது, குறிப்பாக பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனை / சமரசம் ஆகிய சேவைகளிலாகும். பெரிய அளவிலான முறைசாரா தொழிற்படை செயற்பாட்டளவில் மேற்படி சேவைகளைப் பெறாது இருக்கும்போது, பல வேலையாட்கள் தமது அடிப்படை உரிமைகளை இழந்து, தமது வேலைவாய்ப்புக்குரிய ஆகக்குறைந்த நிபந்தனைகளை அனுபவிக்காது அபாயத்தில் இருக்கிறார்கள்.

தொழில் திணைக்களத்தின் ஆலோசனைச் சேவைகளும் வினைப்படுத்தும் திறனும், குறிப்பாக பிணக்குகளைத் தீர்த்து வைத்தலிலும் வராது தடுப்பதிலும், பலப்படுத்தப்பட வேண்டியுள்ளது. தற்போது, பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் செயன்முறைகள் மிகவும் நீண்டவைகளாக நோக்கப்படுவதுடன், அவை வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கவைகளாக மாற்றப்படுவதற்கு, மீள்பார்வைக்குட்படுத்தப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன. தொழில் திணைக்களத்திலுள்ள, பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் அலுவலர்களின் திறன்கள் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன. பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் பற்றிய சமரசப்படுத்துபவர்களுக்கான ஒரு கையேடு, ILO ஆல் உதவியளிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை உபயோகப்படுத்துவதற்கான ஓர் ஆர்வம் தேவைப்படுகிறது. மேலதிகமாக, தொழில் அமைச்சு, தொழில் ஆணையாளர் அதிபதியின் அலுவலகத்தில், “விசேட புலனாய்வுகள் அலகு” ஒன்றை வைத்துள்ளது. இந்த அலகு, சட்டரீதியான தேவைகளுக்கு இணங்கி நடக்காதபோது, அதனைப் புலனாய்வு செய்வதில் விரைந்து செயற்பட வேண்டியிருப்பதுடன், இவ்வாறு இணங்கி நடக்காத சம்பவங்களைக் கவனிப்பதில் மேலும் தன்முனைப்புடன் இருக்கவும் வேண்டியுள்ளது. இணங்கி நடக்கும் செயற்பாடுகளுக்கான இலக்குகள் அவற்றுக்கான மூலோபாயங்களையும் திட்டங்களையும் உருவாக்குவதனூடாக, உருவாக்கப்படவேண்டியுள்ளன.

தற்போது, தொழிற் படையின் 30% ஆனவர்கள் மாத்திரமே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார (OSH) சட்ட ஏற்பாடுகளின் நன்மைகளை அனுபவிக்கின்றனர். புதிய தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரிச் சட்டம் ILO ஆல் தொழில்நுட்ப உதவியளிக்கப்பட்டு, மேலும் அதிகமான வேலையாட்களை உள்ளடக்குவதற்காக வரையப்பட்டுள்ளது. இது OSH பொறியியலாளர்களது மட்டுப்படுத்தப்பட்ட செயன்முறைத் திறன்களை மேம்படுத்துவதற்கும், புதிதாகத் தோன்றும் கைத்தொழில்களுக்கு புதிய நியமங்களை உருவாக்குவதற்கும், தகவல் சேகரிப்பையும் வெளியீட்டையும் மேலும் பலப்படுத்துவதற்கும், OSH தொடர்பான கொள்கையை அமுல் படுத்துவதில் முத்தரப்பினருக்கும் உதவுவதற்கும், வேலைத் தலங்களில் இருதரப்பு OSH குழுக்களை அமைப்பதற்கும், வேலையாட்களிடையேயும் தொழில்கொள்வோரிடையேயும் OSH மீதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், ILOவின் ஆலோசனைக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து கொள்வதற்கும் பிரயோசனம் மிக்கதாயிருக்கும். இந்தச் சட்டத்தின் வெளியீடானது பல வருடங்களாகத் தேங்கியிருக்கிறது, ஆனால் இதன் அவசியம் இன்னும் தேவையாகவே உள்ளது.

இதில் முக்கிய தலையிடுகளாவன:

- தேசிய தொழிற் பரிசோதனைக் கொள்கையொன்றை உருவாக்குவதற்கான உதவிகள்
- பிணக்குகளைத் தீர்த்துவைப்பதில் (OSH சம்பந்தப்பட்டவை, சிறுவர் தொழில் பற்றிய பிரச்சினைகள் மற்றும்பாகுபாடு உட்பட) ILO மேற்பார்வை அமைப்புக்களின்

48 மேற்குறித்தது.
49 உலக வங்கியின் குழு (2017), வேலைக்குச் செல்லுதல்: இலங்கையின் தொழிற்படையில் பெண்களது சாத்திக்கூறைத் திறத்தல். https://opnknowledge.worldbank.org/handle/10986/28660.
50 2017 ஏப்ரல் மாதத்தில் நடந்த,EFCஆல் ஒழுங்குபடுத்தப்பட்ட முத்தரப்புப் பயிற்சிப்பட்டறையின் கண்டுபிடிப்புகள்.



கருத்துக்களுடன், தொழில் திணைக்களத்தின் பொறுப்பை மேலும் மேம்படுத்துதல்.

- பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் தற்போதுள்ள செயன்முறையின் (பால் ரீதியான பரிணாமம் உள்ளிட்ட) வர்த்தகச் செயன்முறை மீளாய்வு ஒன்று, பொறுப்பை மேம்படுத்தும் நோக்கில், உருவாக்கப்படுதல்.
- வேலை உரிமைகள் பற்றிய சம்பவங்களில் தற்போதுள்ள விசேட புலனாய்வுகள் அலகின் பொறுப்பை மேலும் மேம்படுத்துதல்.
- வேலை உரிமைகள் மீறப்படும் சம்பவங்களில் வினைத்திறனுடன் செயற்படுவதற்காக அவசரமாகச் செயற்படும் அலகொன்றைத் தாபித்தல்.

### வெளியீடு 2.2.2: ILO சமவாயங்களது அமுலாக்கத்திற்காக, சமூகப் பங்காளர்களது திறனை அதிகரித்தல்

ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களை வினைத்திறனாக அமுல்படுத்துதல் மற்றும் புதிய சமவாயங்களை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியன, இலங்கையில் கண்ணியமான தொழில் நடைமுறைகளை உறுதிப்படுத்துவதன் மையமாக உள்ளன. ஆயினும், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அமுல்படுத்துதல் செயன்முறைக்கான ILO இன் மேற்பார்வையானது, மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய விடயங்களை அடையாளங் கண்டுள்ளது. புதிய சமவாயங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக, இலங்கை, கட்டாய வேலை பற்றிய ILO விதிமுறைகள் 29 ஐ 2018 ஆம் ஆண்டு முடிவில் ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, கொடுக்கப்பட்டுள்ள EU-GSP+ நிபந்தனைகளின் பிரகாரம், இலங்கைக்கும் EUஇற்கும் இடையிலான வர்த்தகத்தைப் பலப்படுத்துவதற்காக அரசாங்கம் பல எண்ணிக்கையான சமவாயங்களை ஏற்றுக்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த அக்கறை, ஏற்கனவே ஏற்றுக்கொண்ட சமவாயங்களை அமுல்படுத்துதல் பற்றியதாகும். OSH, தொழிலாளர் வெளியேற்றம், தொழிற் பரிசோதனைகள், கட்டாய வேலை ஆகியன பற்றிய தொழிற் சட்டங்கள் தமக்குரிய குறைபாடுகளை இன்னும் கொண்டிருப்பதுடன், அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களுடன் முழுமையாகச் சீராக்கப்படவில்லை. இதனால், ILO மேற்பார்வை அமைப்புக்களின் சிபார்சுகளுக்கு இடம் வழங்குவதற்காகவும் விரைவாகச் செயற்படுத்துவதற்காகவும் சட்டச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினரின் திறன்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு வளங்களைப் பயன்படுத்தவும் வேண்டியுள்ளது.

அடையாளங்காணப்பட்ட இந்த மட்டுப்பாடுகளுக்காக, பின்வரும் தலையீடுகள் மேற்கொள்ளப்படும்:

- ILO மேற்பார்வை அமைப்புக்களின் கருத்துக்களால் வழிகாட்டப்பட்டதற்கிணங்க, ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களின் வினைத்திறனான அமுல்படுத்துதலுக்கான தொழில்நுட்ப உதவிகளும் மற்றும் புதிய சமவாயங்களை ஏற்றுக்கொள்ளுதலும்.
- தற்போதைய சட்டங்களிலுள்ள இடைவெளிகள் பற்றிய ஆய்வும், ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களின் அடிப்படையிலான புதிய சட்டங்களும்.
- பொருத்தமான வேறு சமவாயங்களை ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரைத்தல்.

### விளைவு 2.3: புதிய பரிணாமங்களுக்குட்பட்ட பல்வித வேலை வடிவங்களுக்கு ஏற்ற வகையில் சட்டங்களும் கொள்கைகளும் நவீனமயப்படுத்தப்படல்

இலங்கை, வேலைவாய்ப்பின் பாதுகாப்பு மற்றும் வேலையில் உள்ளவர்களது நலன்புரி விடயங்கள் ஆகியவற்றிற்கான பலமான சட்டக் கட்டமைப்பொன்றைக் கொண்டுள்ளது. தற்போதைய மற்றும் எதிர்கால தொழில் மாற்றங்களுக்கமைய தொழிற் சட்டச் சீர்திருத்தங்கள் முக்கியமானவையாக உள்ள அதேவேளை, அவ்வாறான சீர்திருத்தங்களின் தன்மையும் அளவும் பற்றிய விடயங்கள் விவாதத்துக்குட்பட்டுள்ளன. தொழிற் சட்டச் சீர்திருத்தங்களில், கண்ணியமாக வேலை தொடர்பான பாதுகாப்புகளை வழங்குவதன் கடப்பாடுகளைச் சமப்படுத்துவதில் ஒரு சவால் காணப்படுகின்றது.

தொழிற் சட்டச் சீர்திருத்தங்கள் பின்வரும் விடயங்களில் ஒழுங்குமுறையான கட்டமைப்பை வழங்குவதில் முக்கியமான சந்தர்ப்பங்களை வழங்குகின்றன: தொழில்வாய்ப்பில் சமத்துவம், தொழிலுலகத்தில் பெண்களைப் பலப்படுத்துதல், தற்போது தொழிற் சட்டப் பாதுகாப்பு எல்லைக்கு வெளியே இருக்கும் வேலையாட்களின் குழுக்களையும் உள்ளடக்குதல்,தொழில் உறவுகளில் புதிதாகப் பரிணமிக்கும் வடிவங்களில் வேலையாட்களது கண்ணியமாக வேலை நிபந்தனைகளை உறுதிப்படுத்துதல்.

ILO இன் சமவாயங்களது கட்டமைப்பினுள்ளேயும், ILO மேற்பார்வை அமைப்புக்களின் கருத்துக்களூடாக வழங்கப்பட்ட வழிகாட்டல்களாலும், சர்வதேசத்தின் சிறந்த செயற்பாடுகளாலும் நெறிமுறைகளாலும்தொழிற் சட்டச் சீர்திருத்தங்கள் பின்பற்றப்படும். இவ்வாறாக உருவாக்கப்படும் சிறந்த சட்டங்களின் பிரயோகமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களுடன் ஒத்துப்போவதை ILO கருத்திற் கொள்ளும்.

### வெளியீடு 2.3.1 முத்தரப்பு ஆலோசனைகளினூடாக தொழிற் சட்டங்கள் திருத்தப்படல்

தொழில்வாய்ப்பின் தரமற்ற வடிவங்களாக தற்காலிக வேலை, பகுதி நேர வேலை, வித்தியாசமான வேலை ஒழுங்கமைப்புகள், மறைக்கப்பட்ட தொழில் உறவுகள் உள்ளிட்டவை, சமகால தொழிற் சந்தையில் தனித்துவமான அம்சமாக வந்துள்ளன. மூன்றாந்

51 பிரச்சினைகளை இனங்காண்பதற்கும், வினைத்திறனை அதிகரிப்பதற்குமாக - தொழில்நுட்பம், செயன்முறைகள் மற்றும் மக்கள் ஆகியவற்றின் மதிப்பீடுகளைக் கொண்டுள்ள ‘வர்த்தகச் செயன்முறை மீளாய்வு’.

52 ஒரு gig economyயில், தற்காலிக, நெகிழ்ச்சியான வேலைகள் சர்வசாதாரணமாகக் காணப்படுவதுடன், கம்பனிகள் முழு நேர ஊழியர்களுக்குப் பதிலாக, சுதந்திரமான ஒப்பந்தக்காரர்களையும்

தரப்பு ஒப்பந்தக்காரர்கள் பற்றி தெளிவான வரைவிலக்கணம் தேவைப்படுவதுடன், முரண்பாடுகளையும் குழப்பங்களையும் தவிர்ப்பதற்காக, விதிமுறைகளும் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தலும் தேவைப்படுகின்றன. இவ்வாறான சூழலில், எல்லா வேலையாட்களுக்குமான கண்ணியமான வேலைக்கு ஆதரவளிப்பதற்கு, மேற்குறித்த வேலை ஒழுங்குகள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றிய ஆழமானதொரு விளக்கம் தேவைப்படுகிறது. இதனால், எல்லா வேலையாட்களுக்குமான சமமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும். துறைசார்ந்தும் வேலையின் வடிவங்களுக்கும், வேலைக்கான ஆகக்குறைந்த நியமங்களையும் நிபந்தனைகளையும் தாபிப்பது, முறைசார்ந்த மற்றும் முறைசாரா பொருளாதாரங்களிலுள்ள எல்லா வேலையாட்களுக்கும் முக்கியமான பாதுகாப்பை வழங்கும். எல்லா வேலையாட்களும் தமது உரிமைகள், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், கூட்டாகப் பேரம்பேசுதல் ஆகியவற்றை, தமது ஒப்பந்த ஒழுங்கமைப்புகள் எவ்வாறிருப்பினும், பயன்படுத்தக்கூடியதாக மாற்றுவதற்கு இன்னும் கூடிய முயற்சிகள் தேவைப்படுகின்றன.

உற்பத்திகளுக்கும் சேவைகளுக்குமான ஒன்றிணைந்த உலக முறைகள், அதிகரித்துவரும் எண்மானப்படுத்தலுடன் (digitalisation) இணைவது அதிகரிப்பதுடன், ஒரு 'gig economy' இல் எவ்வாறு தொழில் ஒழுங்குபடுத்தப்படுகிறது என்பதன் மீதும், எவ்வாறு உழைப்பைப் பெறுவதற்கான செலவை எதிர்கொள்வது என்பதன் மீதும், தொழில் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பதன் மீதும் ஆழமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் உள்ளது. கொள்கை வகுப்பாளர்கள் நிலைபேறான நிறுவனங்கள், முறையாகத் தொழிற்படுகின்ற தொழிற் சந்தைகள் ஆகியவற்றை



உறுதிப்படுத்துகின்ற, ஊழியர்களைப் பாதுகாப்பதற்கான தொழிற் சந்தை விதிமுறைகள்மீது மூலோபாய, மற்றும் சிறந்த முடிவுகளை எடுக்க முடியும். விதிமுறைகளின் மீளாய்வுகளைச் செய்வதற்கு சிறந்த பகுப்பாய்வு அவசியமானது. இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- சம்பிரதாயமாக் கவனிக்கப்படாது விடப்படுகின்றதும் புதிய பரிணாமத்தை அடைகின்றதுமான தொழில் வடிவங்களின், விதிமுறை மீளாய்வுகளை அடையாளங்கண்டு, எதிர்கால வேலையின் இயக்கவியலை எதிர்வுகூறும் ஆய்வொன்றை நடாத்துதல்.
- சர்வதேச அனுபவத்தைப் பின்பற்றி, எதிர்காலத் தொழிலுக்கு வேண்டிய,சாத்தியப்படும் சட்ட ரீதியான தேவைகளுக்கான ஆய்வொன்றை நடாத்துதல்.
- புதிதாகப் பரிணமிக்கும் தொழில் வடிவங்களுக்கான (வேலையாட்களின் போதுமான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை, தொழிலுக்கான நியதி, நிபந்தனைகளில் ஏற்படும் நெகிழ்வு – நெகிழ்ச்சியான வேலை நேரங்கள், இரவு வேலை, மேலதிக நேர வேலை, போன்றன) சட்ட மற்றும்/அல்லது விதிமுறைகளின் சீர்திருத்தம் பற்றிய முன்முயற்சி.

### வெளியீடு 2.3.2 கடமையைச் செய்பவர்களினதும் அவற்றின் பலனை அனுபவிப்பவர்களினதும் திறன் அபிவிருத்தி

நவீன உற்பத்தித்துறையில் தானே இயங்குதல் மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்கள் அதிகரிப்பதானது தொழிற் சந்தையில் நெகிழ்ச்சியையும், மறு - பயிற்சியையும் வேண்டி நிற்கிறது. அதேவேளை, நாம் கைத்தொழில் பொருளாதாரத்திலிருந்து, வேலையாளர்கள் மிகவும் வித்தியாசமான அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படும் அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்கு நகர்கிறோம். இவ்வாறானதொரு சூழலில், கடமையைச் செய்பவர்களதும் அவற்றின் பலனை அனுபவிப்பவர்களதும் திறன்களை, இந்த வேலை ஒழுங்குகள் மற்றும் தாம் சந்திக்கும் நடைமுறைச் சிக்கல்கள் ஆகியன பற்றி ஓர் ஆழமான அறிவைப் பெறுவதற்காக, மேம்படுத்துவது மிகவும் நெருக்கடியான நிலையிலுள்ளது. வேலையாட்கள், கண்ணியமான வேலை நிலைமையை, ஒன்றுகூடும் சுதந்திரத்தை, கூட்டுப் பேரம்பேசும் உரிமையை தாம் அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்கான தமது ஒப்பந்த ஒழுங்கமைப்புகள் எவ்வாறிந்தாலும், தமது உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் குறித்து ஆழமாக அறிந்துகொள்ள வேண்டிய நிலைமையிலுள்ளனர். அதேவேளை, கடமையைச் செய்பவர்கள் அவ்வாறான வேலையாட்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் தமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கான திறனைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வகையிலான முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

- கடமையைச் செய்பவர்களது திறன்கள், மறுசீரமைக்கப்பட்ட தொழிற் சட்டங்களின் அமுலாக்கத்திற்காகவும், கண்காணிப்பதற்காகவும் கட்டமைக்கப்படும். (பயிற்சிக் கைநூல்களை உருவாக்குதல், பயிற்சி மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை நடாத்துதல்)
- கடமையைச் செய்பவர்களது திறன்கள், மறுசீரமைக்கப்பட்ட தொழிற் சட்டங்களை மற்றும் புதிய வேலை ஒழுங்குகளையும் அவற்றின் தாக்கங்களையும் நன்கு விளங்கிக் கொள்வதற்காக, கட்டமைக்கப்படும்.
- மறுசீரமைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் தொழிற் சட்டங்கள் மற்றும் அவற்றுக்கான ஏனைய திருத்தங்கள் பற்றி, பொதுமக்களை விழிப்பூட்டும் பிரசாரங்கள்.

### நாட்டின் முன்னுரிமை 3: எல்லோருக்கும் தொழிலில் உரிமைகள்

பல வருடங்களாக, முத்தரப்புப் பங்குபற்றல்கள் தொழிலில் மேம்படுத்தப்பட்ட உரிமைகளை அனுபவிப்பதற்கு இடமளித்தன. எவ்வாறாயினும், பாதிக்கப்படத்தக்க சில மக்கள் குழுவினர் பாதுகாக்கப்பட வேண்டிள்ளமைக்கு எதிரான சவால்கள் சமாளிக்கபட வேண்டும். சிறுவர் தொழிலில்

பகுதிநேரப் பணியாளர்களையும் வாடகைக்கு அமர்த்துவது போன்று வேலைக்கமர்த்துகின்றன.

53 கடமையைச் செய்பவர் என்பவர், மற்றைய கடமையைச் செய்பவர்கள் தத்தமது கடமைகளுக்கு இணங்க நடந்துகொள்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தும் கடமையைக் கொண்டுள்ள முழு நாடும்

ஈடுபடுத்தப்பட்டுள்ளோர், வெளிநாடுகளில் பணிபுரியும் கட்டாய வேலைக்குள்ளாகும் தொழிலாளர் (குறிப்பாக, திறன் குறைந்த), முறைசாரா துறைகளில் வேலை செய்வோர், சமூகப் பாதுகாப்பு வலையமைக்குள் இல்லாத வயதான தொழிலாளர் ஆகியோர் இக்குழுவினருள் அடங்குவர்.

2017 இல், 'மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான தேசிய நடவடிக்கைத் திட்டம் (2017-2021)' அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இது வெளிநாட்டிலுள்ள தொழிலாளர், பிள்ளைகள் உள்ளிட்ட பாதிப்புக்குள்ளாகும் குழுவினரது உரிமைகளின் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்துகிறது. நடவடிக்கைத் திட்டமானது, குறிப்பாக பிள்ளைகளை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பது தொடர்பில் வெளிப்படுத்துகிறது. வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களைப் பொறுத்தவரை, பின்வரும் நடவடிக்கைகளூடாக இடம்பெயர்வு தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது: வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களைப் பாதுகாத்தலும் அவர்கள் சுரண்டப்படுவதற்கு எதிரான நடவடிக்கைகளும், தேசிய தொழிலாளர் இடம்பெயர்வுக் கொள்கையை நாளதுவரைப்படுத்துதல், ஆட்சேர்ப்புத் துறையை முறைப்படுத்தி ஒழுங்குபடுத்துதல், நாட்டை விட்டுச் செல்வதற்கு முன்னரான பயிற்சிகள், கட்டாய வேலையூடான சுரண்டலைத் தடுப்பதற்காக வெளிநாட்டு




அரசாங்கங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல். பாதிப்புக்குள்ளாகும் ஆட்களது, குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனுடையோர், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோரது உரிமைகளை உறுதிப்படுத்துகையில் அவர்களது சமூகப் பாதுகாப்பு குறித்தும் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச நியமங்களை அமைக்கும் ஒரு தாபனம் என்ற வகையில், ILO ஆனது, தொழிலில் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக, சமவாயங்களையும் விதிமுறைகளையும் ஏற்றுக்கொள்ளுதலைப் பரிந்துரைக்கிறது. ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களின் பட்டியலுடன், 2017 இன் இறுதிக் கட்டத்தில், கட்டாய வேலை பற்றிய ILO விதிமுறை 29ஐ, 2018 முடிவதற்கு முன்பதாக ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் சர்வதேச ரீதியிலும், பொதுவாகவும் உறுதியளித்தது. இதனை ஏற்றுக்கொள்வதற்கும் இதன் அடுத்த அமுலாக்கத்திற்கும், ILO இந்த நாட்டிலும் பிராந்தியத்திலும் உலக ரீதியாகவும் அடித்தள மற்றும் கொள்கை மட்டங்களிலும் பல வருடங்களாக வழங்கிவரும்தனது ஆதரவை வழங்கும்.

அடிப்படையான கோட்பாடுகள், தொழிலில் உரிமைகள், சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் மீது ILO இன் உலக மூலோபாயக் குறிக்கோளுடனும், மற்றும் 2016 டிசெம்பர் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'பாலி' பிரகடனத்துடனும் DWCP (2018-2022) இலுள்ள மூலோபாயங்கள் ஒத்துச்செல்கின்றன.

### விளைவு 3.1: சிறுவர் தொழிலையும் அதன் மோசமான வடிவத்தையும் ஒழித்தல்

நாட்டில் 1% சிறுவர் தொழில் வீதம் காணப்படுவதுடன், அரசியல் ஆதரவுடன் அதனை ஒழிப்பதற்கான சாதக நிலைமையும் உள்ளது. சிறுவர் தொழிலுக்கான பூச்சிய சகிப்புத்தன்மையைத் தொடர்ந்து 2022 அளவில் அதனை ஒழிப்பதற்கும், தொழில்வாய்ப்பிற்கான ஆகக்குறைந்த வயதை 14 இலிருந்து 16 ஆக, கட்டாயக் கல்விக்கான வயதைப் போன்று உயர்த்துவதற்கும், உயர் மட்டத்தில் தொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளார். 2022 இன் இந்த இலக்கானது, 2025 இன் SDG இலக்கு 8 குறிக்கோள் 8.7ஐ முந்துகிறது. சிறுவர் தொழிலை ஒழிப்பதற்கான ஒரு வலுவான கொள்கைக் கட்டமைப்பு முன்வைக்கப்பட்டிருப்பதுடன், அதன் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு நாடளாவிய பங்குதாரர்களினூடாக, கணிசமான முயற்சிகளும் வளங்களும் தேவைப்படும். ஜனாதிபதியால் செப்தெம்பர் 2017 இல் வெளியிடப்பட்ட 'இலங்கையில் சிறுவர் தொழிலை ஒழிப்பதற்கான தேசியக் கொள்கை'யானது சிறுவர் தொழிலை ஒழிப்பதற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் வழிகாட்டலின் கீழ் முத்தரப்புப் பங்குதாரர்கள், மற்றைய அமைச்சுக்கள், மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகள், தனியார் துறை ஆகியன ஒருமுகப்படுத்தப்பட வேண்டியதை வலியுறுத்துகிறது. மேலும் அது, தொழிற் பரிசோதனைகளுக்கும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகளுக்கும் இடையிலான தொடர்பு வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், இத்தொடர்பே சிறுவர் தொழில் காணப்படத்தக்க சிறுசிறு இடங்களைக் கண்டறிவதற்கு மேலும் வசதியளிக்கும் என்பதையும் குறிப்பிடுகிறது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)16 இன் கீழ், குறிக்கோள் 16.2 "சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகம், சுரண்டல், கடத்தல் மற்றும் பலாத்காரத்தின் எல்லா வடிவங்களும் சித்திரவதைகளும் நிறுத்தப்படுதல் "என்பதன் அடிப்படையிலான, சிறுவர்களுக்கெதிரான பலாத்காரத்தை முடிவுறுத்தும் உலகப் பங்குதாரர் என்னும் வகையிலான 13 "வழிகாட்டும்" நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். ILO உள்ளிட்ட நிறுவனங்களின் ஒரு விரிந்த வலையமைப்பு, சிறுவர்களுக் கெதிராக வன்முறைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் தேடலிலும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. எதிர்கால தொழிற்பல அளவீடுகளில் பெறப்படும் காலத்துக்கேற்ற தரவுகளுடன், 2022 அளவில் சிறுவர் தொழில் வீதத்தை பூச்சியமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான, சிறுவர் தொழில் பற்றிய அடிப்படைத் தரவுகள் காணப்படுகின்றன.

என வரையறுக்கப்படுகிறது.(Duty beareris defined here as the nation-state, which has the duty to ensure that other duty bearers act in compliance with their respective duties)

54 பலனை அனுபவிப்போர் பிரஜைகள் அல்லது நன்மையடைபவர்கள் ஆவர். (Claim Holders are citizens or beneficiaries)

### வெளியீடு 3.1.1: சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான கொள்கைக் கட்டமைப்பையும் சட்டரீதியான சூழலையும் செயற்படுத்துதல்

விளக்கம்: சிறுவர் தொழிலை இல்லாதொழித்தலுக்கு, கொள்கை மட்டத்தில் மட்டுமன்றி, அடிப்படை மட்டங்களிலும் பலதரப்பட்டதும் ஒன்றிணைக்கப்பட்டதுமான தலையீடுகள் தேவை. முன்னைய DWCP (2013-2017)இன் கீழ், வரலாற்று ரீதியானதொரு சாதனையாக, 'இரத்தினபுரி மாதிரி'யின் (Ratnapura Model) (ஆரம்பத்தில் சிறுவர் தொழிலால் தொல்லைப்பட்ட இந்த மாவட்டம், வெற்றிகரமாக அதற்கு முகங்கொடுத்தது) உருவாக்கமும் அமுலாக்கமும் இருந்தது. இது முறைசார்ந்த பெருந்தோட்டத் துறையில் முதலில் தனது கவனத்தைச் செலுத்தி, அரச-தனியார் பங்குடைமையின் கீழ் பரிந்துரைத்து, விழிப்புணர்வு நடவடிக்கைகளைச் சமூக மட்டத்தில் மேற்கொண்டு, தொழிற் பரிசோதனை முறைமையைப் பலப்படுத்தி வெற்றியடைந்தது.

வேலைகளின் முக்கியமானவை வருமாறு:

- தலைமை நிர்வாகியான மாவட்டச் செயலாளரது தலைமைத்துவத்தின் கீழ் மீதமுள்ள 24 மாவட்டங்களிலும் 'இரத்தினபுரி மாதிரி'யைப் பிரதிசெய்து / அதைத் தழுவி, செயற்படுத்துதல்.
- சிறுவர் பாதுகாப்பு விரிவாக்கச் சேவை அலுவலர்களையும் தொடர்பு படுத்தி, சிறுவர் தொழிலை உள்ளடக்கியதாக முறைசாராத துறைகளிலும் தொழிற் பரிசோதனை முறைமையை பலப்படுத்தி விரிவுபடுத்துதல்.
- கட்டாயக் கல்வியின் வயதை 14 இலிருந்து 16 ஆக உயர்த்திய கல்வி அமைச்சின் கொள்கையுடன் ஒத்துப்போகும் வகையில், தொழிலுக்கான ஆகக்குறைந்த வயதையும் 14 இலிருந்து 16 ஆக உயர்த்துவதற்கு, தற்போதைய சட்ட ஏற்பாடுகளைத் திருத்துதல்.
- அபாயகரமான சிறுவர் தொழில் பற்றிய தற்போதைய சட்ட /ஒழுங்குவிதிகளின் ஏற்பாட்டை மீளாய்வு செய்து, திருத்துதலும், அமைச்சுக்களின் / நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஊடாக தடுப்பு நடவடிக்கைகளை வேகப்படுத்துதலும்.
- சிறுவர் தொழிலை ஒழிப்பதற்கான அமைச்சுக்களின் / நிறுவன அமைப்புகளது தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தற்போதைய வேலைத் திட்டத்தை ஒழுங்கான கண்காணிப்பின் கீழ் செயற்படுத்துதல்.
- மாவட்ட மட்டத்தில் சிறுவர்களுக்குச் சேவை வழங்கும் முகவர்களுடன் / அமைச்சுக்களுடன் இணைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் தொடர்புகொள்ளும் முறைமையை மேம்படுத்துதல்.
- தொழிற்பல அளவீட்டுக்கு உரிய பகுதியை உள்ளடக்குவதன் மூலம் சிறுவர் தொழில் பற்றிய ஒழுங்கானதொரு தரவு சேகரித்தலுக்குப் பரிந்துரைத்தல்

### விளைவு 3.2: வெளிநாட்டுக்குச் செல்லும் (திறன் குறைந்த) தொழிலாளர்கள் சுரண்டப்படுவதற்குரிய (கட்டாய வேலை) பாதகமான தன்மையைக் குறைத்து தொழிற் சந்தை விளைவுகளை மேம்படுத்தல்

DWCP வெளியிடப்படும் இந்த காலகட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பைதேடி வெளிச்செல்லுவோரின் அளவு குறைவடைந்து செல்வதாக காணப்படுகின்றது. இவ்வாறான குறைவானது, வெளிநாடுகளுக்குச் செல்லும் (பெரும்பாலும் வீட்டு வேலையாட்களாக) பெண் தொழிலாளர்கள் மீதான அளவுக்கு மீறிய ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் காரணமாக இருக்கலாம். எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுத் தொழிலாளரும் அவர்கள் அனுப்பும் பணமும் GDP இன் முக்கிய பங்களிப்பாக உள்ளதுடன், அத்தொழிலாளரது குடும்பங்களும் அவர்களில் தங்கியுள்ளனர். இலங்கையின் குறித்த சில விதிமுறைகள், வெளிநாடு செல்லும் வீட்டு வேலைக்கான பெண் தொழிலாளர்களை மட்டுப்படுத்தும் வகையிலான வழிவகைகளைக் கொண்டிருப்பதால், இவ்வாறான பெண்களில் பலரும் இதற்கு மாறாக, முறையற்ற இடம்பெயர்வு வழிகளூடாகச் செல்வதாகச் சந்தேகிக்கப்படுகிறது. சிறந்த வேலைவாய்ப்புகளைத் தேடும் திறன் குறைந்த உழைக்கும் வயதையுடைய மக்கள் கூட்டத்தினது தொடர்ந்த முறையீடுகள் தொழிலுக்கான இடம்பெயர்விலுள்ள விடாப்பிடியான சவால்கள் மூலமாகப் பிரதிபலிக்கும்போது, வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கான எதிர்பார்ப்புகள் கட்டாய வேலையிலும் ஆட்கடத்தலிலும் முடிவுறுகின்றது.

### வெளியீடு 3.2.1: தொழிலாளர்களது வெளிநாட்டு இடம்பெயர்வு, கட்டாய வேலை, ஆட்கடத்தல் ஆகியவற்றின் ஒழுங்குவிதிக் கட்டமைப்பைப் பலப்படுத்துதல்

இலங்கையின் தொழிலாளர்களது வெளிநாட்டு இடம் பெயர்வுக் கொள்கையும், நாடு திரும்பும் தொழிலாளர்களை மீள இணைக்கும் உப - கொள்கையும் ஏனைய பல நாடுகளுக்கு ' மாதிரி' யொன்றாக (model) அடையாளங் காணப்படுகின்றன. இது எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுக்குச் செல்லும் தொழிலாளரது இடப்பெயர்ச்சியின் தன்மை மிகவும் நிலையில்லாததொன்றாக இருப்பதைக் கவனத்திற்கொண்டு, கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையானது, தற்போது மீளாய்விற்கு உட்படுத்தப்படுகிறது. இந்த மீளாய்வானது, தொழிற் சந்தையின் கேள்விக்கும் நிரம்பலுக்கும் நாட்டினுள், பிராந்தியத்தில், தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ளும் நாடுகளில் ஏற்படுகின்ற மாற்றத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. இதேபோன்று, ஆட்சேர்ப்புச் செயன்முறையில் காணப்படுகின்ற உப-முகவர்களது வகிபாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்திற்கான திருத்தங்கள் மற்றும் உரிய உபவிதிகளுக்கான திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளன. இவ்வாறே, கட்டாய வேலை மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான ஒழுங்குவிதிக் கட்டமைப்பில் இடைவெளிகள் காணப்படுகின்றன. இவை, தாறுமாறான ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு நடைமுறை காரணமாகப் பாதிப்புறும் வெளிநாட்டுத் தொழிலாளர்களது மோசமான நிலைமையைக் கருத்திற்கொண்டு, பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும். ILOவின், கட்டாய வேலை தொடர்பான விதிமுறைகள் P29 (2014), இந்தத் துறையில் சட்டத்தை நாளதுவரைப்படுத்துவதற்குரிய ஒரு முக்கிய குறிப்பை வழங்குகின்றது.

வேலைகளின் முக்கியமானவை வருமாறு:

- உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் இடம்பெயர் தொழிலாளர்களுக்குத் தொடரும் பிரச்சினைகள், மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும், மாறிக் கொண்டிருக்கும் நிலைமை காரணமாகவும் உருவாகும் சவால்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, '2008 இன் இடம்பெயர் தொழிலாளர் கொள்கை'யை மீளாய்வு செய்து, நாளதுவரைப்படுத்தி ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துதல்.
- ILOவின் வழிகாட்டலுக்கமைவாக (2018 இல் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது), உப-முகவர்கள் அல்லது கட்டணங்களும் செலவுகளும் பற்றிய உபவிதிகள் உள்ளிட்ட, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்திற்கான மற்றும் உரிய உபவிதிகளுக்கான திருத்தம்.

- P 29ஐ ஏற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்களும், அதிலுள்ள இடைவெளிகளின் பகுப்பாய்வும்.
- அரசாங்கம், ஆட்சேர்ப்பு சம்பந்தப்பட்டோர், ஆட்சேர்ப்பு முகவர்களது அமைப்புகள் ஆகியவற்றின் ஒத்துழைப்பினூடாக, ILOவின் நியாயமான ஆட்சேர்ப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் கோட்பாடுகளின் பிரயோகம்.
- SDG குறிகாட்டி 10.7.1 இன் பிரகாரம், இடம்பெயர் தொழிலாளர்களது சம்பளத்தின் விகிதாசாரமான ஆட்சேர்ப்புச் செலவுகள் பற்றிய ஆராய்ச்சி.

### வெளியீடு 3.2.2: கண்ணியமான வேலை, வெளிநாட்டுக்குச் செல்லும் (திறன் குறைந்த) தொழிலாளர்களுக்கான நியாயம், நாடு திரும்பும் தொழிலாளர், கட்டாய வேலையால்∴ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டோர் ஆகியவற்றுக்கு வசதியளிப்பதற்கான நிறுவனங்களைப் பலப்படுத்துதல்

வெளிநாட்டுக்குச் செல்லும் தொழிலாளர்களால் தாங்கிக் கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் எல்லாவற்றிலும் மிக மோசமானவை குற்றங்களாகக் கருதப்படக்கூடிய ஆட்கடத்தலும், கட்டாய வேலையும் ஆகும். பல்தரப்பட்ட பக்கங்களாலும் அணுகப்பட வேண்டிய் மூன்று கூர்மையான விடயங்களான தடுத்தல், பாதுகாத்தல், வழக்குத் தொடர்தல் ஆகியவற்றால் இலக்கு வைக்கப்பட வேண்டிய பிரச்சினைதான் ஆட்கடத்தல். இந்த நடவடிக்கைகள் ஆட்கடத்தலுக்கு நிலைபேறான தடையை எதிர்காலத்தில் ஏற்படுத்தும். வெளிநாட்டுக்குச் செல்வதில் உள்ள அபாயங்கள் மற்றும் அந்த அபாயங்களை எவ்வாறு குறைத்தல் என்பன குறித்த அறியாமைபாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணுதல், புலனாய்வு, வழக்குத் தொடர்தல் ஆகியன பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட அறிவுபாதிக்கப்பட்டவர்களுக்கான நிவர்த்திகள், அவர்களை மீட்டெடுக்கும் சேவைகள் உள்ளமை பற்றிய விளக்கமின்மை ஆகியன இவ்விடயத்தில் காணப்படும் இடைவெளிகள் ஆகும். இவ் விடயத்தில் காணப்படும் இரண்டு பிரதான குழுக்கள்: ஆட்கடத்தலுக்குள்ளாகும் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் அல்லது ஆட்கடத்தலுக்குள்ளாகக்கூடிய அபாய நிலையிலுள்ளோர் அரசாங்க நிறுவனங்கள், கொள்கை வகுப்போர், வணிகங்கள் ஆகிய தனிநபர்கள் அல்லது மாற்றத்தை ஏற்படுத்தத்தக்க ஒன்றிணைந்த முகவர்கள்,இவர்கள் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் கட்டாய வேலையை / ஆட்கடத்தலைத் தடுப்பதில் நேர்மறையான செல்வாக்கைச் செலுத்தக் கூடியவர்கள். இடம்பெயர்வோர் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நியாயத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வும் அவர்களைப் பலப்படுத்தக்கூடிய மூலோபாயங்களும் தேவைப்படுவதோடு, அவர்களது துயரங்களையும் சட்ட நடவடிக்கைகளையும் கையாளும் பொறிமுறைகளும் தேவைப்படுகின்றன.

வேலைகளின் முக்கியமானவை வருமாறு:

- வெளிநாட்டுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு, ஏற்கனவே கற்றுக்கொள்வதை அடையாளங்காண்பதற்கான (RPL) வழிகாட்டுதல்களையும் பொறிமுறைகளையும் மெருகேற்றி நடைமுறைப்படுத்துதல்.
- இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் (SLBFE) மீள ஒன்றிணைக்கும் அலகு, பொது வேலை வாய்ப்புச் சேவைகள் ஆகியவற்றால், நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு, நாட்டினுள் சிறந்த வேலைவாய்ப்புகளை அல்லது சுய வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குதல்.
- EFCஇன் ஒருங்கிணைப்புடன், தொழிலாளர் பற்றாக்குறை காணப்படும் முக்கிய துறைகளில், பொருத்தமான திறன்களோடு நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் சேவைகளை வழங்குதல்.
- தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளில் உள்ள அரசாங்க நிறுவனங்களுடனும் தொழில் கொள்வோருடனும், திறன்களை அடையாளங்காணும் முன்னோடிப் பொறிமுறைகளை ‘மாதிரி’ யொன்றாக (model) உருவாக்குதல்.
- நாடு திரும்புவோரின் திறன்களை அடையாளங்காண்பதற்கு, TVECமற்றும் SLBFE ஆகியவற்றிடையே ஒரு MOU ஐ அமுல்படுத்தி, இதற்கென ஆணை வழங்கப்பட்டுள்ள அந்நிறுவனங்களிடையே (TVEC மற்றும் SLBFE) இதற்கான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- TVEC மற்றும் SLBFE ஆகியவற்றின் பயிற்சிக்கான பாடத்திட்டத்தில் OSHஐயும் ஒருங்கிணைத்தல்.
- ITUCஇன் வெளிநாட்டுத் தொழிலாளர் ஆட்சேர்ப்பு ஆலோசனையாளர் வெளிநாட்டுத் தொழிலாளரது ஆட்சேர்ப்பையும் தொழில் அனுபவத்தையும் மீளாய்வு செய்து, சேவை உதவிகளுடன் தொடர் படுத்துதலை ஒரு முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துதல். இந்த ஆலோசகர், வெளிநாட்டுக்கு தொழிலுக்குாகச் செல்ல எதிர்பார்க்கும் ஆட்கள் தமது ஆட்சேர்ப்பு முகவர்களைத் தெரிவு செய்து சரியான தீர்மானங்களை எடுப்பதற்கும் வழிவகை செய்வார்.
- வெளிநாட்டுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தேவையான சேவைகளை வழங்கி உதவும் உரிய சேவை வழங்குநர்களது திறன் விருத்தி.
- ஆண்கள், பிள்ளைகள் உட்பட, பாதிக்கப்படடோர் விசேட கவனிப்புகளைக் கொண்ட சேவைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பை வழங்குதல்
- பாதிக்கப்பட்டோரை அடையாளங் காணுதல், சட்ட நடவடிக்கைகள், அவர்களுக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் ஆகிய விடயங்களில் அதிகாரிகளுக்குப் போதிய பயிற்சிகளை வழங்கி, ஆட்கடத்தலைச் செய்யும் குற்றவாளிகளுக்கு எதிரான புலனாய்வு மற்றும் வழக்குத் தொடர்தல் செயற்பாடுகளை அதிகரித்தல்.

### விளைவு 3.3: முறைசாரா வேலையாட்களுக்கு விசேட கவனத்துடன், எல்லா வேலையாட்களுக்குமான மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்புத் தளங்கள் எனப்படுபவை தேசிய ரீதியில் வரையறுக்கப்பட்ட அடிப்படையான சமூகப் பாதுகாப்பு உத்தரவாதங்களாகும். இவை ஆகக்குறைந்தது, வாழ்நாள் முழுவதற்குமாவது அடிப்படைச் சுகாதாரக் கவனிப்புகள், அடிப்படையான வருமானம் ஆகியவை சேர்ந்து பொருட்களையும் சேவைகளையும் பெறக்கூடிய அத்தியாவசிய தேசிய மட்ட உத்தரவாதங்களாகும். பல எண்ணிக்கையிலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் காணப்பட்டாலும், அவற்றைப் அதிகரித்துப் பெற்றுக்கொள்ளுதலானது பெறுபவர்களுக்கும் வழங்குபவர்களுக்கும் ஒரு சாவாலாகவே உள்ளது.

### வெளியீடு 3.3.1: சமூகப் பாதுகாப்பினுள் அடங்குபவர்களை அதிகரித்தல்

தற்போதுள்ள வயதானவர்களுக்கான வருமானப் பாதுகாப்புத் திட்டங்களால் முறைசாராத் துறை வேலையாட்கள் போதுமான அளவில் கவனிக்கப்படுவதில்லை. வழங்கப்படும் சேவையின் தரத்திலும், அதனைப் பெறுபவர்களது அளவிலும், போதுமான

அளவு பண ரீதியான நன்மைகளிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகிய ஓய்வூதியமற்ற, பங்களிப்புடனான ஓய்வுகால நன்மைகளின் வினைத்திறன் மற்றும் அவற்றில் உள்ளடங்குவோரை அதிகரிக்க வேண்டிய தேவை ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளும்போது, பின்வரும் முக்கிய விடயங்கள் செயற்படுத்தப்பட வேண்டியிருக்கும்:

- EPFஇல் உள்ளடங்குவோரை பின்வருமாறு அதிகரித்தல்: முறைசார்ந்த தனியார் துறையின் தற்போதைய 40%ஆனோரை மேலும் அதிகரித்தல், முறைசாரா துறைகளிலுள்ளோரையும் இணைத்துக் கொள்ளுதல். இலங்கையின் தொழிற்படையானது 2017 இல் 8.2 மில்லியன்களாகும். இதில் 1.4 மில்லியன் பேர் அரசாங்கத்துறையில் உள்ளதுடன், 2.6 மில்லின் பேர் மாத்திரமே EPF இனுள் உள்ளடங்குகின்றனர்.
- தேவையான சட்டங்களுடன் EPFஐ ஒரு ஓய்வூதியத் திட்டமாக மாற்றுவதற்கு, ஒரு சாத்தியக்கூற்று ஆய்வை நடாத்துவதற்குப் பரிந்துரைத்தல். வீடுகளில் வேலை செய்வோர், வெளிநாட்டில் மற்றும் தன் சொந்தத்தில் வேலை செய்வோர் ஆகியோருக்கு ஊக்குவிப்பாக அவர்கள் ETF இற்குப் பங்களிப்புச் செய்யும் பொறிமுறை ஒன்றை உருவாக்குதல். இது முறைசாராத் துறையிலுள்ளோரையும் ஓய்வுகால நன்மைகளில் ஏதோ ஒரு வகையில் உள்ளடக்குவதற்கு உதவும்.

### இயலுமான விளைவு 4: பாரிய தரவு மற்றும் அறிவின் உருவாக்கம்

தரவு மற்றும் அறிவின் உருவாக்கமானது இலங்கையின் சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தல், கண்காணித்தல், எதிர்காலப் போக்குகளை எதிர்வுகூறுதல், SDGsl அடைவதற்கான தலையீடுகளை வடிவமைத்தல் ஆகியவற்றுக்கு இன்றியமையாதவையாகும். இலங்கை - UNSDF 2018-2022 இலும்அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதில், இயக்கும் காரணி 1 இன் கீழ், "மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கைகள் ஆகியவற்றை நோக்கி", ஐ.நா.வும் இலங்கை அரசாங்கமும், "சமத்துவமின்மை, பொறுப்புடன் தீர்மானமெடுத்தல் ஆகியவற்றுக்கான மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் ஆகியவற்றால் 2022 அளவில் இலங்கை மக்கள் நன்மையடைவர்" என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒன்றிணைந்த நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கட்டுப்பட்டுள்ளன. 'தூரநோக்கு 2025' என்னும் அபிவிருத்திக் கொள்கையும், அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை நோக்கிய உந்துதலில் அவசரம் காட்டுதல், அரசாங்கச் செயன்முறைகளை எண்மானப்படுத்துதல், பொதுமக்கள் தகவலை அறிந்து கொள்வதை இயலச் செய்தல் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இதனால், DWCP 2018 - 2022யும் பாரிய தரவு மற்றும் அறிவின் உருவாக்கத்தை முன்னுரிமையாகக் கொண்டுள்ளது. எந்த வகையானதொரு தலையீட்டிற்கும் தரவு மற்றும் அறிவு ஆகியன ஒரு முதுகெலும்பாகத் தொழிற்படுவதால், இங்கு குறிப்பிடப்படும் முன்னுரிமைகளும் தலையீடுகளும் இந்த DWCP இல் உள்ள மற்றைய முன்னுரிமைகளை அடைவதற்கான ஒரு வழிமுறையாக இருக்கும்.

ஆராய்ச்சியும் அறிவின் உருவாக்கமும் தொழிலுலகத்திற்குப் பொருத்தமானது என்பது ILO வின் மூலாதாரமான திறன்களுள் ஒன்றாகும். உலக ரீதியில், பிராந்திய ரீதியில், உள்ளூர் மட்டத்தில் கடந்த காலச் செயற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அறிவை உருவாக்குவதற்கான தரவுகளைச் சேகரித்தல், ஒன்று திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றில் இலங்கைக்கு வழங்கும் தொழில்நுட்ப உதவிகளைத் தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளது. இவ்வாறான அறிவு சான்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுத்தலுக்கும், தலையீடுகளுக்கும், அறிவுக் குறைபாடுகளைக் குறைப்பதற்கும் உரியதொரு தளத்தை உருவாக்கும்.

### இயலுமான விளைவு 4.1: நம்பகமானதும் பயன்படுத்துபவர்களுக்கு இலகுவானதுமான தொழிற் சந்தைத் தகவல்களை, கொள்கை வகுப்பாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் பொதுமக்களுக்கும் ஒழுங்காகக் கிடைக்கச் செய்தல்

தொழிற் சந்தைத் தரவுகளின் தரமும் அவை பொருத்தமானதாயிருத்தலும் செயற்படுகின்ற முறைமை, வளங்கள், திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். ILO வின் சமீபத்தைய உள்ளக மதிப்பீடொன்று, தற்போதைய தொழிற் சந்தைத் தரவுகளும் இலங்கையில் அதன் முறைமையும் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது உயர் தரத்திலிருப்பதாகத் தெரிவிக்கிறது. அதேவேளை தற்போதைய முறைமையில் பற்றாக்குறையாகவுள்ள தொழிற் சந்தைத் தரவுகளின் திருத்தமான தன்மை, பொருத்தம், கிடைக்கும் கால இடைவெளி (மீடிறன்), கிடைக்கச் செய்தல், ஒப்பீடு ஆகியவற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இக் குறைபாடுகள் மதிப்பீடு, திறன் விருத்தி, மூலோபாய பங்குடைமைகளை உருவாக்குதல் ஆகியவற்றினூடாக நீக்கப்பட முடியும்.

இன்னுமொரு வேறான பிரச்சினை, சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தலுக்கு தற்போது கிடைக்கும் தரவுகளை முறையாகவும் சாதுரியமாகவும் பயன்படுத்துவதில் சம்பந்தப்பட்ட தரப்பினரது திறமையில் தங்கியுள்ளது என்பதாகும். DWCP மற்றும் SDGs கட்டமைப்பின் கீழ் முத்தரப்பினரும் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளையும் தலையீடுகளையும் உருவாக்கி அமுல்படுத்துவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர். இது தேசிய முன்னுரிமைகளையும் தொழில்களின் எதிர்காலத்தையும் முக்கியத்துவப்படுத்தும். மேலும், இவ்வாறான கொள்கைகளினதும் தலையீடுகளினதும் வினைத்திறன் மற்றும் பொருத்தப்பாடு ஆகியவற்றைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கு, சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்பானவர்களாயிருப்பர். எனவே, தரவுகளைப் பாரபட்சமற்ற வகையில் பகுப்பாய்வு செய்து விளங்கிக் கொள்வதில் சம்பந்தப்பட்ட தரப்பினரது திறமை முக்கியமானது. இவ்வாறான பிரச்சினைகள், முத்தரப்பினரது நெருக்கமான ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்படும் ILO வின் தலையீடுகள் பற்றிய, நிலைபேறான தன்மை மற்றும் உடைமை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### இயலுமான வெளியீடு4.1.1: ஒழுங்கான தொழிற் சந்தைத் தகவல்கள் ஒருங்கமைப்புப் பொறிமுறைக் குழுவால் மேற்பார்வை செய்யப்படுதல்

விளக்கம்: தற்போது கிடைக்கத்தக்கதாயுள்ள தொழிற் சந்தைத் தரவுகளின் வகை, எல்லை, பயன்படுத்துதல், தரம் ஆகியவற்றில் பாரிய இடைவெளியொன்று காணப்படுகின்றது. தரவுகளைச் சேகரிப்பதற்கு, அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள, இலங்கையின் பிரதான தேசிய நிறுவனமான தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் (DCS), தொழிற்பல அளவீடுகளின் கண்டுபிடிப்புகளை சமூகப் பொருளாதார தரவுகளுடன் சேர்த்து வருடந்தோறும், காலாண்டு

தோறும் பிரசுரிக்கிறது. DCS ஆனது, சிறுவர் செயற்பாட்டு அளவீடு 2016 ஐ நடாத்தியதன் மூலம், சமீபத்தில் வரலாற்று ரீதியான மைல்கல்லை எட்டியது. இவ்வளவீடு முதற் தடவையாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுவர் தொழிலிலும் அதன் மோசமான வடிவங்களிலும் ஈடுபட்டுள்ள சிறுவரை உள்ளடக்கியது (முன்னர் ஆயுதரீதியான முரண்பாடு காரணமாக பல தசாப்தங்களாக அடையப்பட முடியாமலிருந்தது). இவ்வாறான சாதனைகளுக்கு மத்தியிலும், செல்லுபடியாகும் தன்மையுள்ள தரவுகளைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து, அறிக்கையிடுவதில் மேலதிக முன்னேற்றங்களுக்கு இன்னும் இடமிருக்கிறது. உதாரணமாக, தற்போதைய தொழிற் சந்தைப் போக்குகளையும் வேலைகளின் எதிர்காலத்தையும் விளங்கிக்கொள்வதற்கு அவசியமான, தொழிற் சந்தைக் கேள்விகள், தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் போன்ற ஏனைய தரவுகள் தேவைப்படுகின்றன.

தொழிலிலுள்ளமை மற்றும் தொழிலின்மை போன்ற பல்வேறு தொழிற் சந்தைக் குறிகாட்டிகளது தற்போதைய வரைவிலக்கணங்கள் தெளிவில்லாது, செல்லுபடியாகும் தன்மையில்லாது, நம்பத்தகுந்த தன்மையில்லாது குறைபாடுகளுடன் காணப்படுவதால், இலங்கைத் தொழிற் சந்தைத் தரவுகளை மற்றைய நாடுகளின் தரவுகளோடு ஒப்பிடுவது ஒரு சவாலாக உள்ளது. இது, SDGs தொடர்பாக இலங்கையின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து கண்காணிப்பதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது. மேலும், 2017 இல் UN MAPS இன் மற்றும் ILO வின் கண்டுபிடிப்புகள், இலங்கை அரசாங்கமும் அதன் அமைச்சுகளும் அவற்றின் பொறுப்புகளையும் நாட்டின் தேவைகளையும் பூர்த்தி செய்வதில், விசேடமாக தரவுகளின் தேவைகளை உபாயமாகப் பயன்படுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட திறன்களைக் கொண்டிருந்தன என்பதைக் குறிப்பிட்டிருந்தது. இதனால், தொழில் புள்ளிவிபரவியலாளர்களின் சர்வதேச மகாநாட்டுத் (ICLS) தீர்மானங்களுக்கமைவாக, தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்து வெளியிடுதல் ஆகியன தொழில் புள்ளிவிபரங்களின் சர்வதேச தரங்களுக்கு (ISLS) ஏற்றவகையில் இருப்பதற்காக, தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்பவர்களிடையே திறன் விருத்திக்கான அதிக தலையீடுகள் தேவை எனவும் குறிப்பிட்டிருந்தது.

பொருத்தமான தொழிற் சந்தைத் தரவுகளில் அதிகமானவை பல்வேறு அமைச்சுகள், தொழில் கொள்வோர், வங்கிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றால் சேகரிக்கப்படுகின்றன. உதாரணமாக, வெளிநாட்டுத் தொழில்களின் போக்கு மீதான தரவு சேகரித்தலும் பகுப்பாய்வு செய்தலும் SLBFE ஆல் மேற்கொள்ளப் படுவதுடன், திறன்களுக்கான பயிற்சி தொடர்பான தரவுகள் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சினால் கையாளப்படுகின்றன. இந்தத் தரவுகள் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தாலும் சேகரிக்கப்பட்டு வேறாகக் கையாளப்படுகின்றன. இதிலிருந்து, அறிவைப் பகிர்ந்துகொள்வதில் ஒரு நியமப்படுத்தப்பட்டதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான பொறிமுறையானது ஏற்படும் செலவுகளைக் குறைப்பதுடன் மட்டுமல்லாது, கொள்கை வகுப்பாளர்கள், தொழில் கொள்வோர், ஊழியர் ஆகியோரிடையே தகவல் தொடர்பாக உள்ள பொருத்தமற்ற இசைவுக்கும் பதிலளிக்கும்.

வேலைவாய்ப்பு உருவாக்கம், வினைத்திறன் மிக்க தொழிற் சந்தை ஆளுகை, ஒவ்வொரு தொழிலாளியினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தலையீடுகளையும் கொள்கைகளையும் வடிவமைத்தல் ஆகியன நம்பகரமான, செல்லுபடியாகும், ஒன்றிணைக்கப்பட்ட தொழிற் சந்தைத் தரவுகளாலேயே வெளிக்கொணரப்படுகின்றன. நம்பகரமான, செல்லுபடியாகும் தரவுகளைச் சேகரிப்பதற்கும், ஒருங்கிணைப்புப் பொறிமுறையை உருவாக்குவதற்கும், தேசியக் கொள்கைகளையும் தலையீடுகளையும் உருவாக்குவதற்கான கண்ணியமான வேலைச் சுட்டிகளின் வினைத்திறனான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் முத்தரப்பினரும் ILO வும் இணைந்து ஒருமித்த முயற்சியை எடுப்பர். குறித்த தலையீடுகள் பின்வருமாறு:

- தரவுகள் கிடைக்கப் பெறுகின்றமை, அவற்றின் இடைவெளிகள், மீறிறன், அவற்றைப் பயன்படுத்தக் கூடியதான நிலைமை ஆகியவை பற்றிய தகவல்களைக் கண்டறிதல்.
- செயன்முறையை மேற்பார்வை செய்வதற்காக ஓர் ஒருங்கிணைப்புப் பொறிமுறைக் குழுவை அமைத்தல், கொள்கையை அறிவிப்பதற்கான தொழிற் சந்தைத் தகவல் முறைமைத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- தொழிற் சந்தைத் தகவல்களைக் கொண்டவையும், நாளது வரைப்படுத்தப்பட்டதும், பாவனையாளர்களுக்கு இலகுவானதுமான தரவுத்தளங்கள் உருவாக்கமும், அவற்றுக்கான ஆரம்பத் (பச்சை) தரவுகள் கிடைக்கக் கூடியதாயிருத்தலும்.
- தொழிற்பலப் புள்ளிவிபரங்கள் மீதான 19 ஆவது ICLS தீர்மானங்கள் உள்ளிட்ட, ISLS இன் பாவனைக்கான திறனை அதிகரித்தல்.

### இயலுமான வெளியீடு 4.1.2: சான்று அடிப்படையிலான கொள்கை மற்றும் செயற்பாட்டிற்கு கிடைக்கும் தொழிற் சந்தைத் தகவல்களைப் பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தயார்செய்தல்

தரமான தரவுகள் மாத்திரம், அவை உரிய முறையிலும் உபாய ரீதியாகவும் பயன்படுத்தப்பட்டாலன்றி, போதுமானதல்ல. கிடைக்கும் தரவுகளை விளங்கிக்கொண்டு பயன்படுத்தி அவற்றைக் கொண்டு முடிவுகளை எடுப்பதில், தொழிலுலகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய முகவர்களாகவுள்ள, ILO வின் முத்தரப்பினரதும் திறன்களை உயர்த்துவதற்கு அதிக முயற்சி தேவைப்படுகிறது.

கண்ணியமான தொழில் பற்றிய நிகழ்ச்சிநிரலானது, SDGs இன் உள்ளார்ந்த பகுதியாக இருப்பதுடன், விசேடமாக அது இலக்கு 8 இல் பிரதிபலிக்கிறது. முத்தரப்பினரும் ILO வும், DWCP இலும் SDGs இலும் தரப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக, நாட்டின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பொறுப்பானவர்கள். ஆயினும், 2017 இல் ILO வின் கண்டுபிடிப்புகள், சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட திறன்களே பொதுவாகக் காணப்படுகின்றன எனவும், SDGs இன் நிலைமைகளைப் பொறுத்தமட்டில் இத் திறன்கள் இன்னும் போதுமானதாக இல்லை எனவும் தெரிவிக்கின்றன. எனவே, செயற்படுத்துவதிலும் அறிக்கையிடுவதிலும் முத்தரப்பினரிடம் ஒருமைப்பாடு, திறன்கள், பொறிமுறைகள் ஆகியன தொடர்பான மேலும் பாரிய தலையீடுகள் அவசியமாகின்றன.

55 2017 நொவெம்பரில் ஆர்ஜன்டீனா, புவனர்ஸ் அயர்ஸ் நகரில் நடந்த,ஐஏ உலக மாநாட்டில் இந்த உறுதி வழங்கப்பட்டது., See http://childlabour2017.org/en/resources/updates/pledges.

56 தற்போது உலக வங்கி, அரசாங்கத்திற்கு பரந்ததொரு சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றுக்காகவும், மற்றும் சுகாதார வசதிகளின் அபிவிருத்தி, கல்வித்துறை அபிவிருத்தி ஆகியவற்றில் மேலும் முன்னேற்றங்களுக்காக கடனொன்றையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குகிறது.

57 நீகுஇலிருந்து கிடைக்கும் இறுதி மொத்தத் தொகையானது ஓய்வுபெற்றவர்களது ஓய்வுகால வருமானத்தை உருவாக்குவதற்குப் போதுமானதல்ல - இது குறிப்பாக, நாட்டில் வயதானோரது வாழ்நாட்களின் அதிகரிப்புடன் தொடர்பு படுத்தப்படுகிறது.

உலகம் முழுவதும், தொழிற் சந்தைத் தரவுகளும் அறிவும் அரசாங்கங்களால் மாத்திரம் உருவாக்கப் படுபவையல்ல் வர்த்தகக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றாலும் உருவாக்கப்படுகின்றன. இலங்கையில், இந்த முக்கிய பங்காளிகளும் இதில் சம்பந்தப்பட்டாலும், அவர்கள் தனித்தனியாகச் செயற்படுவதால், ஒரே விதமான தரவுகளும் அறிவும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தடவைகளில் உருவாக்கப்படுகின்றன. கிடைக்கும் மட்டுப்பாடான வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு, பங்குதாரர்களாக இயங்குவது அறிவைப் பங்கிட்டுக் கொள்வது ஒரு சிறப்பான இடத்தை வகிக்கும்.

ILO ஆனது தொழில்நுட்ப உதவிகளை அதன் அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குவதற்கு, விசேடமாக,சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தலில் அவர்களது திறன்களை வளர்ப்பதற்காக, SDG இலக்கு 8ஐ அடைவதற்காக, அபிவிருத்திக்கான தேசிய மட்ட மற்றும் சர்வதேச மட்ட பங்குடைமைகளை உயர்த்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குறிப்பான தலையீடுகள் பின்வருமாறு:

- பல்வேறு ஆராய்வு முறைகளைப் பயன்படுத்தி, நம்பிக்கையா தரவுகளைச் சேகரித்தலும், அவற்றைப் பகுப்பாய்வு செய்தலும் தொடர்பாக முத்தரப்பினருக்கும் திறன்களைக் கட்டியெழுப்புதல்.
- SDG அறிக்கைகளில் கண்ணியமான தொழில் பற்றிய விளக்கங்களை மேம்படுத்துதல்.
- மேம்படுத்தப்பட்ட தரவு சேகரித்தல், பகுப்பாய்வு மற்றும் அறிவைப் பிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றில் அரசாங்கம், வர்த்தகக் கழகங்கள். ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கிடையே பங்களிப்புகளை ஏற்படுத்துதல்.

முகாமை செய்தல், திட்டமிடல் கண்காணித்தல் அறிக்கையிடல் மதிப்பிடுதல் ஆகியவற்றின் அமுலாக்கம் ஆகியவற்றுக்கான ஒழுங்குகள்.

இந்தப் பகுதியானது, சம்பந்தப்பட்ட தரப்பினரால், ILO செயலகத்தால், ILO இலங்கை அலுவலகத்தால், DWCP இன் மேற்பார்வை முகாமைத்துவம் செய்யப்படுதலைப் பொறுப்பேற்கும் செயற்பாடு குறித்து விளக்குகின்றது. மேலும் கண்காணிப்பு, அறிக்கையிடுதலின் முன்னேற்றம், செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் பொறிமுறைகளையும் விபரிக்கின்றது.

அ. அமுலாக்கம், செயற்றிறன், கண்காணிப்பு, மதிப்பீடு ஆகியன தொடர்பான, ILOஇன் தரப்பினரது வகிபாகம் உள்ளிட்ட, ஒழுங்குகள்

ILO இலங்கை அலுவலகம், DWCP இன் அமுலாக்கத்தைக் கண்காணிப்பதற்கும் செயற்றிறனுக்கும் இரு பொறிமுறைகளைப் பயன்படுத்தும். அதிலொன்று, DWCPயின் மட்டத்திலான முத்தரப்புப் பணிக்குழு, மற்றையது செயற்றிட்ட ஆலோசனைக் குழுக்கள்.

நாட்டின் முன்னைய செயற்றிட்டங்களிலிருந்தவாறு, ஒரு DWCP பணிக்குழு முன்னேற்றத்தைக் கண்காணித்து, செயற்றிட்டத்திற்கான ஆமுலாக்கத்தில் ஏற்படும் சவால்களுக்கான ஆலோசனைகள் உள்ளிட்ட வழிகாட்டுதல்களை வழங்கும். இக்குழுவின் தலைமை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் (MOLTUR) செயலாளரால் வழங்கப்படும் என்பதுடன், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ILO அலுவலகப் பணிப்பாளர் இணைத்தலைவராக இருப்பார்.ILO இலங்கை அலுவலகம் ஆரம்பத்தில் இதன் செயலகமாகத் தொழிற்படும். பணிக்குழுவின் அங்கத்தவர்களாக தொழில் கொள்வோரது, தொழிற் சங்கங்களது பிரதிநிதிகள் மற்றும் தொழில் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கப் பிரதிநிதிகள் இருப்பர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு ஆகிய மற்றைய அமைச்சுக்களிலிருந்து அரசாங்கப் பிரதிநிதிகளும், ILOஇன் செயற்றிட்டங்களிலிருந்தான வேறு பிரதிநிதிகளும் அங்கத்தவராக இருப்பர். தொழில்கொள்வோரை இலங்கை தொழில்கொள்வோரது சம்மேளனம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், தொழிற்சங்கங்களுக்காக DWCP 2018-2022 இல் கையொப்பமிட்ட தொழிலாளர் அமைப்புகளது பிரதிநிதிகளும் இருப்பர்.

DWCP பணிக்குழுவானது,ஒரு மன்றமாகத் தொழிற்படுவதுடன், SDGs இற்கும் ILOஇன் செயற்றிட்டங்களிலும் பாதீட்டிலும் குறிப்பிடப்பட்டவாறு ILOஇன் உலகரீதியான விளைவுகள் மற்றும் குறிகாட்டிகளுக்கும் DWCP வழங்கும் பங்களிப்புகளையும் மதிப்பீடு செய்யும். செயற்றிட்டத்தின் முகாமைத்துவத்திற்காக, DWCP பெறுபேற்றுக் கண்காணிப்புத் திட்டம் மற்றும் DWCP அமுலாக்கத்தைக் கண்காணிக்கும் திட்டம் ஆகிய கருவிகள் உள்ளிட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றங்கள் பயன்படுத்தப்படும். பணிக்குழுவானது ஒரு வருடத்தில் மூன்று தடவைகள் கூடும். இந்த DWCP பணிக்குழுக் கூட்டத்தில் செயற்றிட்டத்தினைக் கண்காணிப்பதற்கு பின்வரும் கருவிகள் பயன்படுத்தப்படும்: வருடாந்த நடவடிக்கைத் திட்டங்கள், நாளதுவரைப்படுத்தப்பட்ட DWCP அமுலாக்கத்தைக் கண்காணிக்கும் மற்றும் மதிப்பிடும் திட்டம், ஆய்வுகளினதும் மதிப்பீடுகளினதும் கண்டுபிடிப்புகள், நாளதுவரைப்படுத்தப்பட்ட அரசாங்க கொள்கை மாற்றங்கள், மற்றைய அபிவிருத்திப் பங்காளர்களின் உரிய நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள்.

இவற்றுக்கு மேலதிகமாக, DWCP பணிக்குழுவின் இணைத் தலைமைகளது மாதாந்தக் கூட்டங்கள் செயற்றிறன் மதிப்பீட்டிற்காகவும், சவால்களின் தாக்கங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காகவும் நடைபெறும்.

எல்லா தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டங்கள் மற்றும் ஒழுங்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளைப் (RBSA) பயன்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியன DWCP பணிக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டாலும், செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் ஒரு தனியான முத்தரப்பு ஆலோசனைக் குழுவொன்று (PAC) உருவாக்கப்படும். இக்குழுவின் தலைமை பிரதான சக அமைச்சுச் செயலாளரிடம் இருக்கும். இதற்கான அமைச்சு தொழில் அமைச்சாக இருக்காவிட்டால், தொழில் அமைச்சின் பிரதிநிதியொருவர் இந்த PAC இல் அங்கத்தவராக இருப்பார். இக்குழு காலாண்டுக்கு ஒரு தடவை கூடும், ஆனால் தலையீட்டின் இயல்புக்கு ஏற்ப கண்காணிப்புக்கான தேவை ஏற்படின் அடிக்கடி கூடும்.

DWCP பெறுபேற்றுக் கண்காணிப்புத் திட்டத்தில் எல்லாக் குறிகாட்டிகளுக்கும் மற்றும் SDG குறிகாட்டிகளுக்குமான, ஒப்பீட்டுக்கான அடிப்படைகள் தாபிக்கப்படும். குறிகாட்டிகளுக்கான தகவல்கள் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து கிடைக்கும் என்றாலும், தேவைப்படின்

தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களுக்கு அடிப்படைத் தரவுகளும் சேகரிக்கப்படும். தரவுகளிலும் தகவல்களிலும் குறைபாடுகள் காணப்படின், ஆராய்ச்சிகளையும் அளவீடுகளையும், முத்தரப்பினரது கலந்தாலோசனையுடன் தேவைக்கேற்றவாறு ILO நடாத்தும். மேலும், தகவல் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவும், கண்காணிப்புத் தேவைகளுக்காக குறிகாட்டிகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், UNSDF இனுள் உட்பட, உரிய ஆராய்ச்சிகளை ILO நடாத்தும்.

தேவையான அளவிலும் தெளிவான தரமானதுமான தகவல்களுடன் யதார்த்தமான இலக்குகளையும் பெறுபேறுகளையும் அடைவதற்காக DWCP அமைப்பினுள் ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மூலோபாயம் SDGs ஐயும் DWCP இலக்குகளையும் அடைவதற்கான ILO இன் பங்களிப்புகளைக் காட்டும். இங்கு, DWCP பெறுபேறுகளைக் கண்காணிப்பதற்கு முடிந்த அளவுக்கு SDG குறிகாட்டிகள் ஏற்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக,கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மூலோபாயம் DWCPஇலுள்ள பின்வரும் குறுக்குமுக வெட்டு விடயங்களையும் கருத்திற் கொள்ளும்: பால் சமத்துவமும் பாரபட்சமின்மையும், முத்தரப்பும் சமூகக் கலந்துரையாடலும், முரண்பாட்டு உணர்வுகள், நிலைபேறான சுற்றுப்புறச் சூழல், சர்வதேச தொழில் நியமங்களைப் பின்பற்றுதல்.

ஆ. அபாயங்கள்

DWCPயின் திட்டமிடப்பட்டுள்ள பெறுபேறுகள் யாவும்,அரசாங்கக் கொள்கையுடனும், நிலைபேற்றிற்கான அபிவிருத்திக் குறிக்கோள்களுடனும் முத்தரப்பு ஒருமைப்பாட்டுடனும் இணைக்கப்பட்டுள்ளன. ஆயினும், DWCP யின் அமுலாக்கத்துடன் இணைந்துள்ள பிரதான அபாயங்களாவன, தற்போதைய கூட்டு அரசாங்கத்தின் எதிர்வுகூற முடியாத அரசியல் தளம்பல்கள் முன்கூட்டிய தேவைகள் மற்றும் ஆதரவுகளுக்காக அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின்மை சம்பந்தப்பட்ட தரப்பினருடைய குறைந்த ஈடுபாடு காலநிலை/ வானிலை காரணமான அமுலாக்கல் தாமதங்கள் போதுமான வளங்களைப் பெற முடியாமை ஆகியவையாக இருக்க முடியும்.

நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை DWCPயின் பெறுபேறுகளுக்கான மையமாக உள்ளது. தற்போதைய கூட்டு அரசாங்கமானது 2019/2020 வரை தொடர்ந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் நிலைமைகளுடனான அபாயங்களைச் சமாளிப்பது பெரும்பாலும் அமைச்சு மட்டத்திலேயே உள்ளது. கடந்த கால அனுபவங்கள், அரசாங்கங்கள் மாறினாலும் DWCPஐ அமுல்படுத்துவதில் உள்ள பொறிமுறைகளைக் காட்டுகின்றன. மேலும், DWCPஇல் முன்வைக்கப்பட்டுள்ள எல்லாத் தலையீடுகளும் பெறுபேறுகளும் நாட்டின் அடிப்படையான அபிவிருத்தியில் சவால்களாகவே காணப்படும். எனவே, அரசியல் சாயங்களில் ஏற்படும் மாற்றங்களுடன், வேலைவாய்ப்பு, தொழிற் சந்தையின் ஆளுகை, தொழிலாளரில் பாதிக்கப்படத்தக்க நிலையிலுள்ளோரது உரிமைகள் ஆகிய அடிப்படைத் தேவைகள் நிர்வாகத்தின் மேற்பூச்சாகவும் முக்கியத்துவம் பெற்றதாகவும் அப்படியே இருக்கும். முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளவாறு, தொழில் அமைச்சுடனான முத்தரப்பு திட்ட ஆலோசனைக் குழுவின் மாதாந்தக் கூட்டங்கள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டங்கள்யாவும் தாறுமாறான அமுலாக்கத்துடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பதற்கானவை ஆகும்.
DWCPஐ அமுல்படுத்துவதில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரது ஆதரவும் அவசியமானது. DWCPயின் பெறுபேறுகளையும் நடவடிக்கைகளையும் உருவாக்குவதற்கான நாட்டின் முன்னுரிமைகளை அடையாளங் காணுவதில் தொடங்கி, முத்தரப்பினரையும் ஈடுபடுத்துவதில் ஒரு தீவிரமான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செயற்பாடு, DWCPஐ அமுல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் சம்பந்தப்பட்ட தரப்பினரது ஆழமான அர்ப்பணிப்புக்கு இட்டுச் சென்றது. DWCPஐ உருவாக்கும் காலகட்டத்தில் ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு விளைவுக்குமான பெறுபேறுகளுக்கான தமது வகிபாகம் பற்றிக் கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்பினரது வகிபாகத்தைக் கொண்ட நிரலுடனான நாட்டின் முன்னுரிமைகளது தாயம் (matrix) அவர்களது இலகுவான மேற்கோளுக்காகவும் கண்காணிப்புக்காகவும் வழங்கப்பட்டது. மேலும், DWCP இல் கையொப்பமிட்டுள்ளவர்களைக் கொண்ட முத்தரப்புப் பணிக்குழு ஒவ்வொரு 4 மாதங்களுக்கொரு தடவையும் கூடி, செயற்றிட்டங்களும் நிகழ்ச்சிகளும் அமுலாக்கப்படுவதில் உள்ள சவால்களுக்கான ஆலோசனைகளை முன்வைப்பதும் கண்காணிப்பதும், இன்னொரு பொறிமுறையாக உள்ளது.

நாட்டின் பல மாவட்டங்களைப் பாதிக்கின்ற வரட்சி, வெள்ளப்பெருக்கு, மண் சரிவுகள் போன்ற காலநிலைத் தாக்கங்கள் தற்போது அடிக்கடி ஏற்படுவனவாகி, நாட்டின் புதியதொரு அபாயமாக மாறியுள்ளது. நாட்டின் செயற்றிட்டத்தில் புதியதொரு பகுதி, சம்பந்தப்பட்ட தரப்பினரை அறிவூட்டுவதன் மூலமும், வர்த்தகத்தில் ஏற்படும் எதிர்பாரா விடயங்களுக்கான திட்டமிடல் மூலமும், எல்லா மட்டங்களிலுமான நீர் முகாமைத்துவம் மற்றும் கழிவு முகாமைத்துவம் மூலமும், காலநிலை தொடர்பான மட்டுப்பாடுகளைக் கையாள்வதற்காகவும், மற்றைய சமூக-பொருளாதார அபாயங்களைக் கையாள்வதற்காகவும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு மத்திய வருமான நாடு எனக் கருதப்படுவதால், நன்கொடைகளிலும் நிறுவன நிதியளிப்பிலும் வித்தியாசமான நிபந்தனைகளுக்கு முகங்கொடுக்கிறது. மேலும், நாட்டின் பொருளாதார அந்தஸ்து காரணமாக, அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான நிதிகள் குறைவடைந்து செல்வது, வளங்களைச் சேகரிப்பதில் ஒரு சவாலாக விளங்குகிறது. எவ்வாறாயினும், சமீபத்தில் கிராமிய வேலைவாய்ப்பு, சிறுவர் தொழிலை ஒழித்தல், வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான உதவி ஆகியவற்றிலும் ஏனைய விடயங்களையும் சேர்த்து, வெற்றிகரமான தலையீடுகளையும் மாதிரிகளையும் உருவாக்குவதில் ILO வெற்றிகண்டுள்ளது. மாதிரிகளை உருவாக்குவதில் மற்றும் நிதியுதவிகளுக்கான பிரேரணைகள் பற்றி அபிவிருத்திப் பங்காளர்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல், தொழில்நுட்ப உதவிகளுக்கான நிதியளிப்புக்கு ILO உடனான அரசாங்கத்தின் புதிய கூட்டு ஆகியன வளங்களைச் சேர்ப்பதில் புதிய நடவடிக்கைகளாக உள்ளன.

நிதி வழங்கும் திட்டம்

தொழிற் சந்தை மற்றும் நலன்புரி சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும் கொள்கை மற்றும் செயற்றிட்ட ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கக்கூடிய திறனைக் கொண்டிருக்கும் அதேவேளை, ILO ஆனது நிதி வழங்கும் ஒரு முகவர் அல்ல. DWCPஐ அமுலாக்குவதற்குத் தேவையான வளங்களை உருவாக்குவதற்கு, பங்காளர்களுடனான பல பொறிமுறைகள் கையாளப்பட்டன. குறிப்பாகச் சில கொள்கைகளையும் நடவடிக்கைத் திட்டங்களையும் உருவாக்குவதற்கு

அரசாங்கத்திற்கு ILO உதவியளித்தசில தலையீடுகள், அவற்றுக்கான விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய வரவுசெலவுத்திட்டத்தினூடாக உரிய அமைச்சுக்களினால் ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, மேலும் தொழில்நுட்ப உள்ளீடுகளூடாக ILO தனது ஆதரவை வழங்கும். உதாரணமாக,இலக்கு 3 உடன் நேரடியாகத் தொடர்புபடுத்தப் பட்டுள்ள சிறுவர் தொழில் கொள்கை மற்றும் அதன் நடவடிக்கைத் திட்டங்கள் உள்ளிட்ட, கண்ணியமான வேலை தொடர்பான வெளியீடுகளுக்கு அரசாங்கத்தால் ஆதரவு வழங்கப்பட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறே, தேசிய முன்னுரிமைகளுடன் DWCP ஆனது நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளதால், SDG கடப்பாடுகளால் உருவாக்கப்படும் இணைப்புகளும் இந்தக் குறிக்கோள்களை அடைவதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் வளங்களாலும், அபிவிருத்திப் பங்காளர்களாலும், ஐ.நா. வாலும் மூலதனமளிக்கப்படும். எவ்வாறாயினும், சமூகப் பங்காளர்களுக்கு வரவுசெலவுத்திட்ட எதிர்பார்ப்புகள் பிரயோகிக்கப்பட முடியாவிட்டாலும், தற்போதைய DWCP ஐ உருவாக்கும் போதான ஆலோசனைகளில், சமூகப் பங்காளர்கள் தமது மனிதவளத்தையும் ஏனைய வளங்களையும் DWCP முன்னுரிமைகளுக்கு வழங்கக் கடப்பாடுடையவர்களாக உள்ளதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வெளியக நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதில் ILO, தனது வழமையான வளங்களிலிருந்தும், நிதி வழங்கும் சமூகத்தினூடாகவும், ஒரு காத்திரமான வகிபாகத்தைக் கொண்டிருக்கும்– DWCP 2018-2022 இற்கான முன்னுரிமை விளைவுகள் 1 மற்றும் 3 என்பவற்றுக்கு சில வளங்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன.

மேலும், புதுடெல்லியிலுள்ள கண்ணியமான வேலை நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உதவிக் குழு, பாங்கொக்கிலுள்ள பிராந்திய அலுவலகம், ஜெனீவாவிலுள்ள தலைமையலுவலகம் ஆகியவற்றுடன், நிதி பெறுவதிலுள்ள குறைபாடுகளையும் நிதிக்கான சாத்தியமான வளவாளர்களையும் அடையாளங்காண்பதற்காக, ILO நெருக்கமாகப் பணியாற்றும்.

### பரிந்துரைத்தல் மற்றும் தொடர்பாடல் மூலோபாயம்

கொள்கை மாற்றம், விழிப்புணர்வைத் தூண்டுதல், பங்குதாரர்களது உருவாக்கமும் வளங்களைச் சேர்த்தலும் ஆகிய மூன்று பரிந்துரைத்தல் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள் பற்றிய இலக்குகள் உள்ளன. எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர், ஊடகங்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள், தனியார் துறையினர், ஆராய்ச்சியில் ஈடுபடுவோர், பல்கலைக்கழகச் சமூகம், சிவில் சமூகங்கள், அபிவிருத்திப் பங்காளர்கள் ஆகியோருக்கு கண்ணியமான தொழில் பற்றிய நிகழ்ச்சிநிரலையும், DWCP பற்றியும் வினைத்திறனாகப் பரிந்துரைத்தலும் அவர்களுடனான தொடர்பாடலும் மிகவும் முக்கியமானவை. இவ்வகையில் உரிய ஆய்வுகள், சிறந்த செயற்பாடுகளும் வெற்றிகரமான சம்பவங்களும் போன்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட பரிந்துரைகளானவை, கண்ணியமான வேலை பற்றிய கோட்பாடுகளைப் பற்றிய விரிவான விளக்கங்களை உருவாக்குவதற்கு மிகவும் வினைத்திறனான வழிவகைகளாக இருக்கும்.

பயன்படுத்தப்படும் மூலோபாயங்களில் சில பின்வருமாறு: கொள்கைகள் பற்றிய சுருக்கங்கள், கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்தும் சிறந்த செயன்முறைகளிலிருந்தும் பெறப்பட்ட விடயங்கள், காலாண்டுக்கான இலத்திரனியல் செய்திக் கடிதங்கள், நாளதுவரைப்படுத்தப்படும் இணையத் தளங்கள், உள்ளூர் மொழிகளிலான ஏனைய சமூக வலைத்தளக் கருவிகள் ஆகியன. இது ILO மற்றும் அதன் DWCP ஆகியன பற்றி பொதுமக்களை விழிப்புணர்வூட்டுவதில் மிகுந்த பங்களிப்பை வழங்கும்.

ILO வின் இலங்கைக்கான அலுவலகம் அர்ப்பணிப்புள்ள தொடர்பாடல் குவிமையமொன்றைக் கொண்டுள்ளதுடன், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தின் கீழ் ஐ.நா. தொடர்பாடல் குழுவிடமிருந்து கற்றுக்கொள்வதுடன், அவர்களுக்கான பங்களிப்பையும் வழங்குகிறது. மேலும் அது, UN SDGஇன் ஓர் அங்கத்தவராக இருப்பதுடன், பாராளுமன்றத்தின் உப சபாநாயகரது தலைமையின் கீழுள்ள பாராளுமன்ற உப குழுவினூடாக SDG அமுலாக்கத்தை அறிமுகப்படுத்துவதிலும் ஈடுபடுகிறது.

# இணைப்பு 2: DWCP பெறுபேறுகளின் தாயம் (Matrix)

## DWCP முன்னுரிமை 1: நிலைபேறான, உள்ளார்ந்த மற்றும் கண்ணியமான தொழில்வாய்ப்பு உருவாக்கம்

**உரிய தேசிய அபிவிருத்தி முன்னுரிமை அத்துடன் / அல்லது UNSDF விளைவு**

**SDG**

குறிக்கோள் 1 : ஒவ்வோர் இடத்திலும் எல்லா வடிவங்களிலும் காணப்படும் வறுமையை ஒழித்தல்
குறிக்கோள் 5 : பால் சமத்துவத்தை எய்தி, எல்லாப் பெண்களையும் சிறுமிகளையும் பலப்படுத்துதல்
குறிக்கோள் 8 : உள்ளார்ந்த மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் எல்லோருக்கும் கண்ணியமான வேலை
குறிக்கோள் 10 : நாடுகளுக்குள்ளும் நாடுகளிடையேயும் சமத்துவமின்மையைக் குறைத்தல்

**UNSDF**

இயக்கி 1 : மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கைகள் ஆகியவற்றை நோக்கி
இயக்கி 2 : பலப்படுத்தப்பட்ட, புத்தாக்கமுடைய அரச நிறுவனங்களும் நிலைத்த சமாதானத்தை நோக்கிய செயற்பாடுகளும்
இயக்கி 3 : மனிதப் பாதுகாப்பும், சமூக-பொருளாதார மீளுருவாக்கமும்
இயக்கி 4 : காலநிலை மாற்றங்களிலிருந்தும் அனர்த்தங்களிலிருந்தும் மீளுருவாக்கத்தை உயர்த்துதல், சுற்றுச்சூழல் முகாதைத்துவத்தைப் பலப்படுத்துதல்

### DWCP விளைவு 1.1:
### இலங்கைத் தொழிற்படைக்கு மேலும் அதிகமான, சிறந்த தொழில் வாய்ப்புகள் காணப்படும்

| | | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD) | |
|---|---|---|---|
| பங்காளர்கள் | கல்வி அமைச்சு; திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு; வெகுசன ஊடக அமைச்சு; தொழில்நுட்ப நிறுவனங்கள் EFC & Affiliated BMOs; தனியார் துறையினர்; மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் (DOME); தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு; தொழிற் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம்; இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்; மலைநாட்டு உட்கட்டமைப்பு அமைச்சு; பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில்கள் அமைச்சு; தொழிற் சங்கங்கள் பிரதம மந்திரி அலுவலகம்; சமூக நலன்புரி அமைச்சு; பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு; தொழில் திணைக்களம்; சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SME) அமைச்சு; தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை; வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு; இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்; தொழிற் பயிற்சி அதிகாரசபை; பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் (NAITA / TVEC); முற்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள்; பல்கலைக்கழகங்கள் வணிகக் கழகங்கள் / நிறுவனங்கள் | **கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது**<br><br>$ 4 மில்லியன் | **பெறப்பட வேண்டியது**<br><br>$ 6.1 மில்லியன் |

| | | |
|---|---|---|
| SDG குறிகாட்டி 5.5.2 முகாமைத்துவ நிலைகளில் பெண்களின் விகிதாசாரம் | அடிப்படை:<br>28.4% (LFS, DCS 2016) | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 8.5.1 தொழில், வயது, மாற்றுத்திறனுடையோர் ரீதியாக, பெண் மற்றும் ஆண் ஊழியர்களது சராசரி மணித்தியாலச் சம்பாத்தியம் | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 8.5.2 பால், வயது, மாற்றுத்திறனுடையோர் ரீதியாக, வேலையற்றோர் வீதம் | அடிப்படை (Current Situation) :<br>பெண் 7.0% (LFS 2016)<br>ஆண் 2.9 % (LFS 2016)<br>வயதுக்குழு<br>15-24 21.6%<br>25-29 9.2%<br>30-39 2.4%<br>40+ 0.8% (LFS 2016)<br>மாற்றுத்திறனுடையோர்: N/A | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 8.6.1: வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் இல்லாத இளைஞர்களது (15-24 வயதுகட்கிடையிலான) விகிதம் | அடிப்படை:<br>26.1% (LFS 2016) | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 10.2.1: பால், வயது, மாற்றுத்திறனுடையோர் ரீதியாக, 50 சதவீத இடைய (சராசரி) வருமானத்தின் கீழ் வசிக்கும் மக்களின் விகிதம் | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 10.4.1: GDPயில் தொழிலாளரது பங்களிப்பு | அடிப்படை:<br>27.1% (DCS இன் தேசியக் கணக்குகள் மீதான வருடாந்த மதிப்பீடுகள் -2015) | இலக்கு:<br>TBD |
| 13.3.1: ஆரம்ப, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை பாடத்திட்டங்களில் மட்டுப்படுத்தல், தழுவுதல், தாக்கத்தைக் குறைத்தல், முற்கூட்டிய எச்சரிக்கை ஆகியவற்றை ஒன்றிணைத்த நாடுகளின் எண்ணிக்கை | | |
| 13.3.2: தழுவுதல், தாக்கத்தைக் குறைத்தல், தொழில்நுட்பப் பரிமாற்றம், அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றை அமுல்படுத்துவதற்கான, நிறுவன ரீதியான, முறைமையான மற்றும் தனியாள் ரீதியான திறன் அபிவிருத்தி வலுவூட்டலை பரிமாறிக் கொள்ளும் நாடுகளின் எண்ணிக்கை | | |

| | | | |
|---|---|---|---|
| P&B குறிகாட்டி 1.2: பல்பக்க கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்கி அமுல்படுத்துவதனூடாக, இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் கண்ணியமான வேலை தொடர்பாக எடுக்கப்பட்ட,இலக்குவைக்கப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை | | | |
| மற்றையகுறிகாட்டி 1.1.1<br>பால் ரீதியாக தொழிற்படைப் பங்களிப்பு | | அடிப்படை:<br>ஆண் 75.1 % (LFS 2016)<br>பெண் 35.9% | இலக்கு:<br>TBD |
| DWCP விளைவு 1.2:<br>தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கும் மக்களுக்கான ஏனைய சந்தை உற்பத்திக் கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்கான தேசிய மூலோபாயம் | | | |
| பங்காளர்கள் | திறன்கள் அபிவிருத்தி அமைச்சு; பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு; வெகுசன ஊடக அமைச்சு; தொழில் அமைச்சு; தொழில் திணைக்களம் SLBFE; வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு; EFC; TU; IFC; பொது நிர்வாக அமைச்சு; மாற்றுத் திறனுடையோருடன் வேலை செய்யும் குழுக்கள் மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்; சமூக நலன்புரி அமைச்சு; சமூக சேவைகள் திணைக்களம்; மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு; உள்ளூராட்சி அதிகார சபைகள்; மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB); நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA); பிரதம மந்திரி அலுவலகம் தேசிய ஏற்றுமதியாளர் கழகம் EFC உடன் இணைந்த பிராந்திய வணிகர் கழகங்கள் FCCISL; கைத்தொழில், வர்த்தக அமைச்சு; ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சு; மாவட்டச் செயலகங்கள் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு; சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டியப் பாரம்பரிய அமைச்சு; மாகாண மட்ட நிறுவனங்கள் BOI; சுற்றுச்சூழல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு; உலக வங்கியும் ADBயும் சக்திவள மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு; தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அரசாங்கம் - கல்வி / உயர்கல்வி / திறன்கள் அபிவிருத்தி / பெண்கள் விவகாரம் | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD)<br><br>கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது<br>$30,000 | பெறப்பட வேண்டியது<br>$ 351,620 |
| SDG குறிகாட்டிகள் | | | |
| SDG குறிகாட்டி 4.4.1: தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் (ICT) திறன் மிக்க இளைஞரதும் வயதானோரதும் விகிதாசாரங்களும், திறன்களின் வகைகளும் | | அடிப்படை:<br>மொத்தம் 27.6%<br>இளைஞர் (15- 24) 58.8 %<br>வயதானோர் (25-69) 20.4% | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 7.1.2. சுத்தமான எரிபொருட்களையும் தொழில்நுட்பத்தையும் நம்பியிருக்கும் சனத்தொகை விகிதாசாரம் | | அடிப்படை:<br>19.31% (உலக வங்கி 2013) | இலக்கு:<br>TBD |

| | | |
|---|---|---|
| SDG குறிகாட்டி 8.2.1. தொழிலிலுள்ள ஒவ்வொரு ஆளுக்கும் உரிய,GDP இன் வருடாந்த வளர்ச்சி வீதம் | அடிப்படை:<br>4. 67% (உலக வங்கி 2016- 2017) | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 9.c.1.கையடக்கத் தொலைபேசி வலையமைப்பையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் சனத்தொகை விகிதாசாரம் | அடிப்படை:<br>123.7% (2016 December TRC Sri Lanka) | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 14.A.1. கடல் தொழில்நுட்பத்துறைக்கு ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டதன் மொத்த ஆராய்ச்சி வரவுசெலவுகளின் விகிதாசாரம் | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 1.3: திறன் அபிவிருத்தி முறைமைகள், பொருத்தமற்ற திறன்களைக் குறைப்பதற்கான மூலோபாயங்களும் செயற்றிட்டங்களும், தொழிற்சந்தை அணுகலை உயர்த்துதல் ஆகியவற்றுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 10.3: கொள்கை வகுத்தலில் செல்வாக்குச் செலுத்துவதற்காக, அரசாங்கத்துடனும் மற்றைய அமைப்புகளுடனும் தொழில்கொள்வோரது அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகளின் / நடவடிக்கைகளின் எண்ணிக்கை | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 10.5.: சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் செல்வாக்கு செலுத்த தொழில் கொள்வோரது அமைப்புகளினால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரேரணைகளின் எண்ணிக்கை | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 10.5.3: சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் செல்வாக்கு செலுத்த பல்தரப்புக் கட்டமைப்புகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு தொழிலாளர் அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரேரணைகளின் எண்ணிக்கை | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |

DWCP முன்னுரிமை 2: தொழிற் சந்தையின் சிறந்த ஆளுகை

உரிய தேசிய அபிவிருத்தி முன்னுரிமை மற்றும் / அல்லது UNSDF விளைவு

SDGs

குறிக்கோள் 8 : உள்ளார்ந்த மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் எல்லோருக்கும் கண்ணியமான வேலை

குறிக்கோள் 10 : நாடுகளுக்குள்ளும் நாடுகளிடையேயும் சமத்துவமின்மையைக் குறைத்தல்

குறிக்கோள் 16 : ஒப்புரவான, சமாதானமான மற்றும் உள்ளார்ந்த சமூகங்களை ஊக்குவித்தல்

UNSDF

இயக்கி 1 : மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கைகள் ஆகியவற்றை நோக்கி

இயக்கி 2 : பலப்படுத்தப்பட்ட, புத்தாக்கமுடைய அரச நிறுவனங்களும் நிலைத்த சமாதானத்தை நோக்கிய செயற்பாடுகளும்

இயக்கி 3 : மனிதப் பாதுகாப்பும், சமூக-பொருளாதார மீளுருவாக்கமும்

இயக்கி 4 : காலநிலை மாற்றங்களிலிருந்தும் அனர்த்தங்களிலிருந்தும் மீளுருவாக்கத்தை உயர்த்துதல், சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தைப் பலப்படுத்துதல்

| | | | |
|---|---|---|---|
| DWCP விளைவு 2.1:<br>நிறுவனமயப்படுத்தப்பட்டதும் செயற்படும் தன்மையுடையதுமான, சமூகக் கலந்துரையாடலுக்கான மற்றும் முத்தரப்பிற்கான பயனுறுதிமிக்க முறைமைகள். | | | |
| பங்காளர்கள் | அரசாங்கம் தொழில்கொள்வோர்; தொழிலாளர் சம்பளச்சபைகள்; MOL; நீதி அமைச்சு; சட்ட வரைஞர் திணைக்களம்; பொது நிர்வாக அமைச்சு; பொதுத்துறை ஆணைக்குழு; தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு; முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்; தொழில் அமைச்சு; சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழு; பொது சேவைகள் ஆணைக்குழு. | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD)<br>கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது $25,000 | பெறப்பட வேண்டியது $ 475,000 |
| SDG குறிகாட்டிகள் | | | |
| SDG குறிகாட்டி 8.3.1. பால் ரீதியாக, விவசாயம் அல்லாத வேலைகளில் முறைசாராத் தொழில்வாய்ப்பினது விகிதாசாரம் | | அடிப்படை:<br>50.1% ( LFS 2016 ) பால் ரீதியாக கிடைக்கவில்லை | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| SDG குறிகாட்டி 10.4.1: மொத்த உள்நாட்டு (GDP) யில் தொழிலாளரதுபங்களிப்புஇ சம்பளங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு இடமாற்றங்களை உள்ளடக்கியது. | | அடிப்படை:<br>54% ( UN 2012) | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| SDG குறிகாட்டி 16.7.2:பால், வயது, மாற்றுத்திறன் மற்றும் குழுக்கள் ரீதியாக, தீர்மானம் எடுத்தலானது உள்ளார்ந்தது மற்றும் பொறுப்பானது என நம்புகின்ற சனத்தொகையின் விகிதாசாரம் | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| P&B குறிகாட்டி 1.5: தொழில் உறவுகள், தொழிற்சந்தை நிறுவனங்கள் மற்றும் வேலை நிபந்தனைகள் மேம்படுத்தப்படுவதற்காக கொள்கைகளை, செயற்றிட்டங்களை அல்லது வேறு நடவடிக்கைகளை உருவாக்குகிற அல்லது தழுவிக்கொள்கிற அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| P&B குறிகாட்டி 7.3:சமத்துவமின்மையையும், வேலைத்தல இணக்கங்களையும் குறிப்பாக, உலக விநியோகச் சங்கிலித் தொடரில் முத்தரப்புச் சமூகக் கலந்துரையாடலுக்கான, கூட்டுப் பேரம்பேசலுக்கான, தொழில் உறவுகளுக்கான நிறுவனங்களை உருவாக்கிப் பலப்படுத்தியுள்ள அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| மற்றைய குறிகாட்டிகள் | | | |

| | | | |
|---|---|---|---|
| பால் சமத்துவத்திற்குச் சாதகமான கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கு ∴ உருவாக்குவதற்குசமூகப் பங்காளர்களுடனான அரசாங்கத்தின் கலந்துரையாடல்கள் (reference to 1.5) | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| சமத்துவமின்மை, வேலைத்தல இணக்கம் ஆகியவற்றுக்குப் பதிலளிப்பதற்கான சமூகக் கலந்துரையாடல் பொறிமுறைக்கான சான்று (reference to 7.3) | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>கிடைக்கவில்லை |
| DWCP விளைவு 2.2:<br>மேலும் வினைத்திறனான வேலைத்தலப் பரிசோதனையுடனான மேலும் பயனுறுதி வாய்ந்த தொழில் நிர்வாக முறைமை | | | |
| பங்காளர்கள் | மற்றைய பங்குதாரர்களின் கலந்தாலோசனைகளுடன் அரசாங்கம் | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD) | |
| | | கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது<br>$ 20,000 | பெறப்பட வேண்டியது<br>$ 350,575 |
| SDG குறிகாட்டிகள் | | | |
| SDG குறிகாட்டி 8.8.2. பால் மற்றும் புலம்பெயர்ந்தோர் ரீதியான, சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) கட்டுரை அடிப்படையிலான மற்றும் தேசிய சட்டத்தின் அடிப்படையிலான, தொழிலாளர் உரிமைக்கான (ஒன்றுசேரும் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம்பேசல்) தேசிய இணக்கப்பாட்டின் நிலை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 1.5: தொழில் உறவுகள், தொழிற்சந்தை நிறுவனங்கள் மற்றும் வேலை நிபந்தனைகள் மேம்படுத்தப்படுவதற்காக கொள்கைகளை, செயற்றிட்டங்களை அல்லது வேறு நடவடிக்கைகளை உருவாக்குகிற அல்லது தழுவிக்கொள்கிற அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| மற்றைய குறிகாட்டிகள் | | | |
| செயற்றிறன் மிக்க தொழில் நிர்வாகத்திற்கான மேம்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்பும் மனிதவளங்களும் (P&B 7.2.2) பண்புசார். | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| DWCP விளைவு 2.3: | | | |

| புதிய பரிணாமங்களுக்குட்பட்ட பல்வித வேலை வடிவங்களுக்கு ஏற்ற வகையில் சட்டங்களும் கொள்கைகளும் நவீனமயப்படுத்தப்படல் | | | |
|---|---|---|---|
| பங்காளர்கள் | அரசாங்கம் தனியார் சட்ட நிறுவனங்கள் WB; ADB; தொழில் திணைக்களம் EFC/அதனோடு சேர்ந்த வணிக அங்கத்துவ நிறுவனங்கள்தொழிற் சங்கங்கள்ஊடகங்கள்நீதி அமைச்சு பிராந்திய வர்த்தகக் கழகங்கள் | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD) | |
| | | கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது<br>$ 25,000 | பெறப்பட வேண்டியது<br>$ 225,000 |
| SDG குறிகாட்டிகள் | | | |
| SDG குறிகாட்டி8.8.2.பால் மற்றும் புலம்பெயர்ந்தோர் ரீதியான, சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) கட்டுரை அடிப்படையிலான மற்றும் தேசிய சட்டத்தின் அடிப்படையிலான, தொழிலாளர் உரிமைக்கான (ஒன்றுசேரும் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம்பேசல்) தேசிய இணக்கப்பாட்டின் நிலை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 7.2: தேசிய தொழிற் சட்டங்களுடனும் கூட்டு ஒப்பந்தங்களுடனும்இணைந்துவேலைத்தல இணக்கத்தை உறுதிப்படுத்துதற்காக, தமது சட்டங்களை, ஒழுங்குவிதிகளை, கொள்கைகளை அல்லது மூலோபாயங்களை உருவாக்கிய அல்லது மீளமைத்த, அல்லது தமது நிறுவனங்களின் அல்லது முறைமைகளின் திறன்களை மேம்படுத்திய அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| மற்றைய குறிகாட்டிகள் | | | |
| முத்தரப்பு கலந்தாலோசனையூடாக, திருத்தப்பட்ட தொழிற் சட்டங்களின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| விடையளிக்கும் பொறிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்ட கடமையைச் செய்யும் அதிகாரிகளின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| DWCP முன்னுரிமை 3: எல்லோருக்கும் தொழிலில் உரிமைகள் | | | |
| உரிய தேசிய அபிவிருத்தி முன்னுரிமை மற்றும் /அல்லது UNSDF விளைவு<br>SDG<br>குறிக்கோள் 1 : ஒவ்வோர் இடத்திலும் எல்லா வடிவங்களிலும் காணப்படும் வறுமையை ஒழித்தல்<br>குறிக்கோள் 8 : உள்ளார்ந்த மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் எல்லோருக்கும் கண்ணியமான வேலை<br>குறிக்கோள் 10 : நாடுகளுக்குள்ளும் நாடுகளிடையேயும் சமத்துவமின்மையைக் குறைத்தல் | | | |

UNSDF

| | | |
|---|---|---|
| இயக்கி 1 | : | மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கைகள் ஆகியவற்றை நோக்கி |
| இயக்கி 2 | : | பலப்படுத்தப்பட்ட, புத்தாக்கமுடைய அரச நிறுவனங்களும் நிலைத்த சமாதானத்தை நோக்கிய செயற்பாடுகளும் |
| இயக்கி 3 | : | மனிதப் பாதுகாப்பும், சமூக-பொருளாதார மீளுருவாக்கமும் |
| இயக்கி 4 | : | காலநிலை மாற்றங்களிலிருந்தும் அனர்த்தங்களிலிருந்தும் மீளுருவாக்கத்தை உயர்த்துதல், சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தைப் பலப்படுத்துதல் |

DWCP விளைவு 3.1: சிறுவர் தொழிலையும் அதன் மோசமான வடிவத்தையும் ஒழித்தல்

| | | | |
|---|---|---|---|
| பங்காளர்கள் | MoL; மாவட்டச் செயலகங்கள் மாவட்டச் செயலகங்களுள் செயற்படும் எல்லா அமைச்சுக்களினதும் முகவர்கள் DoL; மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் (DCDC); NCPA; சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்நடத்தைத் திணைக்களம் MoE; MDOs; EFC; TUs; சமூக சேவைகள் திணைக்களம்; பொலிஸ் திணைக்களம்; பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு; தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் (DCS). | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD)<br>கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது<br>USD 0.00 | <br>பெறப்பட வேண்டியது மதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளது |

| | | |
|---|---|---|
| SDG குறிகாட்டிகள் | | |
| SDG குறிகாட்டி 8.7.1. பால், வயது ரீதியாக, சிறுவர் தொழிலில் ஈடுபட்டுள்ள 5-17 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை விகிதாசாரம் | அடிப்படை:<br>43,714 (CAS 2016 DCS)<br>பையன்கள்: 32,402<br>சிறுமிகள்: 11,311<br>5-11: 3,002<br>12-14: 5,264<br>15-17: 35,447<br>(CAS 2016 DCS) | இலக்கு:<br>TBD |
| P& B குறிகாட்டி 8.3: தொழில்களின் ஏற்றுக்கொள்ள இயலாத வடிவங்களில், குறிப்பாக மிகவும் பாதிப்புறத்தக்க நிலைமைகளில், தொழிலாளர்களின் செயற்றிறன்மிக்க பாதுகாப்புக்காக, மற்றைய பங்குதாரர்களுடன் சேர்ந்து, முத்தரப்பினரால் உருவாக்கப்படும் பங்களிப்பைக் கொண்டுள்ள அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| மற்றைய குறிகாட்டிகள் | | |
| அபாயகரமான சிறுவர் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் விகிதாசாரம் | அடிப்படை:<br>39,007 (CAS 2016 DCS ) | இலக்கு:<br>TBD |
| ஆகக்குறைந்த வயது தொடர்பான புதிய சட்டம் | அடிப்படை:<br>14 years | இலக்கு:<br>16 years |
| 2022 அளவில் சிறுவர் தொழிலின் பூச்சிய அளவு | அடிப்படை:<br>43,714 ( CAS 2016 DCS ) | இலக்கு:<br>Elimination |

| DWCP விளைவு 3.1: சிறுவர் தொழிலையும் அதன் மோசமான வடிவத்தையும் ஒழித்தல் | | | |
|---|---|---|---|
| பங்காளர்கள் | தொழில் அமைச்சு, தொழிலாளர்; தொழில்கொள்வோர்; TU; SLBFE; MoJ ; MFE; சட்ட மா அதிபதி திணைக்களம்; சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள்; TAF; National; பாதுகாப்பான புலம்பெயர்வு நிகழ்ச்சித்திட்ட அங்கத்தவர்கள்; SLBFE; ஆட்சேர்ப்பு முகவர்கள் / அமைப்புகள் மற்றும் ஆட்சேர்ப்பு இடைத்தரகர்கள்; திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு; TVEC; VTA; NAITA' வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு; ஊழியர்கள் மனிதவளத் திணைக்களம் (PESC); பிராந்திய வணிகர் கழகங்கள்; MDOs; other CSO actors; தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு. | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD) | |
| | | கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது $ 2.1 மில்லியன் | பெறப்பட வேண்டியதுமதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளது |
| SDG குறிகாட்டிகள் | | | |
| SDG குறிகாட்டி 8.8.1.பால், புலம்பெயர்அந்தஸ்து ரீதியாக, மரணம் விளைவித்த அல்லது விளைவிக்காத தொழில்சார் காயங்களின் மீடிறன் வீதம் | | அடிப்படை: கிடைக்கவில்லை | இலக்கு: TBD |
| SDG குறிகாட்டி 10.7.1. வேலைசெய்யும் நாட்டில் சம்பாதிக்கும் வருடாந்த வருமானத்தின விகிதாசாரமாக ஊழியரால் செலுத்தப்படும் ஆட்சேர்ப்புக் கட்டணம் | | அடிப்படை: கிடைக்கவில்லை | இலக்கு: TBD |
| SDG குறிகாட்டி 10.c.1. அனுப்பப்படும் தொகையின் விகிதாசாரமாக அனுப்புவதற்கான செலவுகள் | | அடிப்படை: கிடைக்கவில்லை $200அனுப்புவதற்கான அனுப்பும் செலவு (2015) UAE – இலங்கை, 3.4% (உலக வங்கி) சுவிட்சர்லாந்து – இலங்கை, 45.0% (உலக வங்கி) | இலக்கு: TBD |
| P&B குறிகாட்டி 9.1:நியாயமான தொழிலாளர் புலம்பெயர் கொள்கைகள், சட்டங்கள், புலம்பெயர் தொழிலாளர்களது மற்றும் வெளிநாடுகளில் தொழில்புரிவோரது பாதுகாப்பை மேம்படுத்தும் இருதரப்பு அல்லது பல்தரப்பு உடன்பாடுகள் ஆகியவற்றை உருவாக்கிய அல்லது ஏற்றுக்கொண்ட அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை, செயற்படும் தொழிற்சந்தைகள். | | அடிப்படை: TBD | இலக்கு: TBD |
| மற்றைய குறிகாட்டிகள் | | | |
| முறைப்பாடுகளை முன்வைக்கும் புலம்பெயர் தொழிலாளர் குறைவடையும் விகிதாசாரம் | | அடிப்படை: கிடைக்கவில்லை | இலக்கு: TBD |

| | | | |
|---|---|---|---|
| சம்பளங்களின் விகிதாசாரமாக புலம்பெயர் கட்டணங்கள் குறைவடைதல் (SDG 10.7.1) | | அடிப்படை:<br>கிடைக்கவில்லை | இலக்கு:<br>TBD |
| DWCP விளைவு 3.3:<br>முறைசாரா வேலையாட்களுக்கு விசேட கவனத்துடன், எல்லா வேலையாட்களுக்குமான மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு | | | |
| பங்காளர்கள் | தொழில் அமைச்சும் தொழில் திணைக்களமும்; நிதி அமைச்சு; EPF; மத்திய வங்கி; TUs; EFC; உலக வங்கி தேசிய திட்டமிடல் அமைச்சு; ETF சபை; சமுர்த்தித் திணைக்களம்; சமூக நலன்புரித் திணைக்களம்; வீட்டு வேலையாளர்களின் சங்கம்; Care Lanka | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD) | |
| | | கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது<br>USD 0.00 | பெறப்பட வேண்டியது மதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளது |
| SDG குறிகாட்டிகள் | | | |
| SDG1.3.1. | | அடிப்படை:<br>ஆண் 33.5%<br>பெண் 34.9%<br>பிள்ளைகள் 33.6%<br>தொழிலற்றோர்<br>வயதானோர் 44.7%<br>ஆண் 41.9%<br>பெண் 46.4%<br>புதிதாகப் பிறந்தோர் 34.8%<br>(2012/2013 HIES, DCS) | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 1.a.2.அத்தியாவசிய சேவைகள் மீது (கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு), அரசாங்க மொத்தச் செலவினத்தின் விகிதாசாரம் | | அடிப்படை:<br>TBD | இலக்கு:<br>TBD |
| SDG குறிகாட்டி 8.3.1.பால் ரீதியாக, விவசாயம் அல்லாத வேலைகளில் முறைசாராத் தொழில்வாய்ப்பினது விகிதாசாரம் | | அடிப்படை:<br>TBD | இலக்கு:<br>TBD |
| P&B குறிகாட்டி 3.1:புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட தேசியமட்ட சமூகப் பாதுகாப்பு மூலோபாயங்களை, கொள்கைகளை, அல்லது சட்டக் கட்டமைப்புகளை, அதனால் உள்ளடக்கப்படுவோரை அதிகரிப்பதற்காக அல்லது நன்மைகளை உயர்த்துவதற்காக,தழுவியஅங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை | | அடிப்படை:<br>TBD | இலக்கு:<br>TBD |

| மற்றைய குறிகாட்டிகள் | | |
|---|---|---|
| அதனால் உள்ளடக்கப்படுவோரை அதிகரிப்பதற்கான அல்லது நன்மைகளை உயர்த்துவதற்கானபுதிய அல்லது மேம்படுத்தப்பட்ட தேசியமட்ட சமூகப் பாதுகாப்பு மூலோபாயங்கள், கொள்கைகள், அல்லது சட்டக் கட்டமைப்புகள் | அடிப்படை:<br>TBD | இலக்கு:<br>TBD |
| ஊழியர் சேமலாப நிதியத்தில் சேருபவர்களது வருடாந்த சராசரி உயர்வு (EPF) | அடிப்படை:<br>TBC with EPF | இலக்கு:<br>TBD |
| ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் சேருபவர்களது வருடாந்த சராசரி உயர்வு (ETF) | அடிப்படை:<br>TBC with ETF | இலக்கு:<br>TBD |

DWCP குறுக்கு வெட்டு முன்னுரிமை 4: பாரிய தரவு மற்றும் அறிவின் உருவாக்கம்

DWCP இயலுமான விளைவு 4.1:
தொழிற் சந்தை தகவல்ளை, சான்று அடிப்படையிலான கொள்கைக்காகப் பலப்படுத்துதல்

உரிய தேசிய அபிவிருத்தி முன்னுரிமை மற்றும் / அல்லது UNSDF விளைவு
SDG
குறிக்கோள் 8 : உள்ளார்ந்த மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் எல்லோருக்கும் கண்ணியமான வேலை
குறிக்கோள் 17 : நிலைபேறான அபிவிருத்திக்காக உலகப் பங்களிப்பை மீளப்புதுப்பித்தல்

UNSDF
இயக்கி 1 : மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கைகள் ஆகியவற்றை நோக்கி
இயக்கி 2 : பலப்படுத்தப்பட்ட, புத்தாக்கமுடைய அரச நிறுவனங்களும் நிலைத்த சமாதானத்தை நோக்கிய செயற்பாடுகளும்
இயக்கி 3 : மனிதப் பாதுகாப்பும், சமூக-பொருளாதார மீளுருவாக்கமும்
இயக்கி 4 : காலநிலை மாற்றங்களிலிருந்தும் அனர்த்தங்களிலிருந்தும் மீளுருவாக்கத்தை உயர்த்துதல், சுற்றுச்சூழல் முகாதைத்துவத்தைப் பலப்படுத்துதல்

| பங்காளர்கள் | DCS; தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு; நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனவிலங்குகள் அமைச்சு; UNSDF driver leads; பிராந்திய வணிகர் கழகங்கள்; ஆராய்ச்சி நிறுவனங்கள் (உ-ம்: கொள்கை மீதான கற்கைகள் நிறுவகம், வறுமை தொடர்பான ஆய்வு நிலையம்); பல்கலைக்கழகங்கள்; நிதி வழங்கும் முகவர்கள்; தொழிற்சங்கங்கள் EFC | ஒன்றிணைக்கப்பட்ட வளக் கட்டமைப்பு (USD) | |
|---|---|---|---|
| | | கிடைக்கத்தக்கதென மதிப்பிடப்பட்டது<br>USD 20,000 | பெறப்பட வேண்டியது<br>USD 350,000 |

| SDG குறிகாட்டிகள் | |
|---|---|
| 1.3.1 | பால், அடையாளங்காணப்படும் பிள்ளைகள், தொழிலற்றோர், வயதானோர், மாற்றுத்திறனுடையோர், கர்ப்பிணிகள், புதிதாகப் பிறந்தோர், காயமடைந்தோர், வறுமைப்பட்டோர், பாதிப்புக்குள்ளாகுவோர் ரீதியாக, சமூகப் பாதுகாப்பு முறைமைகளால் உள்ளடக்கப்படும் சனத்தொகை விகிதாசாரம் |
| 5.5.2 | முகாமைத்துவ நிலைகளில் பெண்களின் விகிதாசாரம் |
| 8.2.1 | தொழிலிலுள்ள ஒவ்வொரு ஆளுக்கும் உரிய, GDP இன் வருடாந்த வளர்ச்சி வீதம் |
| 8.3.1 | பால் ரீதியாக, விவசாயம் அல்லாத வேலைகளில் முறைசாராத் தொழில்வாய்ப்பினது விகிதாசாரம் |
| 8.5.1 | தொழில், வயது, மாற்றுத்திறனுடையோர் ரீதியாக, பெண் மற்றும் ஆண் ஊழியர்களது சராசரி மணித்தியாலச் சம்பாத்தியம் (கிடைக்கவில்லை) |
| 8.5.2 | பால்,வயது, மாற்றுத்திறனுடையோர் ரீதியாக, வேலையற்றோர் வீதம் |
| 8.6.1 | வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் இல்லாத இளைஞர்களது (15-24 வயதுகட்கிடையிலான) விகிதம் |
| 8.7.1 | பால், வயது ரீதியாக, சிறுவர் தொழிலில் ஈடுபட்டுள்ள 5-17 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை விகிதாசாரம் |
| 8.8.1 | பால், புலம்பெயர் அந்தஸ்து ரீதியாக, மரணம் விளைவித்த அல்லது விளைவிக்காத தொழில்சார் காயங்களின் மீடிறன் வீதம் (கிடைக்கவில்லை) |
| 8.8.2 | பால் மற்றும் புலம்பெயர்ந்தோர் ரீதியான, சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) கட்டுரை அடிப்படையிலான மற்றும் தேசிய சட்டத்தின் அடிப்படையிலான, தொழிலாளர் உரிமைக்கான (ஒன்றுசேரும் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம்பேசல்) தேசிய இணக்கப்பாட்டின் நிலை |
| 8.9.1. | தேசிய வரவுசெலவுத் திட்டத்தினதும் GDP இனதும் விகிதாசாரமாக சமூகப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றில் அரசாங்கத்தின் செலவுகள் |
| 10.4.1 | GDPயில் தொழிலாளரது சம்பளங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் உள்ளடக்கிய பங்களிப்பு |

# ANNEX 03

## DWCP செயன்முறையும் காலவரிசையும்

| திகதி | நிகழ்வு |
|---|---|
| 31 ஜுலை-11 ஆகஸ்ட் 2017 | கண்ணியமான வேலைக்கான நாட்டின் செயற்றிட்டத்தைத் திட்டமிடுவதற்காக ILO பதவியணியினர் ஒன்றுகூடுதல் |
| 31 ஜுலை-11 ஆகஸ்ட் 2017 | கண்ணியமான வேலைக்கான நாட்டின் செயற்றிட்டம் (DWCP) 2013-2017 மீளாய்வு |
| 11 ஆகஸ்ட் 2017 | DWCP 2013-17 மீளாய்விலிருந்தான கண்டுபிடிப்புகளின் முன்வைப்பு |
| 12 செப்தெம்பர் 2017 | அரசாங்கத்துடனான தனிப்பட்ட ஆலோசனை |
| 14 செப்தெம்பர் 2017 | தொழிற்சங்கங்களுடனான தனிப்பட்ட ஆலோசனை |
| 15 செப்தெம்பர் 2017 | தொழில்கொள்வோருடனான தனிப்பட்ட ஆலோசனை |
| 6-15 செப்தெம்பர் 2017 | மாவட்ட ரீதியான ஆலோசனைகள்<br>கம்பஹா, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மொனராகலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி |
| 18 செப்தெம்பர் 2017 | ஐ.நா. மற்றும் அபிவிருத்திக்கான பங்காளிகளுடன் ஆலோசனை |
| 22-23 செப்தெம்பர் 2017 | முத்தரப்பு மீளாய்வும் ஒத்திசைவு பற்றிய ஆலோசனையும், நீர்கொழும்பு |
| 16-17 ஒக்தோபர் 2017 | DWCPஇன் கலந்தாராயும் குழுவால் ஒத்திசைவு வேலையரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேற்று அட்டவணையின் மீளாய்வு |
| 13 நொவெம்பர் 2017 | பெறுபேற்று அட்டவணையின் சரிபார்ப்பு இரண்டாவது சுற்று – தொழிற்சங்கங்களுடன் |
| 21 நொவெம்பர் 2017 | பெறுபேற்று அட்டவணையின் சரிபார்ப்பு இரண்டாவது சுற்று – அரசாங்கத்துடன் |
| 24 நொவெம்பர் 2017 | பெறுபேற்று அட்டவணையின் இறுதிச் சரிபார்ப்பு – முத்தரப்பினருடனும் |
| 25-18 டிசெம்பர் 2017 | புதுடில்லியிலுள்ள, கண்ணியமான வேலைக்கான தெற்காசிய தொழில்நுட்ப உதவிக் குழுவிலுள்ள நிபுணர்களது உள்ளீடுகளுடன் ILO வின் உள்நாட்டு அலுவலகத்தால் DWCP வரைபைத் தயாரித்தல் |
| 19டி செம்பர் 2017 | DWCP வரைபை தரப்பினரிடையே அவர்களது கருத்துகளைப் பெறுவதற்காக விநியோகித்தல் |
| 16டி செம்பர் - 26 பெப்ருவரி | ILO தலைமை ஆலுவலகத்தினதும் பிராந்திய அலுவலகத்தினதும் தர மதிப்பீட்டுப் பொறிமுறை மீளாய்வும் உள்ளீடுகளும் |
| 29 மார்ச் 2018 | DWCP வரைபின் மீது தொழிற்சங்கங்களுடனான மூன்றாவது சுற்று ஆலோசனை |
| 2 ஏப்ரல் 2018 | DWCP வரைபின் மீது தொழிற்சங்கங்களுடனான நான்காவது சுற்று ஆலோசனை |
| 11-20 ஏப்ரல் 2018 | DWCP வரைபை DWCP செயலணிக் கூட்டுத் தலைமைகளுடன் சேர்ந்து முற்று முழுதாக்குதல் |
| 2 ஏப்ரல் 2018 | DWCP வரைபின் மீது தொழிற்சங்கங்களுடனான நான்காவது சுற்று ஆலோசனை |
| 11-20 ஏப்ரல் 2018 | DWCP வரைபை DWCP செயலணிக் கூட்டுத் தலைமைகளுடன் சேர்ந்து முற்றுமுழுதாக்குதல் |



Harmonisation and validation workshop, 22nd – 23rd September 2017, Negambo, Sri Lanka.









சர்வதேச தொழிலாளர் தாபனம்
இலங்கை, மாலைதீவுகள் நாடுகளுக்கான காரியாலயம்
202-204, பௌத்தாலோக மாவத்தை
கொழும்பு 7
ஸ்ரீலங்கா

தொலைபேசி: +94 11 259 2525 தொலைநகல்: +94 11 250 0865
மின்னஞ்சல்: colombo@ilo.org